ஸ்ரீ:

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

* ஆசார்ய ஜயந்தி மலர் *

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 OCT 1954

ஸம்புடம் 13

ஸஞ்சிகை 10

ஜய ஹூ

வர்ஷச்சந்தா ரூபாய் 3.

மலர் அணா எட்டு.

OCTOBER 1954



திருவேங்கடமுடையான்

SCANNED
25
225 / 4-54
N54.13-10
199551

ஸ்ரீ:

अखिलभुवनजन्मस्थेमभङ्गादिलीले
विनतविविधभूतव्रातरक्षैकदीक्षे ।
श्रुतिशिरसि विदीप्ते ब्रह्मणि श्रीनिवासे
भवतु मम परस्मिञ्छेमुषी भक्तिरूपा ॥

புரட்டாசித்திருவோணத்திலுங் திருக்கேட்டையிலும் அவதரித்த இரு ஆசார்யர்களையும் முன்னிட்டு ஸ்ரீவாஸ ஸ்ரீந்ருஸிம்ஹர்களுடைய திருவடித்தாமரைகளில் இந்த மலர் மிகுந்த பக்தி ச்ரத்தையுடன் ஸமர்ப்பிக்கப்படுகிறது.

இம்மாதம் ப்ரசுரிக்கப்பட்டிருக்கும் திருவேங்கடமுடையானுடையப்ளாக்குகளைக் கொடுத்துதவிய திருமலை திருப்பதிதேவஸ்தான ப்ரஸ் மானேஜரவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	288
2.	தேசிகமணியின் அவதார ரஹஸ்யம்	291
3.	புராணங்கொண்ட பூர்வாசார்யர்கள்	295
4.	வள்ளலை வாழ்த்தும் வரதாரியன்	300
5.	க்ஷீராப்தி க்ருஷ்ணன்	303
6.	தேசிகமஹோபகாரமும் நமது கடமையும்	310
7.	ஹம்ஸ ஸந்தேசம்	313
8.	வடிவழகரர்ந்த வண்தூப்புல் வள்ளல்	316
9.	பேரருள்ளாளனின் பேருதவி	318
10.	தேசிக தயோதயம்	320
11.	நமது கடமை	324
12.	பேருளாள பேராசிரிய ஸல்லாபம்	326
13.	தேசிகன் மேன்மை	329
14.	ஓரொன்று தானே	332
15.	ஸ்வாமி உகந்த ஸேவை	334
16.	செய்திகள்	337
17.	ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	340

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 OCT 1954
MADRAS



அத்திகிரி யருளாளன்

ஸ்ரீ யதோக்தகாரீ

ஸ்ரீ ஸுதர்சனாழ்வான்

199551



திருவட்டபுயகரத்தோன்

ஸ்ரீ ரகு வீரன்

ஆதிகுரு நரசிங்கன்

योगारंभत्वरितमनसो युष्मदैकान्त्ययुक्तं धर्मं प्राप्तुं प्रथममिह ये धारयन्ते धनायाम् ।
तेषां भूमे धनपतिगृहादम्बरादम्बुधेर्वा धारा निर्यान्त्यधिकमधिकं वाञ्छितानां वसूनाम् ॥

ஸ்ரீ கநகவல்லித்தாயார்



ஸ்ரீ வீரராகவஸ்வாமி

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன்

ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர
மஹாதேசிகன்

வெள்ளைப் பரிமுகத்தைப் போற்றும் தூப்புற் குலபதி

சித்திர விளக்கம்:

கலியில் ஸ்ரீநிவாஸனும் ஸ்ரீந்ருஸிம்ஹனும் ஸம்ரக்ஷகர்கள் என்று பெரியோர்கள் புகழும் எம்பெருமான்கள் ஆசார்யஜயந்திமலரில் முன் அட்டையில் ப்ரகாசிக்கிறார்கள். ஸ்ரீ தேசிகன் திருவேங்கடமுடையானின் தயையைப் போற்றி தயாஶதகம் என்னும் ஸ்தோத்ரத்திரத்தை அருளியிருக்கிறார். உள் படங்களின் விவரணம் பின்வருமாறு:—

முதலில் கரிகிரிமேனின்றனைத்துங்காக்கின்ற பேரருளாளன் ஸேவை ஸாதிக்கிறார். இவ்வெம்பெருமானிடம் அளவற்ற ப்ரேமைகொண்ட நம் தூப்புல் வள்ளல், வரதராஜ பஞ்சாஶத், அடைக்கலப்பத்து, அத்திகிரி மான்மியம், திருச்சின்னமாலை என்னும் ப்ரபந்தங்களை இயற்றி நமக்களித்திருக்கிறார்.

இரண்டாவது— பக்தன் சொன்னவண்ணம் செய்த பெருமானான யதோக்தகாரி நமக்கு அபயமளிக்கிறார். இவர் விஷயமாக வேகாஸேது [யதோக்தகாரி] ஸ்தோத்ரம் என்னும் ஸ்தோத்ரத்தை அருளியிருக்கிறார்.

மூன்றாவது— பரமதபங்கத்தில் அநுக்ரஹம் செய்தருளிய ஸ்ரீ ஸுதர்சனாழ்வான் விளங்குகிறார். இவர் விஷயமாக ஸுதர்சனாஷ்டகம், ஷோடசாயுதஸ்தோத்ரங்களை இயற்றியுள்ளார்.

நான்காவது— திருவெஃகாவில் திருவட்டபுயகரம் [அஷ்டபுஜம்] எம்பெருமான் அழகிய கோலத்துடன் ஸேவை ஸாதிக்கிறான். இவ்வெம்பெருமான் விஷயமாக அஷ்டபுஜாஷ்டகம் என்று எட்டு ச்லோகங்கள் கொண்ட ஸ்தோத்ரத்தைச் செய்தருளியுள்ளார்.

ஐந்தாவது— திருவயிந்தை மாநகரில் கோயில்கொண்டுள்ள ஸ்ரீ ரகுவீரன் ஸீதாதேவியுடனும், இளையபெருமாளுடனும் கோதண்டமண்டிதகரனாய் கருணாமூர்த்தியாய் விளங்குகிறார். இவர் விஷயமாக ரகுவீரகத்யம் என்கிற கத்யத்தை ஸாதித்து மங்களாசாஸநம் செய்தருளியுள்ளார்.

அடுத்தபடியாக ஆதிமறையுருவான ஆதிப்புள் வெற்பதனில் உலகெலாம் ஸுகம் பெறவே வந்துதித்த ஆதி குரு நரசிங்கன், மாமலராள் மன்னியுறைமடியுடையனாய் பக்த பரிபாலனத்திற்காக ஸங்கல்பித்துக்கொண்டு, திருவடியில் பாதுகையுடன் ஸஞ்சரிக்கும் திருக்கோலத்துடன் நமக்கு அபயமளிக்கிறான். நரசிங்கன் விஷயமாக காமாஸிகாஷ்டகம் என்னும் ஸ்தோத்ரத்தை தேசிகன் ஸாதித்துள்ளார். ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கு யதிரூபமாய் வந்து ப்ரேஷமந்த்ரோபதேசம் பண்ணிவைத்து ஸ்ரீ அஹோபில மடத்தின் ப்ரவர்த்தகனான அவனது இன்னருள் விளங்கும் திருக்கோலம் தீட்டப்பட்டுள்ளது. அடுத்த பக்கத்தில் ப்ரஹ்மசாரிக்கு தேசிகன் ஸ்ரீஸ்துதியை பாடி பணம் வரவழைத்துக்கொடுத்ததாக தேவப்பெருமாள் (பெருந்தேவித்தாயார் ஸன்னிதியிலுள்ளது போன்ற) சித்திரம் ஸ்ரீஸ்துதியின் மஹிமையை உபதேசிக்கிறது.

திருஎவ்வுள்ளில் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனது உத்ஸவமும் ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனுடைய உத்ஸவமும், நவராத்ரி உத்ஸவமும் ஒன்றுசேரவே ஸ்ரீ வீரராகவன், கநகவல்லித்தாயாருடன் இவ்வாசார்யர்களுடன் உத்ஸவம் கண்டருளி, தேசிகோத்தமனது ஸன்னிதிமண்டபத்தில் இவ்வாசார்யர்களும் எழுந்தருளி கொலு நடத்தும் ஸேவை காண்கிறது. ப்ரஹ்மோத்ஸவாதிகளைவிட வெகு அழகாயும், ச்லாகிக்கத்தகுந்ததாயும் நடக்கும் உத்ஸவம் திருவுள்ளூர் ஆசார்யர்களுடைய உத்ஸவங்கள். இதை தான் கொலுவிலிருந்து நடத்திவைக்கும் எவ்வுள்கிடந்தான் கருணையே கருணை.

கடைசியில் வடிவழகார்ந்த தூப்புல்வள்ளல் தொண்டருகந்து பல்லாண்டு பாடும் வண்ணம் ஹயவதனனுடன் தாமுறுவல் கொண்டமுகத்துடனும் வ்யாக்யாமுத்திரைக்கையுடனும்வெகு கம்பீரமாக எழுந்தருளியிக்கிறார். இவ்வருஷம் ஆசார்யஜயந்திமலரில் அச்சிடுவதற்கு ஸ்ரீ ரகுவீரன் ப்ளாக்கைக் கொடுத்துதவிய பக்தன் நிர்வாஹிகளுக்கும், யதோக்தகாரி, ஸுதர்சனாழ்வான், தேவப்பெருமாள் ப்ளாக்குகளைக் கொடுத்துதவிய பகவத்கைங்கர்யஸபையாருக்கும், ஸ்ரீ வீரராகவன், கநகவல்லித்தாயார் ப்ளாக்குகளைக் கொடுத்துதவிய ஸ்ரீ M. க்ருஷ்ணமாசாரியருக்கும், தேசிகன் ப்ளாக் கொடுத்துதவிய பம்பாய் தேசிகஸபையாருக்கும் நமது க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

P. K. ராமபத்ரன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 13 } ஜய ௵ ஐப்பசி ௴ { ஸஞ்சிகை 10

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

श्रीः

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योन्तःप्रविश्य ममवाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण श्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

நமது ஸமூஹத்தில் காணப்படுகிற புராதன பழக்கவழக்கங்களினுட்கருத்தை யறியமுடியாததினால் அவைகளை விட்டுவிடுவது முறையல்ல என்றும், ப்ராசீன ஆசாராநுஷ்டாநங்களுடனும், கொள்கைகளுடனும் நாம் நமது வாழ்க்கையை வகுத்துக்கொள்ள வேண்டுமென்றும் ஸமீபகாலங்களில் பல அறிவாளிகள் கூறுவதை நாம் செய்தித்தாள்கள் மூலம் அறிகிறோம். நமது ஸமூஹத்தினரிடையே அதிக நன்மதிப்பையும் செல்வாக்கையும் உடையவர்கள் இப்பெரியோர்கள். இவைகளை நாம் நன்னோக்குங்கால் நமது ஸமூஹத்திற்கு ஏதோ நல்லகாலம் வந்துகொண்டிருக்கிறது என்றே எண்ணவேண்டியிருக்கிறது. நமக்கேற்பட்ட ஸ்வதர்மத்தைப் புறக்கணித்து, ஶரீரபோஷணமே முக்யமென்றெண்ணி, புகழும், பேரும், பொருளும் நமக்கு வேண்டியவைகள் என்று மனத்திற்கொண்டு நமது ப்ராசீனர்களால் கூறப்பட்ட **'सेवा श्ववृत्तिः'** பிறரிடம் அண்டிப் பிழைப்பது மிகவும் ஹீனமானது என்பதையும் மறந்து, பலலௌகிக உத்யோகங்களுக்காகவே நமது வேஷ பாஷாதிகளையும் மாற்றிக் கொண்ட நம்மில் பலர் தத்காலம் படும் பாட்டை உண்மையாக நாம் ஆராய்ந்து பார்த்தால் நம் முன்னோர்களின் கருத்தின் உண்மை நன்கு புலப்படும். **'शरीरमाद्यं खलु धर्मसाधनम्'** தர்மத்தைச் செய்வதற்கு ஶரீரபோஷணம் அவச்யம்தானே என்று கூறி ஶரீரபோஷண நிமித்தம் பொருளாதார அபிவ்ருத்திக்காக நாம் அல்லல்படவேண்டுமென்று கூறுபவர்களுளர். இது ஓரளவு உண்மையே; ஆயினும் ஶரீரமும் ஜீவனும் சேர்ந்திருக்கவேண்டியதற்காக ஏராளமானப்பொருள் ஸம்பாதிக்க வேண்டுமென்றோ, பதவியும் புகழும் இவ்வுலகில் வேண்டுமென்றோ ஒருவரும் எண்ண வேண்டியதில்லையே. இவ்வுண்மையை ஸமீபகாலத்தில்தான் நமது ஸமூஹத்தினரிடையே செல்வாக்குள்ள சிலர் உணர்ந்து பிறருக்கு எடுத்துக் கூறுகின்றனர். இனியாவது நம்மில் பெரும்பாலோர் இவ்வுண்மையை நன்குணர்ந்து நம் ப்ராசீனக்கொள்கைகளையும் ஆசாராநுஷ்டாநங்களையும் புறக்கணிக்காமல் நடைமுறையில் அநுஸரித்துக்காட்டி, நமது சூழ்நிலையில்காணப்படும் தீய சக்திகள் நம்மைத் துன்புறுத்தாவண்ணம் நம்மையும், நமக்கு நன்மைபயக்கும் தர்மங்களையும் காப்பாற்றிக் கொள்வார்களா.

மேற்கூறிய உயர்ந்த கருத்துக்களை நமக்கு எடுத்துரைத்தும், அநுஷ்டித்துக் காட்டியும் நமது க்ஷேமத்திற்காகவே பாடுபட்டு வாழ்ந்திருந்த பற்பல பூர்வாசார்யர்களின் வாழ்க்கை வரலாறுகளை நாம் நன்கறிந்து நமக்கு நிதர்சநமாகக் கொள்ளவேண்டும். இவ்விதம் உலக நன்மைக்காக தங்களது நலனையும் பொருட்படுத்தாமல் வாழ்ந்தவர்கள் பலருளர். அம்மாதிரியான பூர்வாசார்யர்களுள் முக்யமானவர்கள்தான் கந்யாமாஸத்தில் திருவோணத்திலும் திருக்கேட்டையிலும் இப்புவியிலுதித்த மஹான்கள். [ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனும் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனும்] நமது ப்ராசீன தர்மத்தை நிலைநிறுத்தவே நமது ஶரீரபோஷணமென்றும், அதற்குமேல் பேரும், பொருளும் தேடியலைவது நமக்கு உகந்ததில்லை என்றும் இவ்விருமஹான்களும் நமக்கு நன்கு போதிக்கின்றனர். இவர்கள் வகுத்த வழிகளை நாம் பின்பற்றினால் இக்காலத்தில் நமக்கேற்பட்டுள்ள தீய சூழ்நிலையிலிருந்து நாம் நம்மைக் காப்பாற்றிக்கொள்ள

முடியும். அதிகம் சொல்லுவானேன். நமக்கு ஸமீபத்தில் முன் தோன்றியிருந்த நமது ப்ராசீனர்களும் இம்மஹான்கள் வகுத்த வழியே வந்திருந்தால் நமக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தீய சூழ்நிலை ஏற்படாமலேயே தவிர்க்கப்பட்டிருக்கும்.

ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகனின் வாழ்க்கை வரலாற்றை ஊன்றி கவனித்தால், ஒவ்வொரு கார்யமும் ஸ்வாமியின் உன்னதக் கொள்கைகளை நமக்கு புலப்படுத்தும். இது ஸமயம் முக்யமான ஒரு குணத்தை மாத்திரம் நாம் பராமர்சிப்போம். ஸ்ரீஸ்வாமியும், ஸ்ரீவித்யாரண்யரும் காஞ்சியில் ஸதீர்த்தர்களாக ஶாஸ்த்ரங்களை அப்யஸித்தார்கள் என்பது ப்ரஸித்தம். இருவரும் திகந்தவிச்ராந்த கீர்த்தியையுடைய பண்டிதர்கள். இருவரும் ஜ்ஞாநாநுஷ்டாநவைராக்யசீலர்கள். வித்யாரண்யர் ஸந்யாஸி. ஸ்ரீஸ்வாமி க்ருஹஸ்தரானபோதிலும் வைராக்ய காஷ்டையை அவலம்பித்திருந்தார். வித்யாரண்யர் விஜயநகராதீசனிடம் ப்ரதாந மந்த்ரிஸ்தானத்தை வஹித்து ராஜ்யதந்திரத்தை நடத்திவந்தார். இதுவும் புராணஸம்மதமானதேயாம். பரமைகாந்தியான வஸிஷ்டர் கோஸலராஜ்யாதிபதிகளின் மந்த்ரியாயிருந்தவரல்லவா? வித்யாரண்யர் தன் செல்வாக்கைக் கொண்டு வேதபாஷ்யங்களைச் செய்வித்தும், தானே தர்மஶாஸ்த்ரங்கள், வ்யாகரண மீமாம்ஸா ந்யாய வேதாந்த ஶாஸ்த்ரங்களில் பல க்ரந்தங்களைச் செய்துமிருக்கிறார். ராஜாங்கத்தில் முக்கிய அதிகாரமும் ஆதிபத்யமும் இல்லாமல் போனால் அவரால் செய்யப்பட்ட பெரிய கார்யங்கள் செய்திருக்கவே முடியாது. ஸர்வதர்சநஸங்க்ரஹத்தில் ஸ்ரீஸ்வாமி தேசிகனுடைய தத்வமுக்தாகலாப ச்லோகங்களை எடுத்து உதாஹரித்திருக்கிறார். ஸ்ரீஸ்வாமியின் பெருமை ஆந்த்ரராஜ்யத்தில் நன்கு பரவியிருந்தது. ஆதலால் ஸ்ரீஸ்வாமிக்கு ஏதாவது பெயரும் பொருளும் ஸம்பாதித்துக் கொடுக்க ஆசைப்பட்ட வித்யாரண்யர் தம்முடைய ராஜஸமூஹத்திற்கு ஸ்ரீஸ்வாமியை அழைத்து வரும்படி தகுந்த மநுஷ்யர்களை அனுப்பினார். இதற்கு பதிலாகத்தான் ஸ்ரீஸ்வாமி '**क्षोणीकोण**' என்றாரம்பிக்கும் ச்லோகத்தை எழுதியனுப்பினாராம். இதில் இப்பரந்த பூலோகத்தின் ஓர் மூலையில் ஓர் சிறிய அரசாங்கத்தின் அதிபரிடம் தனக்கு ஆகவேண்டிய கார்யம் ஒன்றுமில்லை என்றும், ஸர்வலோக பிதாவும் குசேல முனிவருக்கு ஓர் பிடி அவலுக்காக குபேரஸம்பத்தைக்கொடுத்த வாஸுதேவனே தனக்கு ஸேவ்யன் (பூஜிக்கத்தகுந்தவன்) என்றும் கூறியுள்ளார். இந்த பதிலைக்கண்ட வித்யாரண்யர் தன் அரசனையேகொண்டு ஸ்ரீஸ்வாமிக்கு ஓர் பத்ரிகை அனுப்பி வைத்ததாயும் அதற்குப்பதிலாக ஸ்ரீஸ்வாமி ஐந்து ச்லோகங்களை எழுதி அனுப்பியதாகவும் பெரியோர் பணிப்பர். இந்த ஆறு ச்லோகங்களும் வைராக்ய காஷ்டையை ப்ரதிபாதநம் செய்கின்றன. முதல் ச்லோகம் அரசனையே ஓர் த்ருணமாக மதித்து எழுதப்பட்டது. '**निरीहाणामीशस्तृणमिव तिरस्कारविषयः**' [ஆசை யற்றவருக்கு அரசனும் புற்போல் புறக்கணிக்கத் தகுந்தவனே தான்] மற்றைய ச்லோகங்கள் வைராக்ய பரமானபோதிலும் அரச நிந்தையாகமாட்டாது.

பரம புருஷனிடத்தில் பக்தியே நமக்கு அபாரமான ஸ்வாதந்த்ர்யம் அவனுடைய ஸேவையே நமக்கு வேண்டுவது. அதன்மூலமாகவே குசேலருக்கு நடந்ததுபோல் தேஹயாத்ரையும் நமக்கு நடக்குமென்று ஸ்ரீஸ்வாமி விளக்கிக்காட்டினார்.

குபேரனால் கொட்டப்பட்ட ஐச்வர்யமனைத்தையும் கௌத்ஸரே எடுத்துச்செல்லவேண்டுமென்று நிர்பந்தித்த ரகுமஹாராஜனையும் தனக்கு வேண்டிய 14 கோடி பொன் தவிர இதர த்ரவ்யத்தைத் தான் தொட முடியாது என்று கூறிய கௌத்ஸரையும் கண்டு ஸாகேதவாஸிகளே ஆச்சர்யப்பட்டார்களென்று காளிதாஸன் சமத்காரமாய்க் கூறினான். இதே போல் பொருளில் ஆசையற்ற ஸ்ரீஸ்வாமி ஸ்ரீஸ்துதியால் கிடைத்த ஐச்வர்ய வ்ருஷ்டியால் ப்ரஹ்மசாரியை த்ருப்தி செய்வித்தார் என்பதும் ஆச்சர்யமான விஷயமல்லவா! இப்படி வைராக்யநிஷ்டராய் ஸ்ரீஸ்வாமி எழுந்தருளியிருந்து ஆத்மகுண பூர்த்தியால் எதிரிகளை வென்று நம் ஸமூஹத்துக்கெல்லாம் ஓர் ஆசார்யோத்தமராக விளங்கிவந்தார். ஆசையற்ற நிலையால் தீய சூழ்நிலையைத் தவிர்க்கலாமென்பது இதனால் கண்கூடு.

ஸ்ரீஸ்வாமி க்ரஹஸ்தாச்ரமத்தில் எழுந்தருளியிருந்தார். நாளடைவில் நமது ஸமூஹத்தினிடையே பல தீய குணங்களும் மனமாறுதலும் காணப்பட்டது. வைராக்ய நிஷ்டரான க்ரஹஸ்தர்கள்கூட ஸமூஹத்தை சீர்தூக்கிவிட முடியவில்லைபோலும். தவிரவுமுயர்ந்த கார்யங்களை உலகிற் செய்துவர பெருத்த பொருளுதவியும் வேண்டியிருந்தது. ஆகவே

வைராக்யநிஷ்டராயும், தநாதிபதியாயும் ஓர் ஆசார்யர் தோன்றுவது அவச்யம் என்ற நிலையை ஸர்வஜ்ஞனை மாலோலன் திருவுள்ளத்திற்கொண்டு ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனை நியமித்தருளினன். ஸந்யாஸாச்ரம ஸ்வீகாரத்தால் உலகோர்க்கு வைராக்யத்தின் முக்யத்வத்தை எடுத்துக் காட்ட முடிந்தது. மாலோலனுடைய த்ரவ்யத்தை நல்வழியில் செலவு செய்யும் ஸௌகர்யமும் அம்மஹானுக்கு ஏற்பட்டது. ஆகவே ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைராக்யநிஷ்டராய் ஓர் பெரிய ஸந்நிதியின் அதிபராயும், ஆசார்யோத்தமராயும், அதற்கு விரோதமன்றிக்கே ஸகல ஸத்கார்யங்களுக்கும் வேண்டிய தனஸௌகர்யத்தை மாலோலனிடமிருந்தே நேரில் அடைந்தும் ஜகதாசார்யராக விளங்கினர்.

வித்யாரண்யர் எந்த விஜயநகரத்தரசனிடம் மந்த்ரிபதவியை வஹித்து வந்தாரோ அதே வம்சத்தில் தோன்றிய விஜயநகராதீசன் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்குக்கிங்கரனாக விளங்கினன். ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனுக்கு பல்லக்கு யானை, குதிரை, சத்ர, சாமராதிகள் போன்ற ஸகலபிருதுகளையும், ஸௌகர்யங்களையும் ஏற்பாடுசெய்துதந்து, தானே ஸ்ரீமதாசார்யோத்தமரின் சிபிகையையுமெழுந்தருளப்பண்ணினனென்றால் ஸ்ரீமதழகியசிங்கரின் பெருமைதான் என்னே!

ஒவ்வொரு காலத்திலும் ஜனங்களுடைய மனோபாவத்தை அறிந்து அதற்குத்தக்கபடி ஆசார்யர்கள் அவதரித்து ஜனங்களைக் காப்பாற்றுகிறார்களென்பதும் இம்மாதிரி ஏற்பாடுகளால் தெரியவருகிறது.

பகவத்பக்திமேலீட்டால் சென்றுகாண்டற்கரிய கோயிலாகிய திருவேங்கடத்தானினவதார விசேஷமாகிய ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகனின் கார்யத்தைப் பூர்த்திசெய்யவே தான் மற்றொரு ஆச்ரமத்திலே ஸ்ரீமதழகியசிங்கராகத் தோன்றினன் தெய்வமல்லால் செல்லவொண்ணா சிங்கவேழ்குன்றத்தான். தெய்வஸஹாயத்தினாலே— அனுக்ரஹ விசேஷத்தினாலேதான் சிங்கவேழ்குன்றத்தைத் தர்சிக்கவும் மாலோலனுக்குப் பணிவிடை செய்யவும் கூடும். அர்ச்சாவதாரத்தில் தோன்றிய திருவேங்கடத்தானுக்குப் பூர்வனும், விபவாவதாரத்தையும் அர்ச்சாரூபத்தையும் ஒருங்கே ஏற்றுக்கொண்ட மாலோலன் வைராக்யசிஹ்னமாகிய ஸந்யாஸாச்ரமத்தோடும், ஐச்வர்யாதிபத்யத்துக்கு அடையாளமான ஸ்ரீஅஹோபில மட ஆதிபத்யத்தையும் ஒருங்கேயமைத்து ஓர் அவதார விசேஷத்தை அமைத்துக்கொண்டனன்போலும். ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் (ஸ்ரீமந்நாதமுனி முதலிய) பூர்வாசார்யோக்தமான ஸ்ரீவிசிஷ்டாத்வைததர்சநத்தை தனது வாழ்நாளில்நன்கு அநுஷ்டித்துக்காட்டியும், விஸ்தரித்தும், தனக்குப் பிறகு நிலைநிற்க வேண்டி நூற்றுக்கணக்கான ஸம்ஸ்க்ருத த்ராவிட மணிப்ரவாள க்ரந்தங்களை நிர்மாணித்து முலகத்தை உய்வித்தருளினர். இக்கைங்கர்யம் பூர்த்தியாவதென்றால் காலத்திற்கேற்ப அநுஷ்டாநமும், ஆதிபத்யமும் அவச்யமாகவே ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனாக அவதரித்தருளி அநுஷ்டாநத்தினாலும், பூர்வாசார்யோக்த க்ரந்தப்ரவசனங்களாலும், ரக்ஷணங்களாலும், தேவாலயாதிநிர்மாணங்களினாலும் பூர்வாசார்யோக்த ஸித்தாந்தத்தை நன்கு நிலைத்திருக்கும்படி செய்தருளினர்.

ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வழி வந்த ஆசார்யோத்தமர்கள் '**स्वसुखनिरभिलाषाः**' தங்களுடைய ஸுகத்தை விரும்பாமல் 'லோகத்தின் பொருட்டே ஜீவித்து, ஜந்மஸுக்ருதத்தினால் ஏற்பட்ட ஐச்வர்யாதி ஸுகங்களையும் திரஸ்கரித்துவிட்டு துரீயாச்ரமஸ்வீகாரம் செய்துகொண்டு பரமாசார்யரான மாலோலனை ஆராதித்துக்கொண்டு, க்ரந்தப்ரவசனங்களும், க்ரந்தப்ரகாசங்களும் செய்துகொண்டு எழுந்தருளியிருப்பதோடல்லாமல் ஸாமாந்ய சாஸ்த்ராப்யாஸம் இளமைக் கல்வி இவைகளுக்காகவும்கூட நமது ஸமூஹத்தினருக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்தருளி வருகிறார்கள் என்பது நமது பூர்வாசார்யர்கள் நம்பால் காட்டும் கருணை என்பதுதவிர வேறு என்னவென்று கூறுவது.

நமது பரமாசார்யரான மாலோலனின் பரம காருண்யத்தினால் நாம் எல்லோரும் உயர்ந்த ஜந்மாவை அடைந்ததுடன் உயர்ந்த ஓர் ஸமூஹத்திலும் சேர்ந்தவர்களாக ஆகிறோம். அந்த பரமாசார்யன் நம்மிடம் உள்ள க்ருபா விசேஷத்தினால் ஸ்ரீமந்நாதமுனிகள், ஸ்ரீபாஷ்யகாரர், ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன், ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், ஸ்ரீமதழகியசிங்கர்கள் என்றபடி அக்காலத்திற்கநுகுணமாக பற்பல அவதார விசேஷங்களினால் நம்மை அநுக்ரஹித்தருளுகிறான் என்பதை யார் மறுக்க முடியும்.

ஸ்ரீ:

ஸ்ரீதேசிகமணியின் அவதார ரஹஸ்யம்

ஸ்ரீ. உப. வித்வான், ஸரள கவி, பாதூர் ராகவாசார்ய ஸ்வாமி, வ்யாகரணாத்யாபகர்,
ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.

ஏற்றிமனத்தெழின் ஞானவிளக்கையிருளனைத்து
மாற்றினவர்க்கொருகைம்மாறு மாயனும் காணகில்லான்
போற்றியுகப்பதும் புந்தியிற்கொள்வதும் பொங்குபுகழ்
சாற்றிவளர்ப்பதுஞ்சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே.

சுத்த:ப்ரஜ்ஞாநஜீவம் நிஜசரணஜுஷாம் ஸம்ப்ரதாயப்ரகாரம்
க்ருத்ஸ்நம் ரங்கேசஸூரே: ப்ரதமவகுளப்ருத்விஷ்ணுசித்தாதி ந ஜ்ஞாதபூர்வே ।
யத்தத்ஸாதாயதேவ ப்ரபத்தி தத்வப்ரதிப்ருத்யாயப்ராந்தராஜஸ-
தத்தத்தீர்த்தாவஸாநாத்ய கிம் தத்வப்ரதே: காயப்ரவோதகஸ்ஸ: ॥

ஸர்வேச்வரன் தன்னுடைய சிறப்புடனேயே யிவ்வுலகில் அவதாரம் செய்கிறான் என்பதை 'ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந:' என்று வேதபுருஷன் பேசினான். இங்கு 'உ' என்ற சொல்லுக்கு அவதாரணம் பொருள். 'ஸ உ' என்னும்போது பரமபுருஷனே சிறப்புடையனாய்ப் பிறக்கிறானென்று பொருள் படுதலால் அவனைத்தவிர மற்றவர்கள் கருமமடியாக வரும் இழிபிறப்புடையவர்கள் என்பது தோன்றும். 'ச்ரேயாந் உ' என்னும்போது 'மிக்க சிறப்புடையனாகவேபிறக்கிறான்' என்று பொருள் கிடைப்பதால் நம்போல்வருக்குப் போல ஈச்வரனுக்குப் பிறவிவிஷயத்தில் கருமஸம்பந்தம் காரணமாகாதென்பது தோன்றும். 'ஜாயமாந: உ' என்னும்போது ஈச்வரன் அவதாரவிசிஷ்டனாய்க்கொண்டே சிறப்புடையனாகிறான்' என்றபொருள்படுவதால் அவனுடைய காருண்யாதி கல்யாணகுணங்கள் விசேஷமாக ப்ரகாசிப்பது அவதாரதசையிலேதான் - பரமபதநிலையிலல்ல என்பது தோன்றும். 'பவதி உ' என்னும்போது 'அவதரிக்கும் எம்பெருமான் தன்னைச் சிறப்புடையவனாக யிருக்கவே செய்கிறான்' என்று பொருள் படுவதால் அவதாரத்தில் சிறப்புக்குக் குறைவு கிடையாதென்பது தோன்றும். இப்படி நான்குவிதமாக 'உ' என்ற சொல்லை யந்வயித்தால் கிடைத்த ஸாரமாவது — ஸர்வேச்வரன் ஒருவனே கர்மஸம்பந்தமில்லாது அவதரிக்கின்றான். அவனுடைய பெருமைகள் அவதாரத்திலேதான் ப்ரகாசிக்கின்றன. சிறப்பில்லாப்பிறவி அவனுக்கில்லை என்றபடி. இங்கு வேதவாக்யத்தில் சிறப்புக்குரிய விசேஷகாரணம் நிர்தேசிக்கப்படவில்லை. ஆகையால் அஸங்கோச ந்யாயத்தினால் 'ஸர்வகாரணங்களாலும் சிறப்புடையவன்' என்பது கொள்ளத்தகாலது.

இந்த வேதவாக்யத்தை யடியொத்தியே பகவான் கண்ணனும் கீதையில் நான்காவது அத்யாயத்தில் 'பஹூநி மே' என்று தொடங்கி 'ஸ்ருஜாம்யஹம்' என்று முடிந்தஐந்து ச்லோகங்களால் தன்னுடைய அவதாரரஹஸ்யத்தை ஸப்ரகாரமாய் அர்ஜுனனுக்கு உபதேசித்தருளினான். 1. அர்ஜுனா! முற்காலத்தில் நீ பல பிறவிகளை யடைந்ததுபோல நானுமநேகாவதாரங்களை எடுத்திருக்கிறேன். எல்லாமறிந்த நான் ஒருவனே அவையாவற்றையுமுணர்ந்தவன். 2. கர்மமடியாக வரும் பிறவியற்றபடியையும் ஸர்வேச்வரஸ்வபாவத்தையும் கிஞ்சித்தும் விடாமலே நான் என் ஸங்கல்பத்தினாலேயே அப்ராக்ருதசுத்தஸத்த்வமயமான

திருமேனியுடன் அவதரிக்கிறேன். 3. எப்போது தர்மத்தின் வாட்டமும் அதர்மத்தின் எழுச்சியும் தோன்றுமோ அப்போது நான் அவதரிக்கிறேன். 4. ஸாதுக்களைச்செவ்வனே காப்பதற்காகவும் துஷ்டர்களை ஹதம் செய்வதற்காகவும் நலிந்த தர்மத்தைச் செழிப்புறச் செய்வதற்காகவும் யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன். 5. ஓ அர்ஜுனா! என்னுடைய திவ்ய அவதாரத்தையும் திவ்ய கர்மத்தையும் உள்ளபடி அறிந்தவன் மறு பிறவி யற்றவனாய் என்னை யடைகிறான் என்பது இவ்வைந்து ச்லோகங்களின் திரண்ட பொருளாகும். மேற் கூறிய வேதவாக்யத்தில் மறைந்து கிடைத்த பகவதவதாரத்தின் உண்மைகளை இங்கு கீதாசார்யன் கீழ் வருமாறு தெளிவாக்கி யிருக்கிறான். நான் அவதரிப்பது உண்மையேதவிர இந்த்ரஜாலம்போன்ற பொய்த்தோற்றமல்ல. என் அவதாரத்திற்குக் காரணம்-என் ஸங்கல்பமே தவிர கர்மமல்ல. என் அவதாரத்தின் பயன்- ஸாதுரக்ஷணாதிகளே. என் அவதார காலம்- தர்மத்தின் வாட்டமுள்ள ஸமயமே. இந்த அவதாரரஹஸ்யத்தை உள்ளவாறு உணர்ந்தவன் பிறவித்துயர் களைந்து ஸ்ரீவைகுண்டமடைந்து ஸர்வேச்வரனான என் பக்கலிலே கைங்கர்யம் என்னும் நித்யவாழ்ச்சி பெறுவானென்று. இதனால் ஸர்வேச்வரனின் அவதார ரஹஸ்யசிந்தனம் க்ரமேண முக்திக்கு ஹேதுவாகுமென்பது புலப்படுகிறது.

‘தேவமிவாசார்யமுபாஸீத’ ‘ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும். மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா’ ஸர்வேச்வரனைப்போலவே ஆசார்யனை உபாஸிக்கவேணுமென்றும், ஸர்வேச்வரனே காருண்யவிசேஷமடியாக ஆசார்ய ரூபமாய் அவதரித்து பவக்கடலிலழுந்தித் துயர்படும் ஜீவர்களை ஜ்ஞானக் கை கொடுத்துக்கரையேற்றுகின்றான் என்றும் வேதபுருஷனும் மஹர்ஷிகளும் கூறுவதால் ஆசார்யாவதாரரஹஸ்யசிந்தனமும் பகவதவதாரரஹஸ்யசிந்தனம் போல் மறுபிறப்பறுத்து முக்தி யளிக்கவல்லது என்று கொள்ளுவதில் குறை யொன்றுமில்லை. தம்முடைய அவதாரரஹஸ்யத்தைக் கண்ணன் கீதையில் வெளியிட்டருளியதுபோல நம் ஆசார்யரத்னமான ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகனும் தம் அவதார ரஹஸ்யத்தை ஸங்கல்ப ஸூர்யோதயமென்னும் தமது நாடகத்தில் ப்ரஸ்தாவநாப்ரகரணத்தில் ஸூத்ரதார நட ஸல்லாப முகத்தினால் வெளியிட்டருளினர். இவ்விடத்தில் நாடகவ்யாக்யாநகர்த்தா எழுதியது கவனிக்கத்தக்கது. அது வருமாறு. ‘ஸ்ரீமான் வேங்கடநாதாசாரியர் தமது ப்ரசம்ஸையில் பராமுகமா யிருப்பவரே யாயினும் நாடகசமயத்தைத் தழுவி தவிர்க்கவொண்ணாமல் ஸூத்ரதாரமுகத்தினால் தமது வைபவத்தை வெளியிடுகின்றார்’ என்று. நம் ஸ்வாமிக்கு ‘க்ருஷ்ணன்’ என்ற திருநாமமுமுண்டென்று ஊஹிக்கவேண்டற்பாலது. ஸ்ரீவெங்கடாசல மாஹாத்ம்யத்திலுள்ள ‘க்ருஷ்ணாவ்ருஷ்ணிவேதாந்தகுருஸ்ஸம்வத்ஸரேதாய வ’ என்ற திருநாமப்ராபவமும், தயாசதகஸ்தோத்ரத்திலுள்ள ‘வேதாந்ததேசிகபதே விநிவேச்ய பாலம்’ என்கிற ச்லோகபாதமும் இதற்குத் தக்க சான்றாகும். மேலும் யாதவாப்யுதய மஹாகாவ்யத்தில் திருவாய்ப்பாடியிலுள்ள நந்தகோபர் முதலானோர்க்கு ‘இந்த்ரனுக்குப் பூசையிடுதல் கூடாது’ என்று சீறிய முறையில் கண்ணன் சொல்லுகின்றான் என்று தொடங்கும் யமக சித்ரவ்ருத்தப்ரசுரமான ஆறாவது ஸர்க்கத்தில் பலவிதமாக தமது கவிதா ஸாமர்த்யத்தைக் காட்டியருளிய நம் தூப்புல் வள்ளல் ‘இப்படியே கவனம் செய்யும் தமக்கும் வாசிப்போருக்கும் க்லேசமில்லாமல் பதினாயிரக்கணக்கில் சித்ரவ்ருத்தங்களை யியற்றும் வல்லமை தமக்குண்டு என்று ‘வித்யாயாமீதாம் ஸ்வவாரம்’ என்பதால் வெளியிட்டருளியவாறே தமதுகவிஸிம்ஹத்வத்தைப்ரகாசப்படுத்திமுடிவில்‘இதி கதயதி க்ருஷ்ணே’ (இப்படி க்ருஷ்ணன் சொல்லும்போது) என்று சொல்லிய ஸ்ரீஸூக்தி ஸ்வாரஸ்யமும் நம் ஸ்வாமி ஸ்ரீக்ருஷ்ணனே என்ற முடிவுக்குத் துணைசெய்கின்றது. க்ருஷ்ணம் கவதே இதி க்ருஷ்ணாவ்ய:- யாதவாப்யுதய மஹாகாவ்யத்தை எழுதி ஸ்ரீக்ருஷ்ண சரிதத்தை வர்ணித்தவர் என்று பொருள்கொண்டும் க்ருஷ்ணாவ்ய: என்பது நம் ஸ்வாமிக்குப் பொருந்தும். இப்படி இரண்டு க்ருஷ்ணர்

களும் தம் தம் அவதார ரஹஸ்யத்தை வெளியிட்டருளியபடியால் முதல் க்ருஷ்ணனின் அவதார ரஹஸ்யத்தை அவன் ஸ்ரீஸூக்தியைக் கொண்டு ஒருவாறு அநுபவித்த நாம் இரண்டாவது க்ருஷ்ணனாகிய ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனின் அவதார ரஹஸ்ய சிந்தனத்தில் அவர் ஸ்ரீஸூக்திதுணையாகவே சற்று ப்ரவேசித்து ஆத்மாவை க்ருதார்த்தமாக்குவோம்.

(ஸங்கல்பஸூர்யோதய நாடகம்)

நடீ ஸூத்ரதாரனைப் பார்த்துக் கேட்கிறாள்.

ஆர்ய! கஸ்ய புந: கவே: ப்ரபோத வஷ:. யத்ர பஹுமாநேந ஸ்வாரஸ்வ ப்ரஸ்நிதவக்ஷவா தெஷா வரிஷக.

இதன் பொருள். ஆர்யரே! இந்த ஸங்கல்ப ஸூர்யோதயநாடகத்தின் கர்த்தாவான கவி யாவரோ. அவரிடமுள்ள பஹுமானத்தினால் இந்த ரங்காஸ்தாந ரஸிகர்கள் யாவரும் நம்மிடத்திலும் விசேஷ ப்ரீதியைக் காட்டுகின்றனரே என்று.

ஸூத்ரதாரன் சொல்லுகிறான்—

(1) ஆர்யே! கிம் ந ஶ்ருதபூர்வஸி. ஸர்வ வந்த்ய ஹுக்ரொகஸம்ஹாவநீயஸ்ய விஶ்வாமித்ர வம்ஶாயிநோ விஶ்வாமித்ரகோத்ரபூஷணஸ்ய விஶுத்த வித்யா விஹார புண்டரீகஸ்ய புண்டரீகாக்ஷஸோமயாஜிந ப்ரஸவஸ்ய அநந்தகுண ஸேவதிரநந்தஸூரேராத்மஸம்பவ: ஸ்ரீரங்கராஜ திவ்யாஜ்ஞா லப்த வேதாந்தாசார்ய பத: கவிதார்க்கிகஸிம்ஹ இதி ப்ரஸித்த குண ஸமாவ்ய: ஸாத்ருஜநமிவநஷெத்ருய ப்ரஸாயிதஜயஶிஶாவைலய: ஸகலதந்த்ர ஸ்வதந்த்ர பரிஶ்ரமநிபீடிதி: ஸ்ரீவேங்கடநாதோ நாம கவி:.

(2) ஶரவெதஹவாஹுமயோகரம ஸரஸ்வதீம் | யஸ்ய நித்யம் ப்ரஶம்ஸந்தி ஸந்த ஸாரஸவேதிந: ||

(3) அந்யேந்த்ரம் புவநாந்தரம் வா கர்த்தும் க்ஷமே கவிரஹ விஶ்வாமித்ரவாயே | ஜந்மாந்தரீயமபி யதவ: கதிதா யதஸ்ஸா தேவீ ச விஶ்வஜநநீ யதநந்யகோத்ரா ||

கவிவ.—

(4) வித்ராவிநீ விவாதயவெரிவாதி நீரநம வஷோஸநெந வரிவாரவியள ப்ரயத்நா | உத்தேஷக்ஷாதெ பாயஜநெநராவ வதிஹர்வண ஹரெஸஸஜநிஷ யதா தரநேதி ||

(1) மதிப்புக்குரியவளே! நீ இது கேட்டிலையோ. எல்லோராலும் மதிக்கவேண்டியவரும் மிக்க மேன்மை பெற்றவரும், விச்வாமித்ர கோத்ரத்திற்கு பூஷணம்போன்றவரும், சுத்தமான அத்யாத்ம வித்யையெனும் திருவின் நித்யவிஹாரபுண்டரீகம் போன்றவரும், புண்டரீகாக்ஷஸோமயாஜிஎன்றமஹானின் புதல்வரும், எல்லையில்லாத குணங்களுக்கு நிதி போன்றவருமான அநந்தஸூரி என்ற ஸ்வாமியின் திருக்குமாரர், ஸ்ரீரங்கநாதன் திவ்ய நியமனத்தினால் வேதாந்தாசார்யர் என்ற பதம் பெற்றவர், கவிதார்க்கிகஸிம்ஹமென்று ப்ரஸித்தமான குணநாமமுள்ளவர், சிஷ்யர்களை யனுப்பி பத்து திசைகளெனும் மாடிகளுக்கு அலங்காரமாகத் தமது விஜயக்கொடியை நாட்டியவர், வேதாந்தம் முதலிய நிகிலஶாஸ்த்ரங்களின் ச்ரமத்தை நீக்கவல்ல விசாலமதிபெற்றவர், ஸ்ரீமத்வேங்கடநாதர் என்ற திருநாமத்தினால் ப்ரஸித்தமானவர், இந்த நாடகத்தின் கவியாவார் என்று.

(2) கவிதாவாஸனையை நுகரும் மஹான்கள் கௌடம், வைதர்ப்பம், பாஞ்சாலம் என்ற மூன்று ரீதிகள் கலந்த இக்கவியின் ஸ்ரீஸூக்தியை நித்யமும் மாலையைப்போலப் புகழ்கின்றார்கள்.

(3) இவ்வுலகத்திற்கு வேறு இந்த்ரனையோ, வேறு இந்த்ரனுடன் வேறு உலகத்தையோ நிர்மாணிக்கும் திறமை பெற்ற குலத்திற்பிறந்தவர் இக்கவி. ப்ராஹ்மணர்களின் இரண்டாவது ஜன்மம் எந்த காயத்ரீதேவியினருளால் கிடைப்பதாக முனிவர் கூறுகின்றனரோ அத்தேவியும் இக்கவியின் கோத்ரத்தில் உதித்தவளே.

(4) தமது நாதத்தினால் அஸுரஸேனைகளை வெருட்டியடிப்பவரும், திருவாராதனகைங்கர்யத்தில் ப்ராஹ்மதேவனால் நியமிக்கப்பட்டவருமான திருவேங்கடமாலின் திருமணியாழ்வார் தாமே ஸ்ரீவேங்கடநாதகவியாக அவதரித்தாரென்று ஐதிஹ்யமறிந்த பெரியோர்கள் உபபத்திகளாலே அபாதிதமாயநுமாநம் செய்கிறார்கள் என்பது இந்த ஸ்ரீஸூக்தி ராசியின் திரண்டபொருள்.

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்ம்யம் 14-வது

அத்யாயத்தில் சுத்தயாஜியான நான்முகன், ஸ்ரீநிவாஸன் நியமனத்தினால் ஸ்ரீநிவாஸனுக்குப் பூஜோத்ஸவாதிகளை விசேஷமாகச் செய்தானென்று கூறப்பட்டிருப்பதையனுஸரித்து 'வஹாவஸநெந வரிவாரவியள ஞூயாக்ஷா' என்று சொல்லப்பட்டது. அன்றிக்கே வஹஂஶுஸநஂ யஸ்யாஃஸா வஹாவஸநா — அலர்மேல் மங்கை. தஸ்யா உநஃ-(ஞூஹாஃ) வஹாவஸநெநஃ ஸ்ரீநிவாஸன். தஸ்ய வரிவாரவியள அவன் திருவாராதனகைங்கர்யத்தில், ஞூயாக்ஷா ஸ்வயம்ப்ரயோஜநமாயிருப்பதால் ப்ரீதியினால் ஏவப்பட்டவரென்று கொள்ளற்பாலது. இங்கு அநுமாநத்தின் ஆகாரமாவது— ஹரிவணா— வெஷாஜுஶெஶிகூர ஙிவெண ஜாதா, ஸவ்வூதிஹ ஙியொயஃவஸஷாஶ யஃவஷெஷாஜுஶெஶிகவிஶிஷூகூாக, யக ஸவ்வூதிஹஙி பொயஃவஸஷாஶயஃவஷூதஂ தக தஷூஙிவெண ஜாதஂ. யயா ஶ்ருக வடிர ஙிவெண உதி. (திருமாலின் திருமணியாழ்வார் தேசிகரூபமாயவதரித்தார். தன்னிடமுள்ள நாநா தர்மங்களுக்குத் துல்யமான நாநா தர்மங்கள் உள்ள வேதாந்ததேசிகரை யுடையராயிருப்பதால் — எப்பொருள் தன்னிடமுள்ள வெகு தர்மங்களுக்குத் துல்யமான தர்மமுள்ள எப்பொருளையுடையதோ அப்பொருள் அப்பொருளாய்த்தோன்றியது. உதாரணம்- மண்குடமாகத்தோன்றியது) என்றவாறு.

நாதத்தினால் ஆஸுரப்ரக்ருதிகளைவெருட்டுதல், பகவத்பரிசர்யை ஒன்றிலேயேஈடுபடுதல் (வாதப்போர் நிகழும்போது) விசித்ர கம்பீர சப்தராசியைப் ப்ரகாசப்படுத்துதல்முதலியன திருமணியாழ்வாருக்கும் நம் தூப்புல்குலமணிக்கும் துல்யமான குணங்கள். வ்ஜநெநஃ என்று பன்மைச்சொல்லினால் 'அக்காலத்திலிருந்த மஹான்கள் யாவரும் கண்டாவதாரமென்று கொண்டாடினார்களே தவிர ஒருவராவது கண்டாவதாரம் என்ற விஷயத்தில் விப்ரதிபத்தி பண்ணவில்லை' என்பது ஸூசிக்கப்படுகிறது. இந்த ச்லோகத்தில் ஶஂஜெ ஶெந்ய என்பதுபோன்ற உத்ப்ரேக்ஷாவ்யஞ்ஜக சப்தமில்லையாகையாலும், கவிப்ரசம்ஸா ப்ரகரணத்தில் உத்ப்ரேக்ஷை விருத்தமாகையாலும் 'உக்ஷெயூக்ஷ்யெதெ' என்னும் பதத்தை மாத்திரம் கொண்டு இங்கு உத்ப்ரேக்ஷாலங்கார முண்டென்று கொள்ளக்கூடாது. மேலும் 'ஶொஹெதெ ஸத்யவாதீ' என்று தம்மை ஸத்யவாதியாகக் கூறும் நம் ஸ்வாமி தம்மைக்கூறுமிடத்திலுத்ப்ரேக்ஷை செய்துவிட்டாரென்றுசொல்லுவது ஸாஹஸக்ருத்யமும் அபசாரமுமாகும்.

இந்த ஸூத்ரதாரநடீஸல்லாப ப்ரகரணத்தினால் கிடைக்கும் நம் நிகமாந்த மஹாதேசிகனின் அவதாரரஹஸ்யமாவது:—

'திருமலைமாலின் ஆணையினால் திருமணியாழ்வார் வைச்வாமித்ரரான அநந்தஸூரியென்ற மஹானுக்குத் திருக்குமாரராயவதரித்து ஸ்ரீமத்வேங்கடநாதன் என்ற திருநாமமும், கவிதார்க்கிகஸிம்ஹமென்ற குணநாமமும் பெற்றிருந்தார். இவர் வாதிவிஜயம் செய்யும் வைகரியைக் கண்ணுற்ற ஸ்ரீரங்கராஜன் 'வேதாந்தாசார்யர்' என்ற அன்வர்த்தமான திருநாமத்தாலிவரையழைத்தார். இவர் அவதாரத்தின் பயன் ஸர்வவேதாந்தங்களின் க்லேசங்களைப்போக்கி யதாவத்தாகஅவற்றின் கருத்துக்களை ஓங்கச் செய்வதாகும். இதையநுஸரித்தே பின்புள்ள மஹான்களும்,

'வெஷெ ஸஜாதவெஷெ ஶாநிஜநவஷெந ஞூாதநிதூாவஶெந ஸஜீணெ ஸவ வணெ ஸதி தஷநாறாணெ நிஷூ ஶாணெ வாராணெ। ஶாயாவாஷெ ஸஶொஷெ கூஷி கூஷவஶாஷூஙிநூவாஷெzவிவாஷெ யஶ தூாணாய யொzஹஙிதூஜயதாஹஶவாநிஷணா வணாவதாரஃ॥' என்று நம் ஸ்வாமியை யநுஸந்தித்தார்கள்.

கவதரணாரஹஸ்யஂ வெஷவஙிஶா ஶாரொஷூஸக-
வஷஸரஸிஜயாஶூயநவஙிதாஜுரஜஃ।
ஞூஜிதிவரவஶாநாஂ ஞூணெந ஜாஶரஙிகஃ
ஸரஹகவிரிதி ஸ்ரீராவவஹூ ஞூவீதி॥

ஸ்ரீ:

புராணங்கொண்ட பூர்வாசார்யர்கள்

ஸ்ரீ. உப. வித்வான், வேதாந்த வாவதூக, வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி,
ந்யாயாத்யாபகர். ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை
மதுராந்தகம்.

நமது பூர்வாசார்யர்கள் விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபநாதிகள் மூலமாய் நமக்குச் செய்துள்ள உபகாரங்கள் மறக்க முயன்றும் முடியாதவாறு மலைபோல் மிகுந்து குவிந்து கிடக்கின்றன. புரட்டாசியில், திருவோணமும், திருக்கேட்டையும், கொண்ட நன்னாள் அணித்தாக வருகிறபடியால், அவைகளில் அவதாரம் செய்த ஆசார்யோத்தமர்களை த்யானித்து, அவர்கள் செய்த உபகார பரம்பரைகளை நினைத்து, நாம், ‘நன்றி கெட்டவர்கள்’ என்ற அவச் சொல்லுக்கு ஆளாகாமல் இருக்க வேண்டுவது இங்கு மிகவும் முக்யமாகிறது.

பூர்வாசார்யர்களில் ‘புராண ப்ரஸித்தி பெற்றவர்கள்’ என்ற ஏற்றம் சிலருக்கே உரிதாகும். ‘புராணம்’ என்று நாம் இங்கு குறிப்பிடும்பொழுது ‘இதிஹாஸம், ஸம்ஹிதைகள், ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகள், ஐதிஹ்யம்’ என்றவை போன்றவைகளையும் சேர்த்தே குறிப்பிடுகிறோம். ஆக்ஷேபம் இல்லாத விஷயங்களில் அவைகளும் ப்ரமாணங்களே ஆகும் அல்லவா? எம்பெருமானாரை ‘ப்ருஹத்ப்ருஹ்ம ஸம்ஹிதை’ வருமாறு வர்ணித்துள்ளது:—

‘प्रथमोऽनन्तरूपश्च द्वितीयो लक्ष्मणस्तथा ।
तृतीयो बलरामश्च कलौ रामानुजो मुनिः ॥
यत्र मे लोककल्याणकारिणी परमा कला ।
द्विजरूपेण भविता या तु संकर्षणाभिधा ॥
द्वापरान्ते कलेरादौ पाखण्डप्रचुरे जने ।
रामानुजेति भविता विष्णुधर्मप्रवर्तकः ॥’

என்று. ஆதி உருவம் அனந்தன்; இரண்டாவது இளையபெருமாள்; மூன்றாவது நம்பி மூத்தபிரான் (பலராமன்.) இந்த யுகத்தில் எம்பெருமானார். ‘ஸங்கர்ஷணன்’ என்னும் ஜகந்மங்களமான பகவதம்சம், த்வாபரம் முடிந்து கலி துவங்கும் காலத்தில் பாஷண்டிகள் மண்டிக்கிட்டும் இம்மண்ணுலகில், விஷ்ணு தர்மத்தை வ்ருத்திசெய்ய, விப்ர ஜந்மத்தில் ‘ராமானுஜன்’ என்ற பெயருடன், பிறக்கப் போகிறது’ என்றெல்லாம் அதில் கூறப்பட்டிருப்பது முற்றிலும் உண்மையே அல்லவா?

இங்கு நாம் முக்யமாகக் கூறவந்தது, ஸ்வாமி தேசிகனைப் புராணங்கள் பாடிப் பாராட்டியுள்ள பெருமையைத்தான். ஸ்ரீ வராஹபுராணம், ப்ருஹ்மாண்டபுராணம் இதுகளில், முன்னதில் ஒரு இடத்திலும், பின்னதில் இரண்டிடத்திலும் ஸ்வாமியின் பெருமைப் பேசப்படுகிறது. திருமலையில் திருவேங்கடமுடையான் திவ்ய திருமேனியில், அழகுக்கு அழகு செய்வனபோல், அனேக விதமான அணிகலன்கள், இறையும் அகலாதவாறு என்றென்றும் ஸமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பது அந்தரங்கர் அறிந்த விஷயமே. அவற்றுள் ஒன்று நூற்றெட்டுப் பவுன் காசுகள்கொண்ட, பசும்பொன்னாரம். அவ்வாபரணத்தின் விசேஷமென்னவென்றால்:—ஒரு காசில் ஒரு திருநாமம் என்ற கணக்கில் ஸ்ரீவேங்கடேசாஷ்டோத்தர சதநாமாவளி முழுமையும் அதில் பொறிக்கப்பட்டு இருப்பதுதான். மேல்கண்ட நாமாவளி ஸ்தோத்ரம் ஸ்ரீ வராஹபுராணத்தில் வேங்கடாசல மாஹாத்ம்யத்தில் 29-வது அத்யாயமாக அமைந்திருக்கிறது. அதில் கண்டுள்ளபடி திருவேங்கடமுடையானுடைய

மத்யாஹ்நகாலத்திய இரண்டாவது திருவாராதநத்தில் துளஸி அர்ச்சனையில் 62-வது திருநாமமாக 'कृष्णाख्यविप्रवेदान्त देशिकत्व प्रदाय नमः' என்று அநுஸந்திக்கப்படுவதை, இன்றும் அந்த ஸந்நிதியுள் நின்று கேட்கலாம். அதில் 'க்ருஷ்ணன்' என்ற ப்ராஹ்மணோத்தமனுக்கு மறு ஜந்மத்தில் வேதாந்த தேசிகபதத்தை வழங்கியருளினவன்' என்று திருவேங்கடமுடையான் ஸ்தோத்ரம் செய்யப்படுகிறான். இதனால், ஸ்வாமி தேசிகனின் பூர்வஜந்மத் திருநாமம் இருந்தவாறும், திருவேங்கடத்தான் திருவருளால், அவருக்கு, வேதாந்த தேசிகத்வத்திற்குப் பாங்கான பிறவி கிடைத்தவாறும் சுருங்கக் கூறப்பட்டதாகிறது. இவ் விஷயத்தில் மேலும் விவரம் காணவேண்டுமாயின், நாம் ப்ராஹ்மாண்டபுராணத்தில் வேங்கடாசல மாஹாத்ம்ய ப்ரகரணம் 10-வது அத்யாயம் ஸேவிக்கவேணும். ஒரு புராணம் சுருங்கச் சொன்னவற்றை மற்றொரு புராணம் விவரித்து வெளியிடுவது என்பது எங்கும் கண்ட ஒரு பொது விதி. இதையே

'इष्टं हि विदुषां लोके समासव्यासधारणम्'

என்று மஹாபாரத கர்த்தாவும் சொன்னார். அங்கு சொல்லப்பட்ட கதை பின்வருமாறு—

சோழ வம்சத்தரசன் 'சக்ரவர்த்தி' என்பான், திருவேங்கடமுடையானுக்குத் தொண்டு பூண்டு ஒழுகிவருபவன், ஒரு ஸமயம் ஸ்ரீநிவாஸனுக்குப் புரட்டாசியில் ப்ரஹ்மோத்ஸவம் கண்டருளப்பண்ணி ஊர் திரும்பிக்கொண்டிருந்தான். அப்பொழுது, உத்ஸவ ஸேவார்த்தம் வந்தவனும், திருவேங்கடமுடையானுக்கே தீர்ந்தமனத்தினனுமான, 'க்ருஷ்ணசர்மா' என்னும் ப்ராஹ்மணன், தமது பத்நியுடனும் ஸமீபத்தில் பெற்றெடுத்த பாலகனுடனும் அரசனைக் கிட்டி, தீர்த்த யாத்ரை செய்ய தமக்குள்ள த்வரையையும், பெற்றுப் பிழைத்தெழுந்த, பலஹீந பத்நி அந்த இச்சைக்கு இடையூறாக விருப்பதையும் விண்ணப்பித்து தான் திரும்புமளவும், இருவரையும் இங்கேயே வைத்து ரக்ஷிக்கவேணுமென்று ராஜாவை வேண்டிக்கொண்டான். ராஜாவும் அப்படியே செய்ய இசைந்து, ப்ராஹ்மணனை போகவிட்டு அவன் மனைவிக்காக ஒரு தனி விடுதி அமைத்து, ஆண்டாறு மாதத்திற்கு வேண்டிய தநதான்யங்களையும் சேர்ப்பித்து, அவளுக்கு ஒரு விதகேடும் நேராமைக்காக 'எக்காரணம்கொண்டும் விடுதியை விட்டுவெளியில் வரவேண்டாம்' என்று கடுமையான கட்டளையையும் பிறப்பித்தான். காலம் உருண்டோடிக்கொண்டே இருந்தது. ராஜ்ய போகங்களில் திளைத்திருந்த அரசனும், அவளை, அறவே மறந்து போனான். ஒரு நாள் க்ருஷ்ணசர்மா தீர்த்த யாத்ரையிலிருந்து, மீண்டு வந்து அரசனைக் காண விழைந்தான். அரசனுக்கோ விப்ரனைக் கண்டதும் பலவித சிந்தைகள்வந்து சூழ்ந்துகொண்டன. 'ஆறே மாதத்திற்கு அன்னமிட்டு, அகத்தைவிட்டு வெளியிலும் வரவேண்டாமென்று கட்டளையிட்டிருந்தேனே. அந்த காலம் அதிக்ரமித்துப் போனதும் அவள் என்னவானளோ' என்று பலவாறு மனம் கலங்கினவனாய், மன்னவன், ஒரு தூதனை 'ரஹஸ்யமாய் அறிந்துவா' என்று அவள் இருந்தவிடத்துக்கு அனுப்பிவைத்தான். அவனும் அப்படியே சென்று, அந்த வீட்டில், ப்ராஹ்மண பத்நியும், பாலகனும் ஆறுமாதம் கடந்து உண்ண உணவின்றி மாண்டவிதத்தையும், பிறகு யாரும் கவனியாமையால் அவர்கள் சடலங்கள் சருகாய் உலர்ந்து, எலும்புக்கூடாய் அங்கேயே கிடப்பதையும் ஏகாந்தத்தில் வந்து ராஜனிடம் விண்ணப்பம் செய்தான். அது கேட்டு மன்னவனும் மிகவும் மதி கலங்கி, திருவேங்கடமுடையான் திருவடிகளை த்யானம் செய்து, தைர்யம் அடைந்து வெளியில் ப்ராஹ்மணனிடம், பொய்யாயினும் ப்ரியமாய் உள்ளதோர் வார்த்தையைச் சொன்னான். 'விப்ரவர்ய! உன் மனைவி தன் மகனுடன், திருமலையில் ஸ்ரீநிவாஸனை ஸேவிக்க இப்பொழுதே புறப்பட்டுச் சென்றாள். இன்று நீர் சென்று இளைப்பாறி நாளை வருவீராகில் அவர்களைக் காணலாம்' என்று.

இவ்விதம்கூறி அந்தணனை அனுப்பிவைத்து அரசன் அவஸரமாய் திருமலையடைந்து, அலர்மேல் மங்கையுறைமார்பன், அடிக்கீழமர்ந்து புகுந்து, தன்னுடைய தவறையும், அதனால்

தனக்குற்ற துயரையும் விஜ்ஞாபித்தான். இதைத் திருச்செவி சாற்றியருளின திருவேங்கடமுடையான், அரசனிடமும் அந்தணனிடமும் காணப்படும் பக்திக்குப் பரவசனாகி அவனை நோக்கி அருளிச்செய்யலானான்: 'அரசே ப்ராஹ்மண பத்நியும் எம்மிடம் பேரன்பு பூண்டவள். ஆகையால் அவளுடையவும் சிசுவினுடையவும் ஆவியை, அகால மரணத்தில் எமன் எடுத்துச் செல்ல நாம் ஸம்மதியாமல், நம்மிடமே வைத்துள்ளோம். அவர்களை இமைப்பொழுதில் இங்கு அழைக்கிறோம். காண்' என்று கூறி விநயத்துடன் பக்கம் நின்ற விஷ்வக்ஸேநரை அழைத்து, திருமலையில் வடகிழக்கிலுள்ள அஸ்திகூட தீர்த்தத்திலிருந்து ஜலம் கொணருமாறும், அவர்கள்சடலங்கள்மேல் ப்ரோக்ஷிக்குமாறும், கட்டளையிட, விஷ்வக்ஸேனரும் அப்படியே செய்ய, ப்ராஹ்மண பத்நியும் பாலகனும், துயின்றவர்கள் போல் உயிர் பெற்றெழுந்தார்கள். பிறகு அரசன் க்ருஷ்ண சர்மாவுக்குச் சொல்லியனுப்ப எல்லோரும் பகவத் ஸந்நிதியில் கூடி நின்று, தேவதேவனை திருவேங்கடம் மருவிநாளும் நின்றானை, நாவினால் நவின்றேத்தினார்கள்.

'तत्पादभक्तिज्ञानाभ्यां फलमन्यत् कदाचन ।
न याचेत् पुरुषो विष्णुं याचनात् नश्यति ध्रुवम् ॥'

பகவானிடம் வேறு பலன்களை யாசிக்கலாகாது. அப்படிச் செய்பவன் சீக்கிரமே அழிவான். ஆயினும் பகவானிடம் பக்திச்செல்வத்தையும் அவனைப்பற்றின ஜ்ஞாநஸம்பத்தையும்ப்ரார்த்தித்துப் பெறுவதில் ஒருவித பாதகமுமில்லை' என்று ஶாஸ்த்ரம் சொன்ன 'கட்டளையில், ஸ்ரீநிவாஸனிடம் பக்திப்ரகர்ஷத்தை அவர்கள் வேண்டுகின்றனர். திருவேங்கடவனும் அவ்வாறே அவர்களை அநுக்ரஹித்து, ப்ராஹ்மணோத்தமனிடம் தனக்குள்ள உகப்பை, அரசனை நோக்கி, வருமாறு வெளியிட்டருளினான்.

'देवदेवो नृपं प्राह न चास्य सदृशो भुवि ।
विप्रस्य मयि भक्तस्य तथैव नियतात्मनः ॥
असौ जन्मान्तरे राजन्! त्रैय्यन्तार्थप्रवर्तकः ।
भविष्यति तदन्ते च मत्सायुज्यमवाप्स्यति' ॥

[நம்முடைய பரம பக்தனும் பரிசுத்தாத்மாவுமான இப்ராஹ்மணனுக்கு ஈடோ எடுப்போ ஈரேழு உலகத்திலும் கிடையாது. (பிறர் செய்த பாக்யத்தால்) இவன் மற்றுமொருபிறப்பு பூமியில் பிறந்து ('यति नृपतिमतं सर्वतः स्थापयित्वा' என்றபடி விசிஷ்டாத்வைத) வேதாந்தத்தை எங்கும் வேர் ஊன்றச் செய்து, அதன் முடிவில் மோக்ஷமடைவான்] என்று. இவ்வாறாக இக்கதை இங்கு விஸ்தரிக்கப்பட்டது. வராஹபுராணத்தில் உள்ள

'कृष्णाख्य विप्रवेदान्त देशिकत्व प्रदाय च'

என்றதோடு இந்த புராணத்தில் க்ருஷ்ணசர்மாவைப் புகழ்ந்து பேசின.

'असौ जन्मान्तरे राजन्! त्रैय्यन्तार्थ प्रवर्तकः ।
भविष्यति ……… ॥' என்ற ச்லோகம், மிகவும் ஒத்திருக்கும் விஷயம் ஸ்பஷ்டமானதே.

இவ்வாறாக இரண்டிடங்களிலும், பேசப்பட்ட விஷயம் தம்மைப்பற்றினதே என்பதை, 'उत्प्रेक्ष्यते बुधजनैरुपपत्ति भूम्ना' என்றபடி தக்கச் சான்றுகளுடன் அக்காலத்திலேயே, பல பெரியோர்கள் சொல்லிக்கேட்டு, ஸ்வாமிதேசிகனும் திருவுள்ளம்பற்றி இருக்கிறார். இதற்கு அடையாளமாகவே ஸ்ரீ தயாசதகத்தின் முடிவுரையில்

'वेदान्तदेशिकपदे विनिवेश्य बालं
देवो दयाशतकमेतदवादयान्मास् ।
वैहारिकेण विधिना समये गृहीतं
वीणाविशेषमिव वेङ्कटशैलनाथः ॥'

என்ற ச்லோகம் ஸ்வாமியால் அருளப்பட்டு இருக்கிறது. இன்புறும் இவ்விளையாட்டுடையவனாகிய வேங்கடவன், ஒருஸமயத்தில், விளையாட்டை விளைவிக்கும் ஒரு விதிவசத்தினால் வீணையைக் கையில் எடுத்து, தந்தியை மீட்டி, நாத ரஸாநுபவம் பண்ணுமாப் போல், யாதுமறியாப் பாலகனாகிய என்னை வேதாந்ததேசிக பதத்தில், ப்ரதிஷ்டை செய்வித்து, என்னை வ்யாஜமாக்கி இந்ததயாசதகத்தைப் பாடுவித்து மகிழ்ந்தருளினான் என்று கருத்து. ஆக க்ருஷ்ணன் என்று பெயர் பெற்றிருந்த தனக்கு மறு ஜந்மத்தில் வேதாந்த தேசிகத்வத்தை திருவேங்கடமுடையான் தந்

தருளின பரிசையே 'वेदान्तदेशिकपदे विनिवेश्य बालं ......माम्' என்பதினுல் இங்கு அநுஸந்தித்தார் என்பது வெள்ளிடைமலே. அவன் செய்தருளின உபகாரத்தை க்ருதஜ்ஞதை தோற்ற அவன் ஸந்நிதியிலேயே பேசுவதல்லவோ பரிசு. ஸ்ரீநிவாஸனின் தயாகுணம் பற்றிய ஸ்தோத்ரம் அல்லவோ இது. ஸ்வாமி தேசிகனுக்கு 'வேதாந்தாசார்யர்' என்ற ஓர் விருது உண்டு. அதை ஸ்ரீரங்கநாதன் அவருக்கு அருளினுன். அதைப்பற்றி ஸ்வாமி பேசுவதானுல், ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில்தான் பேசுவர் என்பதையும் நாம் நன்கு காணலாம். 'स्वस्ति श्रीरङ्गभर्तुः' என்று துடங்கி 'तेन देवेन दत्तां वेदान्ताचार्यसंज्ञां अवहितबहुवित्सार्थमन्वर्थयामि' என்று முடிவாக ஸாதித்திருப்பது ப்ரஸித்தம். ஆக இம்மாதிரி பொதுவாக வேதாந்த தேசிகர் என்ற விருது தமக்கு வழங்கப்பட்டதையே 'वेदान्तदेशिकपदे विनिवेश्य बालम्' என்ற தயாசதக ஸூக்தியினுலும் குறிப்பிடுகிருர். தம்முடைய பூர்வஜந்ம வ்ருத்தாந்தத்தை அல்ல, எனில், அப்பொழுது அது ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியிலேயே விஜ்ஞாபிக்கப்பட்டு இருக்கவேண்டும். ஸ்ரீநிவாஸன் ஸந்நிதியில் அல்ல. ஆகையால், 'वेदान्तदेशिकपदे विनिवेश्य बालं' 'कृष्णाख्य विप्रवेदान्त देशिकत्व प्रदायच' என்பன போன்ற விடங்களில் திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் சொல்லப்பட்ட வேதாந்த தேசிகத்வம், வெறும் விருது மாத்திரம் அல்லவென்றும், அவ்விருதைப் பெறுவதற்கு யோக்யமாக விருந்த ஜந்ம விசேஷமே என்றும் தேறி நின்றது. முன் ஜந்மம் உண்டு என்பதும், பாக்ய விசேஷத்தால் அதில் பகவத் கடாக்ஷம் பெற்று மறு ஜந்மத்தில் ச்ரேஷ்டர்களாய் விளங்குவது என்பதும், பலருக்கும் உள்ள பொதுவான விதியேயாகும். 'இதனுல் ஸ்வாமி தேசிகனுக்கு என்ன சிறப்பு ஸித்தித்தது. என்று கேட்கலாம். கேண்மின்; கூறுகிறேம்.—ஸ்வாமிக்கு ஸ்ரீநிவாஸன் செய்த அநுக்ரஹாம்சத்தை இட்டு, நாராயணுதி நாமாக்கள் போல் 'कृष्णाख्य विप्रवेदान्त देशिकत्व प्रदः' என்றும் ஒரு திருநாமம் உண்டாக்கி அஷ்டோத்தர சதநாமாவளியிலும் அதைச் சேர்த்து, ஒரு ஸாத்விக ச்ரேஷ்டமான புராணம் படித்துள்ளது என்பது மிகவும் அஸாதாரணமான விஷயமல்லவா? அத்திருநாமத்தை அநுஸந்திப்போர்க்கே அவனுடைய திருவருள் பரிபூர்ணமாகக்கிட்டுமாகில், அத்திருநாமத்தில் அடங்கியுள்ள கதா பாத்ரமான ஸ்வாமி தேசிகனிடத்தில் அவன் திருவருள் இருப்பது எங்ஙனே? என்பதை மஹான்களே சிறிது யோசிக்கவேணும்.

அதே ப்ருஹ்மாண்ட புராணத்தில், திருவஹீந்த்ரபுர மாஹாத்ம்யத்திலும்

'कलौ युगे महानेषः ऋषिर्घण्टांशको हरेः ।
तपः कुर्वन् गिरौ तस्मिन् सिद्धिं प्राप्तो भविष्यति ॥'

என்று முதலான ச்லோகங்களால் ஸ்வாமி தேசிகனின் ப்ரபாவம் பரக்கப் பேசப்படுகிறது. 'ஔஷதாத்ரி' என்னும் அம்மாமலே மீது கலியுகம்வந்தவாறே (திருவேங்கடமுடையான்) திருமணி அவதாரமான ஓர் மஹான், ஜ்ஞானி, (மந்த்ர ஜபாதிரூபமான) தபஸ்ஸைச் செய்து பலம் பெறுவர்' என்ற சொல்லியுள்ளதும் ஸ்வாமி தேசிகன் விஷயம்தான் என்பதும் ஸ்பஷ்டம். இவ்விஷயமும் ஸ்வாமியின் திருச்செவிக்கு எட்டினதுதான் என்பதற்குப் ப்ரமாணம் உண்டு. 'उत्प्रेक्ष्यते बुधजनैः उपपत्ति भूम्ना घण्टाहरेस्समजनिष्ट यदात्मनेति' என்ற ஸ்வாமியின் திருவாக்கே இதற்கு மூலமாகும். 'घण्टांशको हरेः' என்ற புராணவசனம், 'घण्टा हरेः समजनिष्ट' என்ற ஸ்வாமி வாக்கால் நினேவுறுத்தப்படுகிறதல்லவா? இங்கு 'उत्प्रेक्ष्यते' என்றதினுல், 'கண்டாம்சம் என்ற பேச்சு, உலகத்தவரின் உத்ப்ரேக்ஷை—கல்பனே என்றல்லவோ ஸ்வாமியின் திருவுள்ளக்கருத்து தேறுகிறது. 'இது புராண ப்ரஸித்தம் என்று ஸ்வாமி நினேத்திருந்தார் என்று கொள்ள நமக்கு இங்கு இடமில்லேயே' என்று சிலர் சங்கிப்பர். அது அப்படி அன்று. இவ்விஷயம் புராண ப்ரஸித்தம் என்று ஸ்வாமிக்குத் தெரிந்து இருந்தாலும், வெளிப்படையாகத் தம்மைப்பற்றி 'என்னேப் புராணம் ப்ரசம்ஸித்த படி இது. இதைக் கேளீர் வந்து' என்றவாறு

ஸாத்விக சிரோமணியான ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கவடுக்குமா? ஆக அவையடக்கமாக 'பெரியோர் இப்படி உத்ப்ரேக்ஷைசெய்வர்' என்று தம்மை ஸ்வாமி நைச்சியத்துடன் கூறிக்கொண்டபடி இது என்பதே இங்கு உண்மை. ஆயினும் ஸ்வாமி ஸ்ரீ ஸூக்தியில் பதப்ரயோக ஸ்வாரஸ்யத்தை நன்கு கவனிப்பவர்களுக்கு 'இது உத்ப்ரேக்ஷாமாத்ரம்' என்ற புத்தி உண்டாகவேமாட்டாது. உத்ப்ரேக்ஷிப்பவர்களையும், அவர்களுக்கு அகப்பட்ட சான்றுகளையும்பற்றி இங்கு கூறும் பதங்கள் முறையே **'बुधजनैः उपपत्ति भूम्ना'** என்பவையே. உத்ப்ரேக்ஷிப்பவர்களை 'சிறந்த பண்டிதர்கள்' என்றும், அவர்களுக்குக் கிடைத்த சான்றுகளை 'தக்க உபபத்திகள்' எனவும் அவர்களும் அவைகளும் பலபலவாகவே இருக்கும்படி என்றும் இங்கு கூறுவதால் பல பண்டிதவர்யர்கள், தகுந்த பல ப்ரமாணோபபத்திகளைக் கொண்டு 'கண்டாம்சம்' என்று செய்த முடிவு வெறும் கல்பனையாக இருக்கமுடியாது என்று ஸ்வாமி தேசிகன் இங்கு கூறாமல் கூறி விளங்கவைக்கிறார். ஆக ஸ்வாமி தேசிகன் தம் பெருமையை நன்குணர்ந்திருந்தும் **'आत्मानं मानुषं मन्ये रामं दशरथात्मजम्'** என்று சக்ரவர்த்தித் திருமகனுக்கு தம்மிடம் மனுஷ்ய பாவனை ப்ரபலமாக நடந்தாற்போல், ஸ்வாமி தேசிகனுக்கும் தம்மிடம் 'நாம் பெரியோமல்லோம்' என்று ப்ராக்ருத மனுஷ்ய பாவனையே ஆங்காங்கு நடைபெறுவது அத்யாச்சர்யம். அங்கு சபரீ தாரா ப்ரப்ருதிகளுக்கு பெருமாளின் உண்மையான மஹிமை விளங்கினாற்போல்; இங்கும் ஸ்வாமியிடம் அத்யந்த பக்தி பரிதர்களுக்கு ஸ்வாமியின் பெருமைகள் விளங்காமற்போகா. என்றிவ்வாறாக ஸ்வாமி தேசிகன் பெருமையை யதாசக்தி பேசி, அவர் தன்னாலேயே 'பவிஷ்யதாசார்யன்' என்று கொண்டாடப் பெற்ற ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் பெருமையையும் சிறிது அநுஸந்திப்போம்.

இந்த வ்யாஸத்தின் ஆரம்பத்திலேயே ஆசார்ய ஸ்ரீஸூக்திகளும் புராணங்களோடு துல்யமான ப்ரமாணங்கள் என்று கூறியுள்ளோம். நமது மஹாதேசிகனுக்கு தேசிக ஸ்ரீஸூக்தியில் இடம் பெறும் பாக்யம் கிடைத்திருக்கிறது. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் முமுக்ஷுத்வாதிகாரம் கடைசிச்லோகம்

'विषमधु बहिष्कुर्वन् धीरो बहिर्विषयात्मकं
परिमितरसस्वात्मप्राप्तिप्रयासपराङ्मुखः ।
निरवधिमहानन्दब्रह्मानुभूतिकुतूहली
जगति भविता दैवात् कश्चित् जिहासितसंसृतिः ॥'

என்பதுதான் 'இந்திரிய இன்பங்களில் ஈடுபடாது, ஓரளவுக்குட்பட்ட ஆநந்தமுள்ள ஆத்மாநுபவம் என்னும் கைவல்யத்திலும் கிடந்து அலையாது, மஹாநந்தமான மோக்ஷத்தில் குதூஹலம் கொண்ட ஒரு மஹான் ஸம்ஸார வாழ்கையில் வெறுப்பு கொண்டவர், தரணியில் தோன்றப் போகிறார்' என்று ஸ்வாமி ஸாதிக்கிறார். இங்கு தேசிகனுக்குப் பிறகு ப்ரதான ஆசார்யராய் அவதரிக்கப்போகிற ஸ்ரீஆதிவண்சடகோபஸ்வாமியே **'जगति भविता कश्चित् दैवात् जिहासित संसृतिः'** என்று குறிக்கப் படுகிறார் என்று பல பெரியோர்கள் பணிப்பதுண்டு. அப்படிச் சொல்வது சாலவும் பொருத்தமுடையதே. ஸ்ரீ ஆதிவண்சடகோப ஸ்வாமியைவிட விஷயவைராக்யம் கொண்டவர் வேறு யாரும் இலர். ப்ரஹ்மசர்யம் என்னும் முதல் ஆச்ரமத்திலிருந்தே, இல்லற வாழ்கையைச் சிறிதும் விரும்பாமல், ஸந்யாஸ ஸ்வீகாரம் செய்து கொண்ட ச்ரேஷ்டர் அவர். அதனால்தான் ஸ்வாமி தேசிகன் தம்முடைய ஸ்ரீஸூக்தியில் அவரை அமைத்து அருளிச் செய்யும்படி இருந்தது. ஆக இவ்விதம் ஆசார்யர்களின் அருமை பெருமைகளை அகலமாகப் பேசிக்கொண்டே போகலாமாயினும், நாம் அதற்குச் சிறிதும் சக்தியற்றவர்கள். ஆகையால், இதை இத்துடன் முடித்துக்கொண்டு, அவர்களின் திருவடிகளில் தலையால் வணங்கி, இங்குள்ள குற்றங்களை காணக்கண்ணிடவேணுமாய் அவர்கள் தம்மையே வேண்டிநிற்கிறோம்.

ஸ்ரீ:

வள்ளலை வாழ்த்தும் வரதாரியன்

ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசாரியஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.

உயர்ந்ததும், போக்கியமானதும், உபகாரகமானதும், அருமையானதுமான ஓர் பொருள் இருப்பின் அது என்றும் வாழவேண்டுமென்று விரும்புவர் பெரியோர். மேலும், அது தமக்கு மிக நெருங்கிய தொடர்புடையதாக இருந்தால் வெளிப்படையாகவே வாழ்த்துவதும் போற்றுவதும் கூடச்செய்வர். ஆனால் வாழ்த்துதல் என்பது பெரும்பாலும் தம்மினும் வயதில் சிறியவரிடமே நேரும் என்பது உலகவியல்பு. எல்லைகடந்த ஜ்ஞாந, பக்தி வைராக்கியங்களில் சிறந்த அடியவர்கள் விஷயத்தில் 'இவ்வாழ்த்து' தன்வரம்பையுங்கடந்து பக்தியொன்றையே அடிப்படையாகக்கொண்டு விளங்கும். இவ்வித அத்தியாச்சர்ய அநுபவத்திற்கு முதல் எடுத்துக்காட்டாக அமைந்தவர் பட்டர்பிரானென்றும், விஷ்ணுசித்தரென்றும் கொண்டாடப்பட்ட பெரியாழ்வார். பரதத்துவ நிர்ணயம் செய்த தம்முடைய ஊர்வலத்தைக்காணப் பெருமகிழ்ச்சியுடன் ஸ்ரீவைகுண்டலோகத்திலிருந்து தம் தேவியர் புடைசூழக் கருடன்மேல் தோன்றிய பரமபுருஷனுடைய கோலத்தைக் கண்டு பரவசத்தோடு ஸேவித்ததோடு அமையாமல், நித்ய ஸூரிகள் காணத் தக்க பரமன் திருமேனிக்கு இவ்வுலகத்திலுள்ளாருடைய த்ருஷ்டி தோஷத்தினால் கண்ணெச்சில்பட்டு ஏதாகிலும் கேடு விளையுமோ என்று அஸ்தானே பயசங்கிதராய் 'பல்லாண்டு' பாடியவரன்றோ அவர்? அதன் பிறகு அருளாளனையும், எதிராஜன் மொழியின் வழி நடப்பவரையும், ஶரணாகதி யநுஷ்டிப்பவரின் பக்தியின் மேன்மையையும் ஒன்று சேர்த்து வாழ்த்திப்பாடினார் கவிவாதி சிங்கமாகிய ஸ்வாமி தேசிகன். அதன் பின்பு ஓர் பரம பக்தர், பகவான், தானே செய்யமுடியாத அநேக நற்காரியங்களை வெற்றியுடன் செய்து முடித்துக்கொண்டதும், குருவாரவதாரமென்று போற்றப்படுவதும், அத்விதீயமானதுமான அவதாரமாகிய தமது தகப்பனாரைக் குறித்து—அதிலும் அவரது திருமேனியைக் குறித்துப் பல்லாண்டு பாடுகிறார். அந்த வாழ்த்தின் சிறப்பையும் அதைப் பாடியவரின் மனோபாவங்களையும் சற்று ஆராய்வோம்.

அந்த பக்தர் தமது ஆசார்யனை முதன் முதலில் வீழ்ந்து வணங்கும் போதும், வணங்கி எழுந்தவுடனும், கும்பிட்டெழுவார் கும்பிட்ட பயனை எழுந்ததும் அடைந்தாற்போல அந்த பக்தருக்கு இலக்காகியது ஆசார்யனது திருவடிக்கமலங்களே. த்ரமிடோபநிஷதத்ரஷ்டாவுக்கு முதலில் துயரறு சுடரடி இலக்காகியது போலவும், பாண் பெருமாளுக்கு திருக்கமல பாதங்கள் இலக்காகியது போலவும் அவருக்கும் இலக்காகியது ஆசிரியரின் திருவடி யிணையே. கண்டவுடன் எண்ணுகிறார் பக்தர்:—'ஆஹா என்னே இத் திருவடிகளின் பண்பு! ஒப்புயர்வற்ற திருவடிகள்! துணையற்ற திருவடிகள்! தமக்குத் தாமே ஒன்றிற்கொன்று துணையான பொன்னடிகள்! பரமனது திருவடிகள்கூட ஓரோர் ஸமயங்களில் சகடாசுர மர்த்தனம் போன்ற நிக்ரஹரூபமான காரியங்கள் செய்யக்கூடும். இத்திருவடிகளோ, தம்மை யடைந்தவரை வாழ்விப்பதொன்றையே தமது கடமையாகக்கொண்டவைகள். தொண்டர்கள் எவ்வளவு குதூஹலத்துடன் இவைகளிடம் ஓடிவருகின்றனர்? அவர்களை இத்திருவடிகள் எவ்வளவு உகப்போடு கூவியழைக்கின்றன? அது மாத்திரமோ? இவைகளை யடைந்த அடியவர் எப்படிப்பட்ட மாறாதவுகப்பை யடைகின்றனர்? அது நிற்க, அனைவரையும் அநுக்ரஹிக்கும் திருவடியிணை தொண்டர்களுக்கு மாத்திரம் உகப்பாக இருப்பானேன்? ஓஹோ விரோதிகள் தமது பாப மிகுதியால் இவைகளை யணுக அஞ்சுகிறார்கள் போலும். அவர்களும் அஜ்ஞாத யாத்ருச்சிக ஆநுஷங்கிக ப்ராஸங்

கிக ஸுக்ருதமடியாகவந்து சேர்ந்தால் அவர்களையுகப்புடன் வரவேற்று அவர்களுக்கும் உகப்பைச் செய்வதில் தடையென்ன?' என்றிப்படி எண்ணிய அவ்வடியவர் தம்மிடம் உகப்போடு அடைந்த தொண்டருக்கு உகப்புடன் அமைந்த துணையாயுள்ள அந்தத்துணையடிகளை 'வாழி' என்று வாழ்த்துகிறார். இவரது அநுபவத்தையும், மனோபாவத்தையும் கண்ட அவ்வாசிரியர் அதைக் கண்டதினாலும் தமக்கு இயல்பாகவுள்ள பரம க்ருபையினாலும் தமது அகமும் முகமும் மலர்ந்து சிறிது சிரிக்கிறார். சிரிப்பொலிகேட்ட பக்தர் ஆசிரியரது முகத்தைச் சற்று நோக்குகிறார். கள்ளங் கபடமற்ற அந்த வெள்ளைச் சிரிப்பையும் அந்தக் காந்தி பெருகும் திருமுகத்தையும் கண்ட அந்த பாகவதர் தம் வசமிழக்கிறார். 'ஹா என்ன பரிசுத்தமானச் சிரிப்பு! என்ன பரிசுத்தமான திருமுகம்! இந்தப் பரிசுத்தமாகிய மந்த ஹாஸத்தை என்றும் ஓர் பூஷணமாகக்கொண்ட இம்முகத்தின் ஜோதிதான் என்னே! த்யானத்தில் ஸ்வாநுபவமாக பகவதநுபவம் பண்ணும்போதும், சிஷ்யர்களையநுக்ரஹிக்கும்போதும், பகவத் விஷய காலக்ஷேபத்தின்போதும், எதிரிகளுடன் வாதம் செய்யும்போதும், அவர்களை வெல்லும்போதும் எப்பொழுதும் மாறுபடாமல் சுத்த ஸத்வமயமான அந்த மந்தஹாஸத்துடன் விளங்கும் அத்திரு முகத்தின் பெருமைதான் என்னே! தேவரீருக்கே உரியதான பரிசுத்தத் தன்மை, தேவரீருக்கே உரியதான அந்தச் சிரிப்பு, தேவரீருக்கே உரியதும் தேவரீர் திருவுள்ளத்திற்கேற்றதும், அந்தக் கள்ளமற்றதுமான முககமலம் இவை என்றும் வாழ வேண்டும். வாழ்ந்து அனைவரையும் வாழ்விக்கவேண்டும்' என்று நினைத்த அந்த பக்தர் அவைகளையும் 'வாழி' என்கிறார்.

இதன் பின்பு பாஷ்ய, பகவத்விஷய, ரஹஸ்யாதிகளைப் பட்டமரம் பால் வடிக்கும்படியும் கல்லுருகவும் கயவர் திருந்தவும் காலக்ஷேபம் ஸாதிக்கும் திறமை அமைந்திருப்பதன்றோ ஸ்வாமியின் இப்பெருமைக்கெல்லாம்காரணம்? என்று நினைக்கிறார் அந்த பக்தர். அவ்வளவிலே ஸ்வாமியின் காலக்ஷேபக் கோலமும் காலக்ஷேபம் ஸாதிக்கும் சைலியும் அவரது கண்களுக்கு இலக்காகின்றன. 'ஆஹா! இவையன்றோ இப்புவியில் எம்பெருமானாலும் முடியாதவைகளை முடிக்கும் பெருமை பெற்றன' என்றும், 'இவை கல்பகோடி காலங்களிலும் நிலைத்து நின்று உலகங்களை வாழ்விக்க வேண்டுமே' என்று நினைத்து அவைகளுக்கும் ஓர் வாழ்த்துப்பாடுகிறார்.

இதன் பின்பு அக்ஷரத்தின் வாஸனையும் பட்டறியாதவர்களையும் தம்மிடம் ஆகர்ஷித்து நல்லவழிப்படுத்தும் தோற்றப் பொலிவுள்ளதும், ஜ்ஞாந வைராக்கியங்களைப் பூஷணமாகவுடைய தன்மையைக் காண்போருக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குவதும், சிஷ்யர்களையும் கற்றறிந்தவர்களையும் நல்வழியினின்றும் விலகாதிருக்கும்படிசெய்ய அநுஷ்டாந பர்யந்தமான ஜ்ஞாநமுடைமை என்பது இதுவேதான் என்று அறிவிப்பதுமான ஸ்வாமியினுடைய திவ்ய திருமேனியை ஸேவிக்கிறார். அத் திருமேனியில் அமைந்த த்வாதசோர்த்வபுண்ட்ரங்களையும், அவைகளின் லக்ஷணங்களையும், அழகிய ஸ்வாமியின் திருநாமத்தையும், கேட்டவுடனும், வாயினால் உச்சரித்த வுடனும் ஜ்ஞாந விகாஸத்தைச் செய்யும் அத்திருநாமத்தின் அழகையும், ஸகல ஐச்வர்யங்களையும் வழங்கும் அதன் வள்ளல் தன்மையையும் நினைக்கிறார். அவைகளையும் 'வாழி' என்று வாழ்த்துகிறார்.

அதன் பின்பு ஸ்வாமி என்றும் சாத்திக்கொண்டிருக்கும் திருமணித் தாழ்வடங்களையும் யஜ்ஞோபவீதத்தையும் ஸேவிக்கிறார். இவைகளை ஸ்வாமி தமக்கு ஓர் அலங்காரமாகக்கொண்டிருக்கிறாரா அல்லது இவைகள் தாம் ஸ்வாமியைத் தங்களுக்கு ஓர் அலங்காரமாகவும், சிறப்பாகவும், செல்வமாகவும் கொண்டிருக்கின்றனவா என்று இவ்விடத்திலே சிறிது ஸந்தேஹம் தோன்றுகிறது பக்தருக்கு. 'ஆஹா! இந்த மஹான் யாருக்குத்தான் செல்வமில்லை? சிறப்பு மிகுந்ததும் பரிசுத்தமானதுமான விச்வாமித்ர குலத்திற்கே திருக்கல்யாண குணங்கள் எல்லையற்று நிறையப் பெற்ற ஓர் திவ்ய ரத்தினமாவார் இவர். இவர் தமது குலத்திற்கும் செல்வம். அடியவர்களுக்கும் செல்வம். ராமானுஜ தர்சனத்தின் செல்வம். பரமன் படைத்த விபூதிகளின் செல்வம். பரமபுருஷனுடைய தனிச் செல்வம்' என்று யோசித்து 'பரிசுத்தமாகிய விச்வாமித்ர குலத்துதித்த செல்வமாகிய கலியாண குணங்கள் நிறைந்த உயர்ந்த ரத்தினமே தேவரீருக்கு இவ்வுலகில் அதிலும் கலியுகத்தில் கண்ணெச்சில்படாதிருக்க வேண்

19951

டுமே’ என்று நெஞ்சுருகி ‘நின் வடிவே வாழி’ என்று வாழ்த்துகிறார். அனைவரையும் ஆகர்ஷித்து வழிப்படுத்துவதில் ஸ்வாமியின் ஶாஸ்த்ர ஜ்ஞாநத்தினும் ஸ்வாமியின் திவ்ய திருமேனி ஒருபடி மேம்பட்டது. ஆதலின் அது நிச்சயமாக என்றும் வாழவேண்டுமென்று அந்த அடியவர் மனத்திலே தோன்றிற்றோ யாதோ அறியோம். அவர் ‘நின் வடிவே’ என்று ஏகாரம் ப்ரயோகித்திருப்பதை ரஸிகர்கள் தாம் ஆராய்ந்து கொள்ளத்தகும். இவ்வநுபவம் நிறைந்த பாசுரம் வருமாறு.

‘தொண்ட ருகக்குந் துணையடி வாழிநின்
றூ முறுவல்
கொண்டமுகம்வாழி வாழி வியாக்கியா
முத்திரக்கை
வண்டிரு நாமமும் வாழி மணிவட முப்புரி
நூல்
கொண்டசீர்த் தூப்புற் குலமணி
யேவாழி நின் வடிவே’

இனி இந்தப் பாசுரம் எழுந்த வரலாறு பின் வருமாறு. ஸ்ரீரங்கத்திலே சில்பி ராஜனை ஜயித்த வியாஜத்தாலே ஸ்ரீரங்கநாதனுடைய நியமனங்கொண்டு ஸ்ரீதேசிகனால் தமது திருக்கைகளாலேயே எறியருளப் பண்ணப்பட்ட தமது திவ்ய அர்ச்சா மூர்த்தியை ஸ்வாமி தேசிகன் திருவயிந்திர புரத்தில் எழுந்தருளியிருக்கும் போது ஸ்ரீ தேவநாதனும் இன்னும் அடியாரும் காணவேண்டுமென்று கடிய ஆவல் கொண்டு ஸ்வாமியைக் கேட்க, குமார வரதாசாரியர் (ஸ்ரீ நயினாராசாரியர்) தாம் ஜாக்ரதையாகத் தம்மிடம் வைத்துக் காத்து வந்த அந்த அர்ச்சா மூர்த்தியை ஸ்வாமி நியமனத்தினால் அனைவர்க்கும் காட்ட அனைவரும் கண்டு பரவசப்பட்டு நிற்க ஸ்ரீ தேவநாதனும் போரவுகந்து அந்த அர்ச்சாமூர்த்தியை தமக்கருகாமையிலேயே தமது ஸந்நிதானத்திலேயே ப்ரதிஷ்டை செய்வித்து உகந்தருளினான். அப்போது ஓர் புரட்டாசித் திருவோணத்தில் நயினாராசாரியர் பிள்ளையந்தாதியைத் தமது ப்ரஹ்மோபதேஷ்டாவும் குருவுமான மஹான் ஸந்நிதியிலே விஜ்ஞாபிக்கும் போது அங்குள்ளார் யாவரும் கேட்டுவுகக்கவும், அவர்களில் பலர் ஸ்வாமியினுடைய அர்ச்சாமூர்த்தி ஸ்வாமி திருமேனியை ஒற்றி எடுத்தாற்போலவும் பிள்ளையந்தாதியில் ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பவைகளுக்குப்பொருத்தமாகவும் இருப்பது கண்டு அந்த வடிவழகில் ஈடுபட்டு ஸேவித்து நிற்க அதைக்கண்ட நயினாராசாரியர் அத்திவ்ய மங்கள விக்ரஹத்திற்கும் தமது ப்ரபந்தத்திற்கும் ஓர் மங்களாசரணமாகவும் திருவந்திக் காப்பாகவும் அமையும்படிமனம் நொந்து பரவசமாகஇப்பாடலைப் பாடினார், என்பது பூர்வர்கள் ஸாதித்தபடி என்று எமது ஆசிரியரும் அபர தேசிகன் என்று ஜ்ஞாநியர்களால் போற்றப்பட்டவருமான ஸ்ரீ. உ. வே. சேட்டலூர் ஸ்வாமி ஸாதித்ததாகும்.

குறிப்பு:— தொண்டருகக்கும்–தொண்டரையுகக்கும், தொண்டர் தாம் உகக்கும்; துணையடி–தமக்குத்தாமே துணையான வடி, தொண்டருக்குத் துணையானவடி; நின்தூய்மை, நின்தூமுறுவல், நின்தூமுறுவல் கொண்டமுகம்;வாழி வியாக்கியா வாழி வியாக்கியா முத்திரை, வாழி வியாக்கியா முத்திரக்கை; வண்டிருநாமம்— வளப்பமுடைய திருப்பெயர், அழகிய திருப்பெயர், அழகிய ஐச்வர்யமான பெயர், அழகிய ஐச்வர்யம் போன்ற ஊர்த்வபுண்ட்ரம், ஐச்வர்யமாகிய ஊர்த்வபுண்ட்ரம்; மணிவடம்முப்புரிநூல் கொண்ட–மணி வடத்தையும் யஜ்ஞோபவீதத்தையும் தாம் கொண்டார், அவ்வகளும் இவரைக்கொண்டன; சீர் தூப்புல் குலமணியே– சிறந்த விச்வாமித்திர குலத்தின் ரத்தினமே; விச்வாமித்திர குலத்தின் செல்வமும் ரத்தினமுமானவரே; மிகப்பரிசுத்தமானவரும், செல்வம்போன்றவரும், கலியாண குணங்கள் நிறைந்தவருமான சிறந்த ரத்னம் போன்றவரே.

ஸ்ரீ:

க்ஷீராப்தி க்ருஷ்ணன்

ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம், திருமலை தாதாசார்ய ஸ்வாமி,
M. O. L. திருப்பதி.

ஸாமான்ய கவி ஒருவன் 'சாளுவாப்யுதயம்' எழுதலாம். கவி ஸாமர்த்யம் எவ்வளவு அதிகமாயிருந்தாலும் விஷயம் ஒரு ஸாதரண மனிதன் தானே. ஆகையால் அந்தக் காவியத்தைப் படிக்கும் விவேகிகள் அதிலுள்ள விசேஷங்களை யெல்லாம் மந்தரை பூண்ட ஆபரணங்களைப் போலக் காண்பார்கள். வேதாந்தாசார்ய பதத்தில் விளங்குகின்ற கவிஸிம்ஹம் இத்தகைய காவ்ய மியற்ற நினைக்கவும் கூடுமா? தான் இயற்றாது என்பது மட்டுமல்ல. ஆழ்வார்போல் பிறர் இயற்றுவதைப் பற்றியும் வருந்துகின்றது. 'சாளுவாப்யுதயம்' என்றவிதில் 'சாளு' என்ற இந்த இரண்டு எழுத்துக்களை எடுத்து விட்டு 'யாத' என்ற இவ்விரண்டெழுத்துக்களைவைத்துப்பெயரிட்டு அதற்கேற்றபடி காவ்யத்தை இயற்றினால் எவ்வளவு ச்ரேயஸ்கரமாயிருக்குமென்று ஸூசனம் செய்துகொண்டு தனது காவ்யத்திற்கு 'யாதவாப்யுதயம்' என்ற பெயரைக் கொடுத்தது. 'ஸ்ரீ க்ருஷ்ணாப்யுதயம்' என்றோ 'பகவதப்யுதயம்' என்றோ பெயரிடாமல் 'யாதவாப்யுதயம்' என்ற இப்பெயரிட்டதின் கருத்து இது.

மற்ற ரூபங்களில் எம்பெருமானை நாம் கண்ணால் கண்டு ஸேவித்துக் களிக்க முடியாது. ஆகையால் அங்கங்கு திருக்கோயில்கொண்டு அர்ச்சா ரூபத்தில் அவன் நமக்கு ஸேவை ஸாதிக்கின்றான். இந்த ஸேவையைப்பெறுவதிலும் நமக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. நாம் இருந்த இடத்திலேயே நினைத்தபோது ஸேவிப்பதற்கு அவனைச் சித்ரங்களில் எழுந்தருளப் பண்ணிக்கொள்வது மிகவும் அநுகூலம். சித்ரம் இருவிதம். ஒன்று கண்ணால் காணக்கூடிய வர்ணங்களால் ஆகியது. மற்றொன்று காதால் கேட்கக்கூடிய வர்ணங்களால் ஆகியது. இதில் இரண்டாவது வகையான சித்திரமெழுதுபவர்கள் 'மஹா கவி' என்னும் உயர்ந்த பெயரைப் பெறுகின்றனர். கல்லினாலும், சுண்ணாம்பினாலும் கோயில் கட்டி அதற்குள் எம்பெருமானை ப்ரதிஷ்டை செய்கின்றனர். அதே போல் எழுத்துக்களாகிற கல்லும் சுண்ணாம்புங்கொண்டு கோயில் அமைத்து அதற்குள் பகவான் ஸ்பஷ்டமாக ஸேவை ஸாதிக்கும்படிச் செய்கின்ற கவிச்ரேஷ்டர்கள் பெரும் சில்பக்காரர்கள் எனப்படுவதற்கும் உரியவராகின்றனர்.

ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த ஒவ்வொரு க்ரந்தமும் ஒவ்வொரு கோயில். ஒவ்வொன்றிலும் எம்பெருமான் அத்புதமாக ஸேவை ஸாதிக்கின்றான். அதில் மிகப் பெரிதான யாதவாப்யுதயக் கோயிலில் மொத்தம் இருபத்திநான்கு ஸந்நிதிகள். பகவத் பரமாய் மூன்று ஸந்த்யா காலங்களிலும் ஜபிக்கப்படுவதான காயத்ரி மந்திரத்தின் எழுத்துக்களின் எண்ணிக்கையை அநுஸரித்து ஸ்ரீமத் ராமாயணத்தில் க்ரந்த ஸங்க்யை இருபத்து நாலாயிரம் என்று அமைந்தது போல் இங்கு ஸர்க்கங்களின் ஸங்க்யை இருபத்து நான்காக அமைந்திருக்கின்றது. ஒவ்வொன்றிலும் எம்பெருமானுடைய ரூபங்கள் பல இருந்தபோதிலும் ப்ரதானமாக ஒன்றே கொள்ளப்படுகின்றது. இப்படி இருபத்துநான்கு ஸந்நிதிகளிலும் உள்ள ரூபங்கள் இவை:—

(1) க்ஷீராப்தி க்ருஷ்ணன்.
(2) அவதார அல்லது தேவகீ......
(3) கோகுல, அல்லது யசோதா...
(4) காளிய...

(5) வநசர...
(6) சித்ர...
(7) கோவர்த்தன...
(8) ராஸக்ரீடா...
(9) அக்ரூர...
(10) மதுரா...
(11) த்வாரகா...
(12) ருக்மிணீ...
(13) கல்யாண...
(14) ஜாம்பவதீ...
(15) சிசுபால ஸம்ஹார...
(16) நரகாஸுர ஸம்ஹார...
(17) பாரிஜாத...
(18) ஆகாச...
(19) ஸுப்ரபாத...
(20) பாணாஸுர ஸம்ஹார...
(21) பௌண்ட்ரக ஸம்ஹார...
(22) திக்விஜய...
(23) பாண்டவ...
(24) ச்ருங்கார க்ருஷ்ணன்.

சாச்வத மன்மத மன்மதனாகையாலே இந்த ச்ருங்கார க்ருஷ்ண ஸ்திதியிலேயே கண்ணனை வைத்துக் காவ்யம் முடியப்பெறுகின்றது. அதனாலேயே யாதவாப்யுதயம் என்ற பெயருமிடப்பட்டது. யாதவசரிதமென்று இடப்படவில்லை. இந்த இருபத்துநான்கு ரூபங்களில் முதலாவதான ஸ்ரீ க்ஷீராப்தி க்ருஷ்ணனை இப்போது நாம் ஸேவிப்போம்.

உத்தமமான காவ்யங்களை இயற்றுவதற்குரிய யோக்யதையைப் பெற்றது மாத்திரமின்றித் தான் இயற்றிய நூல்களை குமாரிலர் முதல் ஸர்வ ஶாஸ்த்ர க்ரந்தகாரர்களும் வாசித்துப் போற்றும்படி அவ்வளவு முற்பட்டவனாகஇருக்கும் பாக்யத்தையும் பெற்றவன் காளிதாஸ மஹாகவி. வேதாந்தங்களில் ப்ரதிபாதிக்கப்பட்ட பகவந் மஹிமையை உள்ளபடி அறிந்து அவனுடைய திவ்ய சரணாரவிந்தங்களில் ஈடுபட்டு அபார பக்தியோடு மனமுருகி லயித்த மஹா பாகவதோத்தமன் இவன். இவ்வித ஸ்வபாவத்திற்கேற்றபடி இவன் க்ஷீரஸமுத்திரத்திலுள்ள எம்பெருமானுடைய ஸேவையையும் பெறவிரும்பினான். ராவணனாலே பீடிக்கப்பட்ட தேவர்களாகத் தன்னை ஆக்கிக்கொண்டு அதைப் பெற்றான்.

'தேவர்களும் ஸமுத்திரத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள்; பகவானும் விழித்தெழுந்தான். ஆதிசேஷன் மேல் எழுந்தருளியிருந்து அவனது படங்களிலுள்ள மணிகளின் காந்தியாலே மிக விளங்கும் எம்பெருமானை அவர்கள் ஸேவித்தார்கள். திவ்யாலங்காராலங்க்ருதையான ஸ்ரீ மஹாலக்ஷ்மி தான் தாமரைப்பூவில் உட்கார்ந்து தனது மடிமேல் வைக்கப்பட்டத் தனது கைகளால் எம்பெருமானுடைய திருவடிகளைத் தாங்கிக்கொண்டிருந்தாள். அப்பொழுதே அலர்ந்த தாமரைபோல் இருந்தன எம்பெருமானுடைய திருக்கண்கள். இளம் வெய்யில் போன்றிருந்தது அவன் தரித்திருந்த பீதாம்பரம். அகன்ற மார்பில் கௌஸ்துபம் ஜ்வலித்தது. திவ்யாபரண பூஷிதங்களான நான்கு திருக்கைகளோடு அவன் ஸமுத்திரத்தின் நடுவே உண்டான ஒரு தனிப் பாரிஜாத வ்ருக்ஷம்போல் இருந்தான். நித்ய ஸூரிகளான திவ்யாயுதங்கள் 'ஜய விஜயீபவ' என்று போற்றிக்கொண்டிருந்தன. அருகே விநீதராய்க் கை குவித்து கருத்மான் ஸேவித்துக் கொண்டிருந்தார். ஸுப்ரபாதம் சொல்லவந்த ப்ருகு முதலிய முனிவர்களை எம்பெருமான் குளிரக் கடாக்ஷித்துக் கொண்டிருந்தான்' என்றிவ்விதமானது அங்குப் பெறப்பட்ட பகவத் ஸேவை. இவ்விதமான பகவத் ஸேவையைப் பெற்று மகிழ்ந்த தேவர்கள் நமஸ்கரித்து ஜகத் காரணத்வம் முதலாக அவனுடைய பெருமையை யெல்லாம் சொல்லி ஸ்தோத்திரம் பண்ணினார்கள். இதையெல்லாம் ஸ்ரீ ஆளவந்தார் மிகவும் ரஸித்தார். சில பரிஷ்காரங்களையும் செய்யலாமென்று கருதினார். தேவர்கள் முதலில், தனது உடலைச் சயநமாக்கியும் படத்தை விதானமாக்கியும் விளங்கிய ஆதிசேஷனையும் பிறகு அந்த சயனத்தில் அமர்ந்திருந்த எம்பெருமானையும் ஸேவித்தார்கள். சயனத்தின் முன்பக்கத்தில் கீழ் தாமரையில் உட்கார்ந்திருந்த ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் மடியில் அவளுடைய கைகளில் அமர்ந்த திருவடிகள்முதல்க்ரமமாக மேலே பார்வையைச் செலு

த்தி செந்தாமரைக் கண்களோடு கூடிய திரு முகமண்டலம் வரையில் எம்பெருமானுடைய திருமேனியை ஸேவித்தார்கள். பிறகு அரையில் உடுத்திய பீதாம்பரம், திருமார்பில் விளங்கிய கௌஸ்துபம், திருக்கைகளில் ப்ரகாசித்த திவ்யாபரணங்கள் திவ்யாயுதங்கள் இவற்றை யெல்லாம் ஸேவித்தார்கள். அதன்பிறகு ஒரு பக்கத்தில் கருத்மானும் மற்றொரு பக்கத்தில் மஹர்ஷிகளும் நின்றுஸேவிப்பதை ஸேவித்தார்கள். தேவர்களுக்கு எம்பெருமானை க்ஷீரஸமுத்திரத்திற்குச் சென்று ஸாக்ஷாத்கரித்து ஸேவிக்க ஸாமர்த்யமுண்டாகையால் அப்படி அவர்கள் ஸேவித்துப் பிறகு ப்ரணாமம் பண்ணி ஸ்துதித்தது தகும். மனிதரான நமக்கு அது ஸாத்யமன்று. ஆகையால் சாஸ்திரங்களால் அறியப்பட்ட அவனது மஹிமையை அநுஸந்தித்து சரணாகதி பண்ணி அதனால் பெறவேண்டிய பரிபூர்ண ப்ரஹ்மாநுபவமாகிற பரமபுருஷார்த்தத்தைப் பற்றிய தன் மனோரதத்தை வெளிப்படுத்தும் முறையில் தனது பகவத்ஸேவையை ஆளவந்தார் அமைத்தார்.

தேவர்கள் தமது வெளிக் கண்களால் பார்க்கும்போது முதலில் ஆதாரமான ஆதிசேஷனைக் காண்பது ஸஹஜம். இவர் மனக்கண்ணால் பார்க்கும்போது ஸர்வ சேஷியான எம்பெருமானையே முதலில் காண்பர். உலகமளந்த திருவடி, பீதாம்பரமணிந்த அரை, திருநாபி, திருமார்பு, புஜங்கள், திருமுகமண்டலம், குழல் என்ற க்ரமத்தில் திருமேனியையும், பிறகு மேலிருந்து கீழ் என்ற க்ரமத்தில் கிரீடம், தோள்வளை, ஹாரம், கண்டிகை, கௌஸ்துபம், அரைநாண், பாதஸரம் என்கிற இந்தத்திருவாபரணங்களையும், அதன் பிறகு சக்கரத்தாழ்வான் முதலிய திவ்யாயுதங்களையும் உள் கண்ணால் கண்டு அநுபவித்தார். அதன்பிறகு துளஸியும் வநமாலையும் ஸமர்ப்பித்து அநுபவித்தார். இப்படி பகவதநுபவம் பூர்ணமாக ஆனபிறகு பிராட்டியை ஸேவித்து எம்பெருமான் பக்கத்தில் ஆதிசேஷன்மேலேயே எழுந்தருளப்பண்ணி அவர்களுடன் இந்தஸர்ப்பராஜனை ஸேவித்தார். மஹாகவியின் ஆதிசேஷனே இந்த ஆதிசேஷனும். ஆனால் அந்த ஆதிசேஷனுடைய படத்தில் இருந்த உத்தம மணிகளின் ப்ரகாசம் எம்பெருமானுடைய திருமேனியை விளங்கவைத்தன. ஆளவந்தாருடைய ஆதிசேஷனின் படத்திலிருந்த மணிகளுக்கு அவ்வித ப்ரகாசமில்லை. 'அவனுடைய ப்ரகாசத்தினால் மற்றதெல்லாம் ப்ரகாசிக்கின்றது என்று ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன வாகையால் இந்த மணிகள் அவன் ப்ரகாசத்தினால் ப்ரகாசிக்கின்றன என வேண்டுமேயன்றி திருப்பிச் சொல்வது யுக்தமன்று. ஆனால் அந்த மணிகளின் ப்ரகாசம் என்னதான் செய்கின்றதெனில் அது முழுவதும் எம்பெருமான் எழுந்தருளியிருந்த திவ்யஸ்தானமெல்லாம் பரவி அதை ப்ரகாசமாக்கியது என்றார். தவிரவும் படங்கள் எல்லாம் உயர்ந்து அகன்று நீண்டு எம்பெருமானுடைய சிரஸ்ஸுக்குமேல் குடை போலவும் விதானம் போலவும் அமைந்திருக்குமாகையால் அவற்றின் பேலுள்ள மணிகளின் கிரணங்களால் கீழ் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானது திருமேனிக்கு ப்ரகாசம் ஏற்படுவதாகச் சொல்வது பொருந்துமா என்றுமேலோசிக்கவேண்டுமென்ற திருவுள்ளமுமிருக்கலாமென்று தோன்றுகின்றது.

இனி கருத்மானுடைய சரீரத்தில் அம்ருதாஹரணத்தின் போது வஜ்ராயுதத்தைப் போட்டு இந்த்ரன் அடித்ததினால் உண்டான வ்ரணத்தின் வடு மஹாகவியின் கண்ணிற்குத் தோன்றிற்று. எம்பெருமான் தோளில் எழுந்தருளியிருந்து ப்ரயாணம் செய்யும் ஸமயங்களிலெல்லாம் தொங்கவிடப்பட்ட இரண்டு திருவடிகளும் கருத்மானுடைய சரீரத்தில் உரைத்துகொண்டேயிருக்குமாகையால் அதனால் உண்டான வடுவை ஆளவந்தார் அநுபவித்தார்.

பக்ஷிராஜனுக்குப் பிறகு மஹாகவி மஹர்ஷிகளைச் சொன்னவிடத்தில் விஷ்வக்ஸேனரையும் பொதுவாக மற்ற மந்திரிகளையும் சொன்னார்.

ஸ்ரீவைகுண்டத்திலும் திருப்பாற்கடலிலும் பகவதநுபவம் ஒரேவிதமாயிருக்கும். ஆகை

யால் மஹாகவியின் அநுபவத்தை அப்படியே ரஸித்து ஆளவந்தார் சில விசேஷங்களையும் சேர்த்தார். இவ்விருவரையும் பின்பற்றி மூன்றுவதாக ஸ்ரீ தேசிகன் தரும் பகவத் ஸேவையை இனிப் பெறுவோம்.

தேவர்கள் பூமிப் பிராட்டியோடு க்ஷீரஸாகரத்திற்குச் சென்றார்கள். ஆனால்—

'ते च प्रापुरुदन्वन्तं बुबुधे चादिपूरुषः ।
भोगिभागासनासीनं ददृशुस्तं दिवौकसः ॥'

என்று மஹாகவியின் தேவர்கள் தாங்கள்போன தத்க்ஷணமே பகவானைக் கண்டவிதமாகக் கவிஸிம்ஹத்தினுடைய தேவர்கள் காணவில்லை. நம்மைக்காட்டிலும் அதிகமாகச் சில தேஜோவிசேஷங்கள் தேவர்களுக்கு இருக்கலாம். ஆனால் எம்பெருமானுடைய பெருமையைப் பார்க்கும் போது அவர்களுக்கும் நமக்கும் விசேஷமொன்றுமில்லை. ஸமுத்திரத்தில் முழுகும் பரமாணுவுக்கும் பர்வதத்திற்கும் என்னவிசேஷமென்றார் பரமாசார்யன். ஆகையால் இந்த தேவர் ப்ரணாம ஸ்தோத்ரங்களைப் பண்ணிய பிறகே தர்சனத்தைப் பெற்றார்கள்.

'दुग्धोदधिशयं देवं दूरमेत्याभितुष्टुवुः ॥'

க்ஷீரஸமுத்திரத்தைக் கண்டார்கள். ஆனால் அங்குள்ள எம்பெருமானுடைய திருக்கோயிலைக் காணவில்லை. அதனால் அது இங்கிருக்குமோ இங்கிருக்குமோ என்று வெகு தூரம் சென்று திரிந்து பிறகு பல காரணங்களால் இங்குதான் இருக்குமென்று நிச்சயித்து அதற்கு அபிமுகமாக ப்ரணாமங்களைப் பண்ணி எழுந்து, கைகளைக் குவித்து வணங்கி நின்று ஸ்தோத்ரம் பண்ணினார்கள். அதனால் ப்ரஸந்நனான எம்பெருமான் (दयया दर्शनं ददौ) க்ருபை பண்ணி தன் திருக்கோயிலோடும் மற்ற விபவங்களோடும் தரிசனம் கொடுக்க (ततस्तं ददृशुर्देवाः) அதன் பிறகே தேவர்கள் அவனைக்கண்டார்கள். எப்படி? 'शेषपर्यङ्कमास्थितम्' ஆதிசேஷன்மேல் வீற்றிருக்கக் கண்டார்கள். நேராகப் பார்க்கும்போது ஆதாரம்தோன்றியே அதன் மேலுள்ளது தோன்றுமாகையால் மஹாகவியின் க்ரமமே இங்குள்ளது.

'लक्ष्म्या सह निषेदुष्या पद्मलक्षणलक्ष्यया'

மஹாகவியின்படியே எம்பெருமான் ஸேவைக்குப் பிறகு பீதாம்பராதி ஸேவைக்கு முன் உடனே பிராட்டியின் ஸேவை. ஆனால் ஆளவந்தார் ஸேவித்தபடி ஆதிசேஷன் மேல் எம்பெருமானோடு கூடவே அவளும் எழுந்தருளியிருந்தாள். எம்பெருமானுடைய திவ்ய சரணாரவிந்தங்களைப் பிராட்டி தனது காராவிந்தங்களில் தரிக்கும் ஸமயம் உண்டு. அதை தேசிகன் அத்யாச்சர்யமாக

'अव्यासङ्गं जलधिशयनादुत्थितस्यात्मधाम्नः
पत्युः पुण्यं प्रथमनयनस्पन्दितं प्राप्तुकामा ।
नित्यापूर्वश्रुतिपरिमलं न्यस्तलीलारविन्दा
पादाम्भोजं सह वसुधया धारयामास पद्मा ॥'

என்று மற்றொரிடத்தில் ஸாதித்தார். இங்கு யோகநித்ரையிலிருந்து எழுந்தவுடன் ப்ரதம கடாக்ஷத்தைப் பெற விரும்பிய பிராட்டி பகவானுடைய திருவடியைத் தரித்திருந்தாள் எனப்பட்டிருக்கிறது. இது ஏகாந்த கார்யம். பெருமாள் பிராட்டி என்ற இந்த த்வந்த்வம் அந்யோந்ய லக்ஷ்யம். ஒன்று மற்றொன்றுக்கு லக்ஷணம். ஸர்வேச்வரன் யார் என்றால் லக்ஷ்மீபதி எனவேண்டும். லக்ஷ்மி யார் என்றால் விஷ்ணுபத்நி எனவேண்டும். இப்படியே எம்பெருமானுக்கு எதனால் பெருமை என்றால் லக்ஷ்மீபதியாயிருப்பதினாலே என்றும் பிராட்டிக்குப் பெருமை எதனால் என்றால் விஷ்ணுபத்நியாயிருப்பதினாலேயென்றும் கூறவேண்டும். ஆகவே நித்திரையிலிருந்தபோது பெறப்படாத பகவத் கடாக்ஷத்தை விழித்த அதே க்ஷணத்தில் பெற மிக ஆசைப்பட்டுத் திருவடியை மெதுவாக எடுத்துத் தன் மடியில் வைத்துக்கொண்டிருப்பாள் பிராட்டி. லக்ஷ்மீகடாக்ஷம் இல்லாவிட்டால் தனக்கு ஸர்வேச்வரத்வம் ஸித்திக்காதாகையால் எம்பெருமானும் எழுந்தவுடன் அவள் திருமுகத்தைப் பார்க்க ஆசைப்படுவான். ஆகையால் இது ஏகாந்தம். பக்தர்கள் வந்து ஸேவிக்கும் போது தம்பதிகளாய் ஸேவை ஸாதிக்க வேண்டுமாகையாலும் வந்தவர்களின் மநோரதம் பூர்ணமாகும்படி பகவானிடத்தில் அவ்வப்போது பல விஷயங்

கள் விண்ணப்பிக்க வேண்டியிருக்குமாகையாலும் ஆஸ்தாநத்தில் பிராட்டி எம்பெருமானேடுகூட அவன் பக்கத்திலேயே அமர்ந்திருக்க வேண்டும்.

'श्रियः पद्मनिषण्णया:' என்று மஹாகவி பிராட்டியைப் பத்மாஸநத்தில் எழுந்தருளப்பண்ணியிருந்தான். ஆளவந்தார் **'तया सहासीनमनन्त भोगिनि'** என்று ஆதிசேஷன் மேலேயே எழுந்தருளப்பண்ணியதைப் பார்த்து 'ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்குத் தாமரை லக்ஷணமாயிற்றே. அது இல்லாமல் செய்துவிட்டதே' என்று மஹாகவி ஓர் ஆக்ஷேபம் செய்தான். அதற்கு அந்த ஆசார்யச்ரேஷ்டர் 'கவிதார்க்கிகஸிம்ஹத்தைக் கேள். அது தகுந்த ஸமாதானம் கூறும்' என்றார். ஸ்ரீபாஷ்யாதிகளைப் பண்ணும்படி பகவத்ராமானுஜனுக்குப் பண்ணியருளிய நியமநம் போன்ற நியமநம் இது. 'தஸ்யோஸ்மி' என்று மிகவுகந்த தேசிகன் **'पद्मलक्षण लक्ष्यया'** 'தாமரை ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு லக்ஷணமென்பது உண்மை. ஆனால் அது ஆஸநமாகவே இருக்க வேண்டிய நிர்ப்பந்தமில்லை. அதோ திருக்கைகளில் அது இருக்கின்றது பார்' என்றார். பகவத்ஸேவையில் 'தேவீபூஷணஹேத்யாதி' என்பது தேசிகன் உகந்த க்ரமம். ஆகவே பிறகு பூஷண ஸேவை.

கல்லும் தங்கமுமாக விருக்கும் பூஷணங்களைச் சிறிது காலம்போட்டுக்கொண்டிருக்கலாம். ஸ்வரூபத்தில் அவை கடினமாகவும் பாரமாகவும் இருப்பனவாகையால் சற்று நேரம் ஆன பிறகு எப்பொழுது கழற்றிவைப்போம் என்ற நிலை உண்டாகும். இத்தகைய ஆபரணங்களை எம்பெருமான் திருமேனியில் ஸேவிக்க ஸஹியாத பகவத் ராமானுஜன் **'निरतिशय सुगन्ध-निरतिशयसुखस्पर्श......दिव्यभूषण'** என்று விசேஷித்தார். இதன் ரஸத்தையறிந்த தேசிகன் இன்னொரு விசேஷணத்தையும் சேர்த்து

'सुकुमारसुखस्पर्शसुगन्धिभिरलङ्कृतम् ।
स्वविग्रहगुणारामप्रसूनैरिव भूषणैः ॥' என்றார்.

மார்த்தவம், தொட்டால் வெகு இன்பமாயிருப்பது, உத்தமமான பரிமளம் அதாவது- வாஸனை. இந்தக் குணங்களே பூஞ்செடிகள். இவைகள் ஒரு உத்யாநத்தில் வளர்ந்திருக்கின்றன. எது அந்த உத்யானம்? எம்பெருமானுடைய திருமேனிதான். வேறொன்றுமில்லை. இந்தப்பூஞ்செடிகள் வளர்ந்து பூத்தன. எங்கே அந்தப் பூக்கள். அந்த உத்யான வனத்திலேயே இருக்கின்றன. எவை அவை? இதோ திருமுடியில் க்ரீடம் முதல் திருவடியில் பாதஸரமளவாகவுள்ள ஆபரணங்களாக நமக்குத் தோன்றுகின்றனவே அவைதான் அந்தப் பூக்கள்' என்கிறார். பூஞ்செடிகள் மெதுவாகவும் தொடுவதற்கு இன்பமாகவும் பரிமளமுள்ளவைகளாகவும் இருக்கமாட்டா. அவற்றில் பூத்த புஷ்பங்களுக்கு அந்தக்குணங்களெல்லாம் இருக்கும். இந்த விசேஷத்தைப் புத்தியில் வைத்து இந்தக் குணங்களாகிற பூஞ்செடிகள் பூத்த பூக்கள் திருவாபரணங்கள் என்றால் அவற்றுக்குள்ள மார்த்தவாதி குணங்களை நாம் கவியின் கருத்துப்படி உணரமுயலவேண்டும்.

மற்றொருவிசேஷத்தையும் தேசிகன் இங்கு ஸாதிக்கின்றார். **'दिव्याभरणभूषितैः'** திவ்ய ஆபரணங்களாலே அலங்கரிக்கப்பட்ட என்றான் மஹாகவி. **'स्फुरत्किरीट'** என்றாரம்பித்து க்ரீடம் முதலியவற்றால் உஜ்வலனை அதாவது விளங்குகின்ற என்றார் ஆளவந்தார். லோக ரீதியில் இது உசிதந்தான். ஆனால் எம்பெருமான் விஷயத்தில் இது உண்மையன்று என்றார் தேசிகன்.

'अङ्गैरमितसौन्दर्यैरनुकल्पित भूषणम्'

ஆபரணமில்லாமல் அந்தந்த அவயவத்தை ஸேவித்தால் வெகு அழகாயிருக்கின்றது. ஆனால் பரிஜனங்கள் ஆபரணம் பூட்டி ஸேவித்தே வழக்கப்பட்டவர்களாகையால் அவைகளை பூட்டிவிடுகிறார்கள். ஆபரணங்களும் எம்பெருமான் திருமேனி ஸம்பந்தமில்லாமலிருக்க ஸம்மதிக்கிறதில்லை. இதனால் ஒரு ஸம்சயம் உண்டாகின்றது. ஆபரணம் ஸமர்ப்பிக்காமலிருப்பது நல்லதா ஸமர்ப்பிப்பது நல்லதா என்று. இதில், 'இந்த இரண்டு பக்ஷங்களையும் கொள்வோம். ஆனால் ஸமர்ப்பிக்காமலிருப்பது உத்தம பக்ஷம். ஏனெனில் அவயவங்களின் இயற்கையழகு மறையாமல் பூர்ணமா

கத் தோன்றுமாதலின் ஸமர்ப்பிப்பது அதற் கடுத்த பக்ஷம். அவற்றால் இயற்கையழகு மறைக்கப்படுகின்றதாதலின்' என்று நிர்ண யம் செய்கின்றார் தேசிகன். நெய்யை உபயோ கிப்பது முக்ய கல்பம். அது துர்லபமான போது எண்ணெயை உபயோகித்துக்கொள் வது அநுகல்பம். ஆபரணமில்லாத திருமேனி ஸேவை துர்லபமாகையால் அவற்றுடன் கூடிய அதன் ஸேவையை அநுகல்பமாகப் பெற்றுக் கொள்வோம் என்றபடி.

இனி ஆயுதஸேவை. மஹாகவியின் ஆஸ் தானத்தில் நித்யஸூரிகளான ஆயுதங்கள் 'ஜய விஜயீபவ' என்று சொல்லி எம்பெருமா னைப் போற்றிக்கொண்டிருந்தன. ஆளவந்தா ருடைய ஸ்ரீவைகுண்ட ஆஸ்தானத்தில் இவை கள் பகவானுடைய திருமேனியில் ஆபரணங் கள் போலவே இருந்து அதை உஜ்வலமாக்கின. தேசிகனுடைய திருப்பாற்கடல் ஆஸ்தானத் தில் அவை தமது ஸ்வரூபத்திற்குத் தக்க நிலையில் திகழ்ந்தன.

'उत्तेजितजयोत्साहमायुधैरनघोद्यमैः ।
शौर्यविक्रमशक्त्याद्यैः सहजैः स्वगुणैरिव ॥'

இப்படியும் அப்படியும் திரும்பிப்பார்ப்பன் எம்பெருமான். உத்ஸாஹம் நிறைந்த ஆயு தங்கள் கண்ணில் படும். உடனே அவனுக்கும் உத்ஸாஹம் உண்டாகும். 'தன்னைச் சார்ந்த வர்களுக்கு உபத்ரவம் செய்துகொண்டிருப்ப வர் யாராவது இருக்கின்றார்களா? அவர்களை அடக்கப்போவோமா' என்று ஆலோசிப் பான். ஆயுதங்கள் ஆயுதசாலை என்று ஓரி டம் தனியே அமைத்து அதில் வைக்கப்பட் டிருக்கும். மஹாராஜாக்கள் யுத்தம் அல்லது மற்றொன்று நடக்கும்போது இது வேண்டும் அது வேண்டும் என்று பொறுக்கி எடுத்துக் கொள்வார்கள். அது போன்ற நிலை இங்கில்லை. பகவானை விட்டு ஒரு க்ஷணகாலமும் அகலாம லே அவை இருக்கும். ஆகவே இவை பகவத் ஸ்வரூபத்தில் ஸர்வதா இருக்கும் சௌர்யம், வீர்யம், சக்திமுதலிய குணங்கள் போன்றவை. திருமேனிக்குச் சோபையைத் தரும் ஆபர ணங்கள் அதன் குணங்களின் பரிணமம்போன் றவை எனப்பட்டன. ஆச்ரிதர்களைக் காப் பாற்ற உதவும் ஆயுதங்கள் ஸ்வரூபகுணங்கள் போன்றவை எனப்பட்டன.

தனித்தனியே ஒவ்வொன்றையும் ஸேவித்த பிறகு எல்லாவற்றையும் சேர்த்து முடிவில் ஸேவிக்கிறது என்பது தேசிகனுக்கு எங்கும் வழக்கம். அது இங்கும் நடக்கின்றது.

'स्वकान्तिजलधेरन्तः सिद्धसंहननं स्वतः ।
महिम्नाजात वैचित्र्यं महानीलमिवोदितम् ॥'

எல்லையிராமல் எங்கும் பரவும் காந்தியாகிற ஸமுத்ரத்தின்நடுவே உண்டான ஒரு மஹாநீல மணி போன்றிருந்தான் எம்பெருமான். சுரங் கங்களில் உண்டாகி உலகத்திற்குள்ளடங்கிய எந்தமஹாநீலமும் இங்கு உபமானமாகக்கொள் வதற்கு யோக்யதை வாய்ந்ததன்று. ஆகவே தனது ப்ரதிபா சக்தியினால் ஒரு மஹாநீலத் தைக் கல்பிக்கின்றார். அந்த மஹாநீலத்தின் ஸ்வரூபம் பஞ்சாயுதங்களைக் கொண்டு சதுர் முகன் ஸ்ருஷ்டித்ததாக இருக்கக் கூடாது. தானே அமைந்ததாகஇருக்கவேண்டும். அதோ வெகு மாஹாத்ம்யம் வாய்ந்து அதனால் கைகால் பூஷணம் ஆயுதம் என்றிவ்விதமாகவுள்ள பல தோற்றங்களுள்ளதாக இருக்கவேண்டும். அவ் வித மஹா நீலமணி போன்றவனாக ஸேவை ஸா தித்தான் பகவான் என்றார். (இங்கு வ்யாக்யா னத்தில் स्वरूपकरणवर्णाद्याकारवैचित्र्याम् என்றி ருக்கிறது. இதில் करणवर्णादि என்ற விடத் தில் करचरणादि என்றிருப்பது உசிதம்.)

இனி கருத்மத்ஸேவை. இங்கு मुक्तशेषविरोधेन ஸர்ப்ப ஜாதியான ஆதிசேஷனோடு பகை யில்லாமலிந்தார் கருடன் என்றான் மஹாகவி. பகையில்லாதது மாத்ரமா. 'शेषकङ्कणशोभिना' ஆதிசேஷன் அவர் கையில் வளையாகவுமிருந்து அவரை விளங்கச் செய்தார் என்கிறார் தேசி கன். வஜ்ராயுதத்தினால் உண்டான வடுவை மஹாகவியும் பெருமாள் திருவடிபட்டு உண் டான வடுவை ஆளவந்தாரும் சொன்னார்கள். பெருமாள் திருவடி ஸம்பந்தத்தினால் உண் டான பரிமளம் அப்படியே அவர் உடம்பில் ஒட்டிக்கொண்டிருக்கிறதென்கிறார் தேசிகன். 'स्वाङ्घ्रिसौरभदिग्धेन'

திருப்பாற்கடலிலும் உலக நடவடிக்கைகளைக் கவனிக்கவேண்டிய காரியமிருப்பதால் விஷ்வக்ஸேநர் இங்கு இருப்பது அவச்யம் என்று கருதி அவருடைய ஸாந்நித்யமும் இங்கு ப்ரதிபாதிக்கப்படுகின்றது. ஸ்ரீ வைகுண்டத்தில் போல் ஸர்வ ப்ரஹ்மாண்ட கார்யங்களையும் இங்குச் சிந்திக்கவேண்டியதில்லையாகையால் ஆளவந்தார் வர்ணித்த மந்திரிகள் இங்கு இடம் பெறவில்லை. மஹாகவியின் ஸேவையில் எம்பெருமான் அப்போதுதான் எழுந்திருந்தாராகையால் ஸுகசயந ப்ரச்னம் பண்ண அதாவது ஸுகமாகத் தூங்கிற்றா என்று கேட்க மஹர்ஷிகள் வந்திருந்தார்கள். இங்கு ஆஸ்தானம் நடந்துகொண்டிருப்பதால் அவர்களுடையஸாந்நித்யமில்லை.

இப்படி பூர்வர்கள் வழியே சென்று சில விசேஷ பரிஷ்காரங்களுடன் திருப்பாற்கடல் கண்ணன்ஸேவையை நாமெல்லோரும் பெறும்படி ஸ்ரீ தேசிகன் அநுக்ரஹம் செய்திருக்கின்றார்.

இனித் திருப்பாற்கடல் எம்பெருமானை ஸேவித்தோமேயன்றி கண்ணனை ஸேவிக்கவில்லையே. க்ஷீரஸாகரத்தில் கண்ணன் எப்படியிருப்பார்? எனில், நாம் ஸத்கார்யவதிகள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். அங்கில்லாவிட்டால் பிறகு எப்படி க்ருஷ்ணன் அவதரிக்கமுடியும். அங்கும் க்ருஷ்ணன் எழுந்தருளியிருக்கின்றார். கோகுலத்திலும் க்ஷீராப்திசயனன் அவதரித்து விளையாடுகின்றார் என்பது நமது ஸித்தாந்தம்.

प्रबन्धान् कर्तारः प्रतिजनपदं सन्ति बहवः त्रयी चूडाचार्यैः सह गणनमर्हन्ति न हि ते ।
समन्ताज्जृम्भन्तां दिशि दिशि शकुन्ताः कृतरवाः प्रकल्पन्ते किं ते सरणिमनुसर्तुं खगपतेः ॥

[ஒவ்வொரு ஊரிலும் க்ரந்தங்களைச் செய்தவர்கள் பலருளர். அவர்கள் ஸ்ரீ வேதாந்தாசார்யருடன்கூட கணக்கிடத் தகுந்தவர்களல்லர். நாலு திக்குக்களிலும் சப்தித்துக்கொண்டு பக்ஷிகள் பறந்தாலும் கருடனுடைய ஸரணியை (கதியை) அவைகள் அநுஸரிக்கமுடியுமா என்ன?]

அருடரு மாரண தேசிகனேயெங்க டேப்புற்றேவே
வருகவி தார்க்கிக சிங்கமே வாதியர் வாழ்வறுத்தா
யிருகையுங் கூப்பி யுரைக்குமிவ் விண்ணப்ப மொன்று கேளா
யுருவ வேனக்கரு ளாயெண்ணு முள்ளமுன் றேண்டரையே.

[அடைந்தவர்க்கு அருள்புரியும் ஸ்ரீ வேதாந்த தேசிகனே! தூப்புலில் அவதரித்த எங்கள் தெய்வமே! கவிதார்க்கிக சிங்கமே! பிரதிவாதிகளின் வாழ்வை ஒழித்தவரே! அடியேன் இப்பொழுது இருகையும் கூப்பி செய்யும் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்து அடியேனுக்கு ஒரு வரம் தந்தருளவேணும். அதாவது தேவரீருடைய திருவடியே தஞ்சமாகப் பற்றிய மஹாநுபாவர்களிடம் அடியேன்மனம் ஈடுபடும்படி செய்தருள்வதேயாம்.]

पठन्तु कतिचिच्छठाः खफछठेति वर्णच्छटाः घटःपट इतीतरे कटुरटन्तु वाक्पाटवात् ।
वयं वकुलमञ्जरी गळदरीणमाध्वीझरी धुरीणगुणरीतिभिः फणितिभिः प्रमोदामहे ॥

[சிலர் 'க, ப, ச, ட,' என்று வ்யாகரணத்திலுள்ள அக்ஷர ஸமாம்நாயத்தைப் படிக்கட்டும்; பேச்சில் ஸாமர்த்யமுள்ள மற்றும் சிலர் கடம், படம் என்று உரத்தி சப்திக்கட்டும்; நாமோவெனில் மகிழம்பூ மாலையிலிருந்து பெருகுகிற குறைவில்லாத தேன் ப்ரவாஹத்தின் பெருமையையுடைய ஆழ்வாரின் ஸ்ரீ ஸூக்திகளைக்கொண்டு ஸந்தோஷிக்கிறோம்.]

ஸ்ரீ:

தேசிக மஹோபகாரமும் நமது கடமையும்

ஸ்ரீ. உப. வித்வான், மேல்பாக்கம், நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, வ்யாகரணாத்யாபகர்.
ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.

இப்புவனியில் மனிதர்கள் ஒவ்வொருவரும் ஸௌகத்தையே விரும்புகிறார்கள். கஷ்டத்தை சிறிதளவும் விரும்புகிறதில்லை. பசி, தாகம் முதலியவைகளால் ஶரீரத்தில் அவ்வப்போது அநேக விதமான க்லேசங்கள் ஏற்படுகின்றன. அவற்றைத் தவிர்ப்பதற்காக அந்நபாநாதிகள் தேவையாயிருக்கின்றன. இவைகளை ஸம்பாதிக்க தனம் மிகவும் இன்றியமையாததாக யிருக்கிறது. ஆகையினால் ஶரீர உழைப்பினால் தனத்தை ஸம்பாதித்து ஶரீரத்தைப் போஷிப்பதையும் ஸௌகபோகங்களை அநுபவிப்பதையும் முக்ய நோக்கமாகக் கருதுகின்றனர். இதற்கு ஓய்வு என்பதே கிடையாது. இப்படி போஷித்து வளர்க்கப்பட்ட தேயாயினும் இந்த ஶரீரம் என்றும் நிலைத்து நிற்கக்கூடியதல்ல. **'जातस्य हि ध्रुवो मृत्युः'** (பிறந்தவனுக்கு இறப்பு நிச்சயம்) என்றும் **'अन्तवन्त इमे देहाः'** (ஶரீரமும் நாசமுள்ளவை) என்றும் கீதையில் சொன்னபடி இந்த ஶரீரம் ஒரு நாள் அழிந்து போவதையே கண்கூடாகக் காண்கிறோம். ஆஸ்திக ஸித்தாந்தத்தில் உள்ளவர்களும் நவீன விஜ்ஞாநிகளும்கூட இந்த ஶரீரத்தைக்காட்டிலும் வேறுபட்டு அழிவற்ற ஆத்ம வஸ்து ஒன்று உண்டு என்பதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஒரு மனிதன் கிழிந்த சட்டயை விட்டெறிந்து புதிய சட்டைகளை அணிவதுபோல் இவ்வாத்மா ஒவ்வொரு தேஹத்தையும் விட்டு வெவ்வேறு புதிய சரீரங்களை அடைகிறது.

> **'वासांसि जीर्णानि यथा विहाय**
> **नवानि गृह्णाति नरोऽपराणि ।**
> **तथा शरीराणि विहाय जीर्णा**
> **न्यन्यानि संयाति नवानि देही ॥'**

என்று கீதை இவ்வர்த்தத்தை போதிக்கிறது. இப்பொழுது எடுத்திருக்கும் ஜன்மம்போல் இதற்கு முன்பும் எத்தனையோ ஜன்மங்களை நாம் எடுத்திருக்கிறோம்.

இப்படி அழிவுள்ள ஶரீரத்திற்குப் போஷணாதிகளைச் செய்கிறோமே தவிர அழிவற்ற ஆத்மாவின் ஸௌகத்தைப்பற்றி அநேகமாக ஒருவித ப்ரயத்நமும் செய்ய முற்படுவதில்லை. விவேகியான ஒவ்வொருவரும் **'शरीरमाद्यं खलु धर्मसाधनम्'** என்கிற ரீதியில் தர்ம ஸாதநங்களுக்குள் ஶரீரம் ப்ரதாநமானபடியால் அதற்கு க்ஷேமத்தை ஸம்பாதிப்பதுபோல ஆத்மஸௌகத்தை ஸம்பாதிக்கிற விஷயத்திலும் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

இவ்வாத்மாவுக்கு 'எது ஸௌகரம்' என்று நோக்குங்கால் இதை அறிவிக்கவே வேதவேதாந்தங்கள் முற்படுகின்றன. இவைகளில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களுக்குள் ஸாரமானது— 'பக்தி, ப்ரபத்தி. இவற்றுள் தனக்குரிய ஏதேனுமொரு உபாயத்தினால் பகவானை வசீகரித்து எல்லையற்றதும் எக்காலத்திலும் அழிவற்றதுமான மோக்ஷம் என்கிற நித்ய ஸௌகத்தை அடையலாம்' என்பது.

> **'भक्त्या परमया वाऽपि प्रपत्त्या वा महामते ।**
> **प्राप्योऽहं नान्यथा प्राप्यः मम कैङ्कर्यलिप्सुभिः ॥'**

என்கிற ப்ரமாணம் இங்கு நோக்கத்தக்கது.

இப்படிப்பட்ட தத்வஜ்ஞாநத்தை ஆசாரியர்கள் விநயத்துடன் வந்தடைந்தவர்களுக்குத் தெளியவைப்பார்கள். இப்படிப்பட்டவாசார்யர்களுள் நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் ஏற்பட்ட கலக்கங்களை உபதேசமூலமாய் போக்கி பின்புள்ள சிஷ்யர்களும் கலக்கம் தெளியும்படி அநேகம் க்ரந்தங்களை இயற்றியவர் ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகன். இம்மஹான் காஞ்சீபுரத்தில் 'தூப்புல்' என்கிற அக்ரஹாரத்தில் 'புண்டரீகாக்ஷ யஜ்வா'

என்று ப்ரஸித்தி பெற்றவரின் புதல்வரான 'அநந்த ஸூரி'யின் குமாரராய் அவதரித்து பால்யம் முதலிலேயே அதி தேஜஸ்வியாய் தகுந்த காலங்களில் 'சௌளம்' முதலிய ஸம்ஸ்காரங்களை அடைந்து இருபது வயதுக்குள் ஸகல சாஸ்த்ரங்களையும் வேதாந்தார்த்தங்களையும் கற்றறிந்து விளங்கினர். ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் சாஸ்த்ரங்களில் பாண்டித்யம் பெற்றவர்களுக்கு உபயுக்தமான, தத்வடீகை, தத்வமுக்தாகலாபம், ஸர்வார்த்த ஸித்தி முதலிய க்ரந்தங்களையும் எளிய, தமிழ் கலந்த ஸம்ஸ்க்ருத ரூபமான மணிப்ரவாள நடையில் சில்லரை ரஹஸ்யங்கள், ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய க்ரந்தங்களையும் இயற்றியுள்ளார். செவிக்கினிய செந்தமிழ்பாக்களையும் அநேகம் பாடியுள்ளார். ஆங்காங்கு திவ்யதேசங்களுக்குச் சென்று பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹங்களில் ஈடுபட்டு அதன் பரிவாஹரூபமாக உருக்கமாகவும் அநேகம் மந்த்ர பீஜாக்ஷரங்களடங்கினதாயுமுள்ள பல ஸ்தோத்ரங்களையும் செய்தருளியிருக்கிறார். காவ்யம், நாடகம், ஸந்தேசம், ஸுபாஷிதம் முதலிய க்ரந்தங்களையும் அருளிச்செய்திருக்கிறார். கற்றவர்களுக்குள் இதுவரையில் இவ்வளவு க்ரந்தங்கள் செய்தவர் ஒருவருமில்லை என்று கூறினும் மிகையாகாது. இவருடைய க்ரந்தங்களை நோக்குங்கால் ஒருவிடத்திலும் பூர்வாபர விரோதமில்லாதபடி ஸாதிக்கும் பாணியும், சாஸ்த்ரங்களிலும் உலகவ்யவஹாரங்களிலும் மற்றும் அநேக கலைகளிலும் உள்ள இவருடைய பாண்டித்யம் ஆச்சர்யப்படுவதற்குரித்தாகும். ஸாதாரணமான மனிதனால் இவ்வளவு க்ரந்தங்களை இயற்ற மனத்தால் நினைக்கவும்கூட முடியாது. இப்படி வியக்கத்தக்க முறையில் க்ரந்தங்களை அமைத்துள்ள இவர் 'அவதார புருஷரே' என்பதில் ஸந்தேஹமே யிருக்க இடமில்லை. கீர்த்திக்காக ஸ்ரீ தேசிகன் இந்த க்ரந்தங்களை இயற்றவில்லை என்பது அந்தக் க்ரந்தங்களைப் பார்ப்பவர்களுக்கு தெள்ளென விளங்கும். ஸ்ரீ ஸ்வாமி தேசிகன், இவ்வளவு க்ரந்தங்களைச் செய்து சிஷ்யர்களான நம்மிடம் என்ன எதிர்ப்பார்க்கிறார்? அதை நாம் கொஞ்சமாவது நிறைவேற்றுகிறோமா? என்ற விஷயங்களை சற்று ஆராயவேண்டும். 'பண்டிதர் முதல் பாமரர் வரை உள்ள எல்லோரும் அவரவர்களுடைய யோக்யதைக்குத் தகுந்தவாறு ஸ்ரீ தேசிகனுடைய க்ரந்தங்களுள் கூடியமட்டில் சிலவற்றை ஆசார்யர்களிடம் க்ரஹித்து தெளிவடைந்து தங்கள் ஆத்மஸுகத்தையடையவேண்டும்' என்பதே ஸ்ரீதேசிகனின் நோக்கமாகும். பண்டிதர்களுக்கு ஸாமான்ய சாஸ்த்ரங்களில் வல்லமை யிருந்தபோதிலும் **'शास्त्रज्ञानं बहुक्लेशं बुद्धेश्चलनकारणम्'** என்றபடி ஸந்தேஹத்திற்கே ஹேதுவாகயிருப்பதால், **'उपदेशाद्धरिं बुध्वा विरमेत् सर्वकर्मसु'** என்கிற ரீதியில், வேதாந்தங்களின் உட்கருத்தையறிய ஸ்ரீ தேசிகன் க்ரந்தங்களே தஞ்சமாகின்றன.

ஒவ்வொரு ஆஸ்திகனும் பகவத்பக்தி செய்யவேண்டுவது அவசியம். இந்த பகவத் பக்தியை வ்ருத்தி செய்ய ஸ்ரீ தேசிகன் ஸ்தோத்ரங்கள் மிகவும் உபயோகப்படுகின்றன. இந்த ஸ்தோத்ரங்களை ஐஹிகமான பலனை உத்தேசித்து அநுஸந்திப்பவர்களுக்கும் மந்த்ர ப்ரபாவத்தினால் அந்தந்த பலன்கள் கிடைக்கும். விரக்த சிகாமணியான ஸ்ரீ ஸ்வாமி தேசிகனுக்கு இவ்வுலகில் ஆகக்கூடிய கார்யம் ஒன்றுமில்லை. ஆகையால் உலக க்ஷேமத்தை நோக்கமாகக்கொண்டே ஸ்தோத்ரங்களை இயற்றியுள்ளார். **'कामानातनुतादशेषजगतां कामासिका केसरी'** (காமாஸிகா ந்ருஸிம்ஹன் எல்லா உலகங்களுடைய அபீஷ்டங்களையும் கொடுக்கவேண்டும்.) **'अव्यासुर्भुवनत्रयीम्'** (கூர்மாவதார மூர்த்தியின் மூச்சுக்காற்றுகள் மூன்று உலகங்களையும் காப்பாற்றவேண்டும்.) என்றல்லவோ ஸ்வாமி தேசிகனின் ப்ரார்த்தனை.

'பகவத்பக்தியைக்காட்டிலும் பாகவதகைங்கர்யம் உயர்ந்தது' என்றும் அதைவிட **'आचार्यः श्रेष्ठो गुरूणां'** என்று சொல்லப்பட்ட ஆசார்யனின் கைங்கர்யம் மிகவும் உத்க்ருஷ்டமானது' என்றும் ஸ்ரீ தேசிகனின் ஸ்ரீ ஸூக்தி. **'शरीरमर्थं प्राणांश्च सद्गुरुभ्यो निवेदयेत्'** என்று சாஸ்த்ரங்களில் சொன்னபடி சரீரத்தாலும் தனத்தாலும் ஆசார்ய கைங்கர்யம் செய்வது ஒவ்வொருவருக்கும் ஸ்வரூபத்திற்கு உகந்தது,

ஸ்ரீ தேசிகனுக்குக் கொஞ்சம் பிற்காலத்தில் அவதரித்த ஸ்ரீமதாதிவண் சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் பால்யத்தில் தேசிகன்போல் இருபது வயதிலேயே வேத வேதாந்தங்களில் நிபுணரானார். பிறகு விரக்தாக்ரேஸரான இந்த ஸ்வாமி, ஸ்ரீ ந்ருஸிம்ஹனின் ஸ்வப்ன மூலமான நியமனத்தின் பேரில் ஸ்ரீ அஹோ

பிலம் சென்று ஸங்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்து ஸ்ரீ லக்ஷிமீந்ருஸிம்ஹனை ஆராதித்துக்கொண்டு தேசிக க்ரந்தங்களை உபதேசித்தும் ஆத்ம கார்யங்களை அநுஷ்டித்தும் சிஷ்யர்களை உய்விப்பித்தார். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் இந்த ஸ்வாமியைக்கொண்டே லோகோஜ்ஜீவனம் செய்விக்கத் திருவுள்ளம்பற்றினபடியாலும், ஸிம்ஹாஸநாதிபதிகள் எல்லோரும் இவர் திருவடிகளில் ஆச்ரயித்து க்ருதார்த்தரானார்கள்' என்கிற சரித்திர வாயிலாகவும், அநேகம் ஆசார்ய பரம்பரைகளில் இப்பொழுதும் ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தங்களுக்கு இவர் ஆசார்யனாக ஓதப்படுவதாலும், இந்த ஸ்வாமியின் மஹிமை ஸுவ்யக்தமாகும்.

ஸமீப காலத்தில்தான் ஸ்ரீ தேசிகன் க்ரந்தங்களின் மூலமாய் ஸம்ப்ரதாயார்த்தங்களில் ஏற்படும்கலக்கங்களைத்தெளிவித்தபடியால்அந்தக்ரந்த ப்ரசாரம் செய்வதிலேயே இந்த ஸ்வாமி, தன் வாழ்நாளைக் கழித்தும், அநேகம் திவ்ய தேசங்களில் ஆசார்ய திவ்ய விக்ரஹ ப்ரதிஷ்டை, கோபுரம், மண்டபம் முதலிய அநேக கைங்கர்யங்களைச் செய்வித்தும் ஆசார்ய கைங்கர்யத்திற்கு ஓர் உதாஹரணமாய் விளங்கினார்.

இந்தஸ்வாமி அநுஷ்டித்து காண்பித்த ரீதியை இரண்டுவிதமாகக் கொள்ளலாம். ஒன்று 'ஆசார்ய க்ருத்யம்' அதாவது:—வேதவேதாந்த ரஹஸ்யார்த்தங்களில் பரிபூர்ண ஜ்ஞாநம் பெற்ற ஆசார்யன், தான் பெற்ற ஜ்ஞாநத்தை தன்னலம் கருதாது இவ்விருள் தருமா ஞாலத்துள்ளார்க்கு பூர்வாசார்ய க்ருந்தங்கள் மூலமாய் உபதேசித்தருளி அவர்களை க்ருதார்த்தர்களாக்குவது.

மற்றொன்று 'சிஷ்யக்ருத்யம்' அதாவது:- ஆசார்யோபதேசம் பெற்ற சிஷ்யன் ஆசார்யன் உபதேசித்த அர்த்தங்களை நன்றாகத் தெளிந்து அதின் பலனாக பகவத் பக்தியும், பாகவத பக்தியும், அதிலும் உயர்ந்த ஆசார்ய பக்தியும், செய்து ஆசார்ய திவ்ய மங்கள விக்ரஹ ஸேவைகளில் ஈடு படுவதும், இப்படித் தன்னைத் திருத்தி நித்ய ஸூரிகளுடன் சேருகைக்கு அர்ஹனாம்படி பண்ணின மஹோபகாரத்தை நினைத்து இதற்கு ப்ரத்யுபகாரம் ஒன்றுமில்லை என்பதை அறிந்து க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் செய்தும் இப்படி இருக்கும் சிஷ்யனை உத்தேசித்து தான் செய்த க்ருஷி பலித்ததென்று ஆசார்யன் திருவுள்ளமுகக்கும்படி இருப்பதும் வேண்டும்' என்பது.

இப்படி ஆசார்யகத்திற்கும் சிஷ்யத்வத்திற்கும் இந்த ஸ்வாமி ஓர் உதாஹரணமாய் விளங்கினார்.

நாம் குடும்பவாழ்க்கை ஒழிந்துபிறகு கடைசியில் ஆத்மஸுகத்தைத் தேடிக்கொள்ளலாம் என்று எண்ணினால் அது ஒருநாளும் ஈடேறாது. வாழ்க்கைக்குத் தேவையானவைகளை ஸம்பாதிப்பதும், ஆத்ம ஸுகத்திற்காக முயலுவதும் பரஸ்பரம் முரண்பட்டதல்ல. பிணையடிக்கும் போதே மாடுகள் வைக்கோலைத் தின்று தன் காரியத்தை நிறைவேற்றிக்கொள்வதுபோல் நாமும் ப்ரதி தினமும், நம் குலாசாரங்களை அநுஷ்டித்துக்கொண்டு முன்கூறிய ஆசார்யர்களின் மஹோபகாரங்களை மனத்தில் வைத்து, ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் க்ரந்தங்களில் கொஞ்சகாலமாவது காலத்தை செலவழித்து க்ருதார்த்தர்களாகவேண்டும்.

மாநிலத் தோதிய மாமறை மன்னிய நற்கலைக
ளானவை செப்பு மரும்பொரு ளத்தனை யேயருளுந்
தூநெறி காட்டு மிராமா னுசமுனித் தோத்திரஞ் செய்
யூனமி லாப்புலம் மானோர் புகழன்றி யுய்விலையே.

[எல்லோருக்கும் ஹிதமான அம்சங்களையே போதிக்கும் வேதங்கள், அவற்றைத் தழுவி நிற்கும் ஶாஸ்த்ரங்கள் ஆகிய இவற்றின் உண்மைப் பொருளையும் ப்ரபத்தி மார்க்கத்தையும் காட்டியருளிய ஸ்ரீபாஷ்யகாரரின் புகழை வாய் வெருவிப்பேசி மகிழ்ந்திருப்பவரான ஸ்ரீ தேசிகனுடைய ஒப்பற்ற கீர்த்தியை வாயாரப் புகழ்வதன்றி நமக்கு வேறு வாழ்வில்லை.]

ஸ்ரீ:

ஹம்ஸஸந்தேசம்

ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யஸ்வாமி, M. A., B. L. அட்வோகேட், திருச்சி.

कृत्वा तस्मिन्बहुमतिमसौ भूयसीमांजनेयात्
गाढोन्मादः प्रणयपदवीं प्राप वार्तानभिज्ञे ।
विश्लेषेण क्षुभितमनसां मेघशैलद्रुमादौ
याच्ञादैन्यं भवति किमुत कापि संवेदनार्हे ॥

மேகத்தில் வரிக்கப்பட்ட தூதன் சைதந்ய மற்ற தூதன். இங்கே வரிக்கப்படும் தூதன் சைதந்யமுடைய ஹம்ஸம். யக்ஷனுக்கு வந்த உந்மாதத்தில் அசேதநத்தை தூதராக வரித்துப் பேசி தூதனுப்புவது கூடாதென்கிறதையுமறியாமல் மிதமிஞ்சி இருந்தது. அதை மேககவி ‘காமார்தா ஹி ப்ரக்ருதிக்ருபணா ச்சேதநாசேதநேஷு’ [காமத்திஞல் மிகவும் பீடிக்கப்பட்டு விரஹாவஸ்தையில் உந்மாதம் விஞ்சியிருப்பவர் தூதனுப்புப் விஷயத்தில் சேதநர் அசேதநரென்கிற பிரிவைக்கூட அறியக்கூடாத பேதைகளாக இருப்பர்] என்கிற அர்த்தாந்தரந்யாஸத்தால் பொருத்திஞர். இங்கு சைதந்யமுள்ள ஹம்ஸ தூதவிஷயத்தில் அப்படி உரைக்க அவச்யமில்லை. அசேதந மேகாதிகளையும் தூதராக விரஹிகாமிகள் உந்மாதத்தில் வரிப்பதைக்காட்டி இங்கே சைதந்யமுடைய திர்யக்கான ஹம்ஸவிஷயத்தில் கைமுத்ய ந்யாயத்தால் இந்த தூதவரண ஔசித்யத்தை இங்கே பொருத்துகிறுர். ஹநுமாரிடத்திற்சாட்டில் இந்த தூதனிடம் ராமன் பஹுமானம் செய்கிறுர் என்பதைக்கூறி இந்தக்காரணத்தைக்கொண்டு ராமனுடைய உந்மாதம் மிகவும் மிஞ்சிப்போய்விட்டதைக்காட்டுகிறுர். முன்சொன்ன ச்லோகமுடிவில் இந்த தூதன் கிடைத்தது தனக்கு அருட்பெரும் பாக்யமென்று நினைத்து ஸந்தோஷித்ததாகக் கூறப்பட்டது. தூதஹநுமான் கிடைத்த பாக்யத்திலும் அதிசபாக்யம் இந்த தூதலாபத்தால் கிடைத்ததாக உந்மாதமிகுதியால் ராமன் நினைத்தார். ‘தஸ்மிந் ஆஞ்ஜநேயாத் பூயஸீம் பஹுமதிம் அஸௌ க்ருத்வா’. ‘தஸ்மிந்’ என்று பகவத்வாசியான தத்பதத்தை தூதஹம்ஸம் விஷயத்திலும், ‘அஸௌ’ என்று ராமன்விஷயத்திலும் ப்ரயோகிப்பதால் ராமனுக்குத் தன்னிடத்தில் மநுஷ்யத்வாபிமானமும் ஹம்ஸத்தினிடத்தில் மிகவும் பூஜ்யத்வாபிமானமும் இருந்ததென்னும் ரஸம் விளங்குகிறது. ‘யோ ப்ரஹ்மாணம் வர்ஷம் வேத தேவா கவி ந தம் விது:’ என்ற ச்ருதியை நினைக்கவேணும். ‘ஏநம்’ என்று பகவானையும் அவரை அறிந்த ப்ரஹ்மவித்தை ‘தம்’ என்றும் அங்கே குறித்துள்ளது. ‘தஸ்மிந்’ என்று ஹம்ஸத்தினிடத்தில் அநிர்வசநீயமான மஹிமை இருந்ததெனும் ராமபுத்தியைக் காட்டுகிறது. அந்த புத்தியால் அப்பொழுதுதான் லங்கை போய் திரும்பிவந்த காஷ்டாபூதமஹிமையை யுடைய ஹநுமத்தூதனிலும் ஹம்ஸத்தினிடம் அதிக பஹுமதியைச் செய்தார். ஆஞ்ஜநேயரிடத்தில் இவருக்கு கௌரவத்தின் பூமா இருந்ததென்று பஹுமதி சப்தத்தால் ஸூசிக்கிறுர். ‘பஹோர்பாவோ பூமா’ என்ற பூமாதிகாரணத்தில் காட்டியபடி விபுலமான கௌரவத்தை பஹுமதி சப்தம் ஸூசிக்கிறது. ஆஞ்ஜநேயரிடத்தில் காஷ்டாகதமான கௌரவபூமா வைக்கப்பட்டாலும் அந்த பூமாவிலும் பூயஸீ ஆயிற்று. இந்த ஹம்ஸதூதனிடத்தில் செய்த பஹுமதி என்று ரஸம். பூஜையை உபசாரத்துடன் ஹம்ஸத்திற்குச் செய்ததாக ‘சக்ரே’ என்று முன் ச்லோகத்தில் குறித்த உபயபதியான தாதுவின் ஆத்மநேபதப்ரயோகத்தால் அந்த பூஜை செய்த ஸந்தோஷபலம் செய்த இவருக்கே யொழிய அதை யறியாததும் அறியக்கூடாததுமான ஹம்ஸத்திற்கல்ல என்று அழகாக ஸூசிக்கப்பட்டது. பூஜாக்ரியையங்கே குறித்தாய்விட்டது. அப்படி செய்ததற்குக்

காரணத்தை இங்கே 'கூகவா ஹூயவீம் வஹாஉதிம்' என்று மாநஸக்ரியையை செய்த தைக் குறிக்கிறார். முன் செய்ததாகக் கூறப் பட்ட காயிகக்ரியைக்கு இந்த மாநஸக்ரியை காரணம். ஹநுமத்துதருக்கு தமக்கு அந்த காலத்தில் வேறு ஸ்வம் இல்லாமல் ஸர்வஸ்வ பூதமான திருமேனியின் பரிஷ்வங்கத்தை அளித்ததுபோல் இந்த ஹம்ஸ தூதனுக்கு அளிக்கவில்லை. கிடைத்த அலப்யலாபமான தூதர் ஓடிப்போய்விடும். சற்று தூரத்திலிருந்தே ஸாஸிஜத்தைப்பரித்து தளங்களாலுபசாரம். இப்படி அதிசயிதமான பூஜையைச்செய்த தற்குக் காரணம் 'மாஹொ நாதஃ' உன்மாதத்தின் மிக்க அதிசயம் என்று காட்டப்படுகிறது. 'வூணயவஉவீம் வாதஹ்ாநஹிஜெகூாவ' இவர் சொல்லும் வார்த்தையை இந்த தூதன் அறியமாட்டாது. இவர் சொல்லும் செய்தியைத் தெரிந்துகொள்ளாது. இவருடைய நீண்ட ஸந்தேசத்தை மனத்தில் வாங்கினாலும் தரித்தாலும் அங்கே போய் பேசித் தெரிவிக்கவும் முடியாது. இப்படிப்பட்ட அநபிஜ்ஞனை ஸ்வதஸ்ஸர்வஜ்ஞரான இவரும் உன்மாதமிகுதியால் தூதனாக வரித்து ப்ரணய மார்க்கத்தில் இரங்கினார். இந்த தூதர் அநபிஜ்ஞர் என்பதால் ஹநுமாருடைய அபிஜ்ஞதமத்வம் தூதமார்க்கத்திற்கே இட்டுப் பிறந்த மஹிமையும் ஸூசிக்கப்படுகிறது. ப்ரணயம் என்பதற்கு 'விஸூஹ்பாவூாவெூரோணஃ' என்ற அமரப்படி ரஹஸ்ய செய்திகளையும் சொல்லி அநுப்பக்கூடிய மிகுந்த விச்வாஸம். தன்னுடைய மிகுந்த ஆர்த்தியைத் தீர்க்க யாசிக்கும் பேதைத்தனத்தையும், ப்ரீதியையும் சொல்லும். இம் மூன்று பொருள்களும் இங்கே அபேக்ஷிதம். 'மாஹாூகூஷும் யயாவெ' என்று மேகதூதத்தில் யக்ஷன் யாசித்தான் என கூறப்பட்டது. இங்கே யாச்ஞை உள்படமூன்றுபொருள்களையும் குறிக்கும் சப்தத்தை ப்ரயோகித்து யாசித்தார் என்று ஸ்பஷ்டமாகக் கூறாதது ரஸிக்கத்தக்கது. கடைசிப் பாதத்தில் லோகஸாமாந்யஸ்வபாவத்தை ஒரு பழமொழியாகக் கூறுமிடத்தில் 'யாசூாஷெநூ' என்று இங்கே ப்ரயோகிக்கப்படுகிறது. ஸர்வலோகப்ரபு செய்த வ்யாபாரத்தை இங்கே யாச்ஞை செய்ததாக ஸ்பஷ்டமாய்க் குறிக்க கவி தயங்குவது உசிதமே. இப்படி காந்தா விச்லேஷத்தால்விளையும் உன்மாததிசயம்கலங்காத தீரரையும் கலக்கி பேதையாக்குவதை மேலே லோகந்யாயமாகக் கூறுகிறார்; 'விஶ்லேஷெண க்ஷாஹிதஉநஸாம் ஷேவெஶெஷஉஹ்ாஉஷுள யாவாஷெநூ ஹவதி' என்பதால்.

விஶ்லேஷெண க்ஷாஹிதஉநஸாம் — 'ஸஉஹ் உவ மாஹீயெஷ்யெயெஷ்ண ஹிவோதிவ' என்று மஹர்ஷி வர்ணித்தபடி எத்தனை ஸ்திரமும் அக்ஷோப்யமுமான ஸ்வபாவமிருந்தும் நித்யமும் ஆச்லேஷம் செய்யும் ஸீதா லக்ஷ்மிவிரஹத்தால் வந்த நிரதிசயக்ஷோபத்தால் தைர்யத்தை இழந்து அப்ராக்ருதிங்சதராஜென்பதை 'விஶ்லேஷெண க்ஷாஹிதஉநஸாம்' என்று பலிஷ்ட காரணவிசேஷத்தைக் குறிப்பதால் விளக்குகிறார். 'சஷ்ணாஶேஷிவூணயிநி ஜநெ கிம் வாநஃஷ்ராஸம்ஸெ' என்று மேகதூதம் 3-வது ச்லோகத்தில் 'இடியும் மழையுமான கார்காலத்தின் வரவைக்காட்டும் மேகத்தைக் சண்டதும் கூடியிருக்கும் ஸூகிதப்பதிகளுக்குள்ளும்ஒவ்வொருவருக்கும் ப்ரியஜனத்தை உடனே காதலுடன் கட்டியணைந்து கொண்டாலல்லது பயமும் வருத்தமும் ஏற்படுவது ஸஹஜம். கழுத்தைக் கட்டியணைக்கவேணுமென்ற ஆசைவேசம் மனத்தில் ஆவேசித்த ப்ரியஸகி தூரத்தில் பிரிந்திருந்தாலவனென்படுவளோ என்று மிக்கபயமுண்டாகுமென்பதிலென்ன ஸந்தேஹமென்றுகூறப்பட்டதை இங்கே பிரிவைக் குறிக்க விச்லேஷபத ப்ரயோகத்தால் வ்யஞ்ஜநம் செய்கிறார். 'அகலகில்லேனிறையும்' என்று ஸீதாமங்கை யுறையும் மார்பன் விரஹிணியான அவள் ஆச்லேஷத்தை ப்ரதி க்ஷணமும் கோரிக்கொண்டேயிருக்கையில் அது கிடைக்காமல் செய்யும் பிரிவை விச்லேஷமென்று நினைப்பதும், அதை வர்ணிக்கும் கவி விச்லேஷமென்று வர்ணிப்பதும் மிகவுமுசிதம், பரஸ்பரம் ஆசைப்படும் ச்லேஷம் கிடைக்காமல் செய்யும் கொடும் பிரிவு விச்லேஷமேயாகும். அந்த விச்லேஷமெனும் விப்ரலம்பம் மிக தீவ்ரமான புத்தியை

யும் விப்ரலம்பம் செய்து க்ஷோபிதமாக்குகிறது. எவ்வளவு தூரம் அந்த க்ஷோபம் போகிறதென்றால் மேகம், பர்வதம், வ்ருக்ஷம் முதலியவற்றைப்பார்த்து என் ப்ரியையை நீ கண்டாயா? என் ப்ரியையிடம் தூது செல்லுகிறாயா' என்று யாசிக்கும் பேதமையான உந்மாதாதிசயத்தை விளைவிக்கிறது. மேகமும் சைலமும் அசேதனம். த்ருமம் எனும் வ்ருக்ஷம் ஸ்தாவரமாயினும் சேதனம். இம்மூன்றையும் சேர்த்துப் படிப்பதால் சேதநாசேதந விபாகமில்லாமல் பேசச் செய்கிறது என்று காளிதாஸர் கூறிய லோகஸ்வபாவத்தை வ்யஞ்ஜநம் செய்கிறார். 'வாயுந்திரையுகளும்' என்ற 2-ம் பத்து முதல்திருவாய்மொழி 5-ம் பாசுரத்தில் பராங்குசநாயகி 'ஊழிதோறூழியுலகுக்கு நீர்கொண்டு, தோழியரும் யாமும் போல் நீராய் நெகிழ்கின்ற, வாழியவானமே நீயுமதுசூதன்,பாழிமையிற்பட்டவன்கட்பாசத்தானைவாயே' என்று மேகத்தைக்குறித்துப் பேசியதையும், அதற்கு மூலமாக அரும்பதம் முதலிய வ்யாக்யானங்களி லுதாஹரிக்கப்பட்ட ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தம் 90-ம் அத்யாயத்தில் கண்ணனை விட்டுப் பிரிவாற்றாமையால் அவர் மஹிஷிகள் 'மேக ஸ்ரீமந் த்வமஸி தயிதோ யாதவேந்த்ரஸ்ய நூநம் ஸ்ரீவத்ஸாங்கம் வயமிவ பவாந் த்யாயதி வ்யக்ரசித்த: । அத்யுத்கண்ட: ஶபலஹ்ருதயோ(அ)ஸ்மத்விதோ பாஷ்பதாரா: ஸ்ம்ருத்வா ஸ்ம்ருத்வா விஸ்ருஜஸி முஹுர் து:கதஸ் தத்ப்ரஸங்க:' என்று பாடிய ச்லோகத்தையும், மேகதூதகாவ்யத்தையும் இங்கே மேகம் என்று முதலில் கூறுவதால் நினைக்கிறாரென்பது திண்ணம். ராமாயணத்தில் ஸீதாவியோகமேற்பட்டதும் மலையையும் மரங்களையும் 'ககுபஶ்ச க்ஷிதிருஹதாம் நாய ஊருஷா ஸவனராஜஸந்த்ரி। ராமோ ரம்யே வனோத்தேஶே ஶோகயா விரஹிதா த்வயா' முதலிய ச்லோகங்களால் அழைத்துப் பேசியது ப்ரஸித்தம். சைலம், த்ருமம் என்று அதையும் விக்ரமோர்வசீயத்தில் ஊர்வசீவிரஹத்தில் புரூரவஸின் உந்மாத ச்லோகங்களையும் ஸ்வாமி இங்கே நினைக்கிறார். ஆதிபதத்தால் ப்ராக்ருதஹம்ஸமும் வாங்கிக்கொள்ளப்படுகிறது. 'யாவாத் தைந்யம் பவதி கிஞ்சித் க்வாபி ஸம்வேதநாயை ஹேதோ:' விரஹிராமனுக்கும், ஆழ்வார்களுக்கும், க்ருஷ்ணமஹிஷிகளுக்கும். திர்யக்குகளையும் அசேதநங்களையும் ப்ரிய விச்லேஷஸமயத்தில் யாசிக்கும் பேதமை ஏற்பட்டது ப்ரஸித்தம். ஆரண்யகாண்டத்தில் ராமனுக்கு இப்பேதமை ப்ரபூதமாய் ஏற்பட்டது ப்ரஸித்தம். அங்கே தண்டகாரண்யத்தில் ஹம்ஸமொன்றும்கண்படவில்லை; பேசவுமில்லை. இங்கே வரிக்கப்படும் தூதஹம்ஸம் பிறர் துக்கத்தைக் கண்டு தானும் வருத்தப்படும் முதலிய ஸம்வேதநத்திற்கு யோக்யமானதாய் இருந்தாலும், மேகம், சைலம் முதலியது ஸம்வேதநத்திற்கே யோக்யதை இல்லாதிருந்தாலும் ப்ராக்ருத ஹம்ஸவிஷயத்தில் வந்த உந்மாதத்தைக் கைமுத்யத்தால் உபபத்தி செய்கிறார். ராமனே சைலத்ருமாதிகளில் ஸீதாவிரஹம் நேர்ந்தவுடன் உந்மாதவேகத்தால் அழைத்துப் பேசியதைவிட இங்கே உந்மாதம் மட்டேயாகும். 'க்வாபி' என்பதற்கு 'ஏதோ ஒரு' என்று பொருளும், பின்னால் இந்தக் காவ்ய முடிவில் 'ஸூர்யாபத்யம் வர்ணிதமஸௌ நைஷதீயே வீக்ஷ்ய வாதாஹ்ர க்ருத்யத்ராணம் ப்ரதமதி விவாஹம் ஸம்ஸாரஜாதம் ந:' என்றுகூறப்போகிறபடி நளனுக்கும்தமயந்திக்குமதிசதுரமாய் ஓர் மஹிமையுடையஹம்ஸமே தூதுசென்று ஸபலமானதால் ஹம்ஸஜாதியில் தூதுசெய்வதில் சதுரமான ஹம்ஸம் இருக்கலாமென்கிற ஸம்பாவனையால் ப்ரக்ருத வ்யாபாரத்திற்கு வல்லமை இருக்கக்கூடிய 'ஓர் ஜந்து விசேஷம்' என்கிற பொருளும் திருவுள்ளம். 'தேஶிகாஸ்து தூதா:' என்று 'அஞ்சிறையமடநாராய்' திருவாய்மொழியை ஸங்க்ரஹிக்கும் ரத்நாவளிச்லோகத்தில் ஸாதித்தபடி. ஆத்ம பரமாத்மாக்களுக்குள் தூத்யம் செய்து ஸங்கடனை செய்யும் மஹிமையையுடைய கர்மஜ்ஞாநமெனும் பக்ஷங்களிரண்டோடும் கூடிய ஆசார்யஹம்ஸங்களையும் ஸந்தேசிப்பதிலும், அதிலும் 'ஹம்ஸாஸ்தேந ஶரண்ணா' என்று இவரே கூறியபடி யதிராஜ ஹம்ஸத்தையும் ஸந்தேசிப்பதிலும் திருவுள்ளம். ராஜஹம்ஸம் என்பது யதிராஜஹம்ஸத்தையும் காட்டும்.

ஸ்ரீ:

'வடிவழகார்ந்த வண் தூப்புல் வள்ளல்'

ஸ்ரீ. உப. ஓரகடம், கோ. ஸுதர்சனாசார்யஸ்வாமி, ரிடயர்ட் தமிழாசிரியர். அவளூர்.

ஸ்ரீ விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தை உலகில் நம்மவரில் அறியாதவரில்லையென்றே சொல்லலாம். முக்யமாக மூன்று சிறந்த ஸித்தாந்தங்கள் ஶங்கர மத்வ ராமாநுஜாசார்யர் என்னுமிவர்களால் நியமிக்கப்பட்டுள்ளன. ஆழ்ந்து நோக்குங்கால், இப் பெரியார்கள் யாதொரு ஸித்தாந்தத்தையும் தாமாக இயற்றினால்லர். இவை தொன்றுதொட்டு உண்டானவையே. இவற்றுள் ராமாநுஜஸித்தாந்தம் என்று கூறப்படும் ஸ்ரீ விசிஷ்டாத்வைதஸித்தாந்தம் என்பது இடையேயுள்ளது. இது மற்றையிரண்டு ஸித்தாந்தங்களோடு முரண்பட்டாலும், ஒன்றுக்கொன்று ஸமரஸப்படுத்துவதாகவும் தோன்றும். அறிஞர் இதன் பொருளை ஆழ்ந்து கொள்ளல் வேண்டும்.

இவ்விராமாநுஜஸித்தாந்தம், இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ப்ரவசநம் பண்ணப்பட்டது. அது முதல் ஸ்ரீ பகவத் ராமாநுஜருக்கு முற்பட்டவும் பிற்பட்டவுமான ஸ்ரீ வைஷ்ணவாசார்யர்கள் இம்மதத்தைத் தம்மாலியன்றவளவில் பேணிவந்தார்கள். இதற்குச் சில காலங்களில் பெரிய கிளர்ச்சியும் தளர்ச்சியும் நேரிட்டு வந்தன. 'எம்பெருமானார் தர்சநம்' என்றே இதைச் சொல்லிவருவதாலும், பின்புள்ள ஆசார்யர்கள் எல்லாரும் குருபங்க்திஹாரத்தில் எம்பெருமானாரையே நடுநாயகமாகஅமைத்துப்போற்றிவந்தபடியாலும், அன்னோர் யாவரும் எம்பெருமானுடைய வைபவத்தையும் அவன் வாக்யங்களையும் நினைந்து நைந்து உள்கரைந்து உருகினவர்களானபடியாலும், அந்த ஸித்தாந்தத்தைக் கடைப்பிடித்துக் கூடியவரையில் அதையநுஷ்டித்து வந்தால் போதுமென்று மிகுந்த ஆர்த்தியுடன் காப்பாற்றி வந்தார்கள். காலக்ரமத்தில், தேனார் கமலத் திருமகள் நாதன், தானாகவே சில மெய்யடியார்களை நியமித்துப் பரமதப்போர் செய்து இத் தர்ஶநம் ப்ரகாஶமடையும்படி செய்தருளினான். அத்தகைய பரனடியார்களில் ஸார்வபௌமராயும் அதிமாநுஷத்தன்மை வாய்ந்தும் விளங்கியவர் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன். இவர் பக்திஸாரரைப்போல் பரமதபங்கம், ஸ்வமதஸ்தாபநம் செய்வதில் அநுத்தமமானவர். இவர், பத்தர் வினை தொத்தறவறுக்கும் அணியத்திகிரியில் விளங்கும் ஹிமவநம் என்று சொல்லப்படும் திருத்தண்கா (தூப்புல்) என்னும் திவ்யதேசத்தில், விச்வாமித்ரகோத்ரத்தில் அவதரித்துக் கருவிலே திருவுடையவராய், சிறுபிராயத்திலேயே 'வாதிகேஸரி' என்னலாம்படி ஸகல சாஸ்த்ரத்திலும் பாரங்கதராயினர். இவர் அறியாத நூலும் கல்லாத கலையும் இலையென்றே சொல்லலாம். இப் பெருந்தகையார் நாடோறும் கரிகிரிமேல் நின்றனைத்தும் காக்கின்ற கருமுகில்வண்ணனை கண்ணனை உள்ளம் தூயராய் ஒருமைமனத்தினுள் அவன் தன்னொடொன்றாகக் கொண்டு அநவரதம் ஆழ்ந்த பக்தியில் மூழ்கினவர். 'அத்திகிரித் திருமால் முன்னம் வருந்தி அடைக்கலங் கொண்ட நம் முக்கியர்' என்று தாமே பேசும்படியான கரைபுரண்டொழுகும்படியான எல்லையில் மாயன் தாள் பற்றினவர். இவர் எம்பெருமானிடம் கொண்ட தீராத காதலும் ஆராத அன்பும் அளவிடற்பாலதன்று. அவ்வருளாளப்பெருமாள், அருளாழிப்புட்கடவி அவர் வீதி ஒருநாள் வரும்போது, திருமகளைப்பெற்றும், என் நெஞ்சம் கோயில்கொண்ட பேருளாளனென்றும், இத் தனிப் பெரும்பிருந்தைத் தாமே ஏறிட்டுக் கரைபுரண்ட கருணைக்கடலைத் தம்முள்ளத்துக்கொண்ட வியப்பை எவ்வண்ணம் பேசுவதென்று தாமே பகரும் தன்மை பேசுவதற்கு நிலமன்று. மேலும்:- 'செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளிய ஓதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே' என்று பேசுவதால், இத்தகைய அவ

தாரபுருஷன் திருவுள்ளத்தில் அருளாளப் பெருமாளான மாதவனுர் எட்டுமிரண்டும் கசடறக் கற்பித்து, எட்டவொண்ணுத இடந் தரும் என்பதைத் தெளிவித்து, வானுள் அமர்ந்தவர்க்கும் வருந்தவருமிந்நிலைகள் தானுனைய் உகக்கும் தாம் நமக்கிங்குளதென்றும் வியக்கும்போது, வியன்கொள் மாநிலத்தில் வியப்பெய்திடாதவர் யாவர்?

அன்றேயடைக்கலங்கொண்ட நம் அத்திகிரித் திருமாலின் அழகினும் அன்பிலும் நெக்குருகிக் கரைந்த இவர் அந்த ப்ரீதி பரீவாஹமாய்ப் பரமப்ரீதியுடன் இன்பம் தலைப்பெய்து எங்குந் தழைக்கப் பல்லூழிக்கும் ஒரு கைம்மாறும் காணுத நம்மத்திகிரித் திருமால் விஷயமாக ஆறு அரிய சூட்டு நன்மாலைகள் ப்ரபந்தங்களாக அருளியிருக்கிருர். அவை:- அத்திகிரி மான்மியம், அடைக்கலப்பத்து, அர்த்த பஞ்சகம், ஸ்ரீவைஷ்ணவதினசரி, திருச்சின்ன மாலை, பன்னிருநாமம் என்பன. இப்ரபந்தங்களை ஊன்றி நோக்குவார்களாயின், இயற்றிஞருடைய உள்ளக் கருத்து ஒருவாறு புலனுகும்.

இவைகளை முறைப்படி வகுத்தால் அத்திகிரிமான்மியமும், பின்னர் ஸ்ரீவைஷ்ணவதினசரியும் பன்னிருநாமமும், அதற்குப் பின்னர் அர்த்த பஞ்சகமும் திருச்சின்ன மாலையும், கடைசியாக அடைக்கலப் பத்தையும் அணிவகுக்கலாம். இவர் அநுதிநமும் சிற்றம் சிறுகாலையில், தித்திக்கும் திருவத்தியூரைச்சேர்பவராதலின் அத்திகிரிமான்மியத்தை அநுஸந்தித்துக்கொண்டே செல்வர். பின்னர், 'துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும் தொல்வழியே நல்வழி' யென்று தெளிவுற்ற சிந்தையரானபடியால் ஸ்ரீவைஷ்ணவ தினசரியை ஓதுவர். பின்னர் அநுஷ்டாநம் செய்தருள்வர். த்வாதசோர்த்வ புண்ட்ரம் சாத்திக் கொள்ளும்போது அண்ணல் தாளணைவிக்கும் பன்னிருநாமப் பாட்டைப் பாடுவர். அதன் பின்னர் அர்த்த பஞ்சகத்தைச் சிந்திப்பர், பிறகு திருச்சின்னமாலைப் பாசுரங்களாலும் அடைக்கலப்பத்தாலும் பெருமாளை மங்களாசாஸநம் செய்வர். இப்படி இதனை உய்த்துணரலாம். இவர் அவதரித்த நாள் முதல் கருமணியைக் கரிகிரிமேற் கண்டு, கடுவினைகளனைத்தும் களைந்து நன் ஞானமளிக்கப் பெற்றவரான படியால், இவ்வருளாளர் பாசுரங்கள் தனிப் பெருமை படைத்தவை எனக் கூறுதல் சாலப் பொருந்தும்.

இம் மஹாதேசிகன் பெரிய திருவடி நயினரையும் ஸ்ரீ ஹயக்ரீவனையும் ப்ரத்யக்ஷீகரித்துக் கொண்டு திருவஹீந்த்ரபுரத்தில் முப்பது ஸம்வத்ஸரங்கள் போல் எழுந்தருளியிருந்தார். அவ்வயிந்திரபுரத்து மேவு சோதியாகிய தெருள்தர நின்ற தெய்வநாயகனிடம் பக்திப் பேரன்புடையராய், அவரே இவருக்கு வெள்ளைப் பரிமுகராய் உள்ளத் தூன்றினரென்றும், ஆதலால் அவ்வெம்பெருமானையே பரம வாத்ஸல்யத்தோடு வணங்கி வழிபட்டு அவனையே தமக்குக் களைகணுகக் கொண்டு சரணுகதி செய்து, அவ்வநுபவஜநிதப்ரீதி உள்ளடங்காமல், சந்தமிகு தமிழ் மறையோரான அவ்வேதாந்த குரு மும்மணிக்கோவை, நவமணிமாலை, பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல் பாக்களை அழகிய செந்தமிழ்ப்பாவில் அருளிச் செய்து முகுந்தனருள் தந்த பயன் பெற்ருர்.

நிற்க: ஸ்வாமிதேசிகனை ஆழ்வார்களிடம் குறைந்த பற்றுடையரென்றும், தமிழ்மொழியில் அப்ரீதியுடையரென்றும் இத்தகைய கூற்றுக்கள் சில்லிடங்களில் இன்றும் செவிப்படுகின்றன. இது, தென்னுடும் வடநாடும் சிரிக்கப் பேசும் பேச்சாகும். சந்தமிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்த குரு, சந்தம் கமழும் தம் செந்தமிழ்ப்பாவில் 'தந்தையென நின்ற தனித் திருமால் தாளில் தலைவைத்தோம் சடகோபனருளினலே' என்பதாக ஸாதித்ததனுலேயே இவர் தமிழ்மொழியை ப்ரமாணமாகக் கொள்ளாதவரென்றும், ஆழ்வாரிடம் அன்பு குறைந்தவரென்றும் கூறுதல் மடைமையாகுமன்ருே? நேசமுடன் ஆழ்வார்கள் நிலைகளெல்லாம் உணர்ந்து நாரணனுர் தாள்களிலே நாலாயிரம் தமிழால் நண்ணியுரை செய்தவற்றை நாடி வகை தொகை செய்த இவரைப் புனிதனென்றும் பிள்ளை

ஸ்ரீ:

பேரருளாளனின் பேருதவி

ஸ்ரீ. உப. வித்வான், வேளியநல்லூர் வரதராஜ ஐயங்கார் ஸ்வாமி வெம்பாக்கம்.

ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரன் நித்யமுக்தர்களைப் போல் பத்த ஜீவர்களும் தன்னுடனே கலந்து ஸகல போகங்களையும் அனுபவிக்க வேண்டியிருக்க அதை இழந்ததோடில்லாமல் மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து பிணி பசி,மூப்புத்துன்பங்களை அனுபவித்து, 'செஞ்சொளாலர் கால தூதர் விசு பாசம் விழுந்த முத்தியபோதும் தன்னை நினையாததைக்கண்டு கடும் நோய்களால் பீடிக்கப்படும், நோயாளிகளைக் கண்டு மனம்தாளாத வைத்யன்கொஞ்ச காலம் மறந்திருக்க அவர்களுக்கு மயக்க மருந்துகளைக் கொடுப்பதுபோல் ப்ரளயத்தை ஸங்கல்பிக்கிறான். பிறகு **काष्ठ पाषाण** (கட்டை கல்) ஸமானமாய் கிடக்கும் ஜந்துக்களைப் பார்த்து மிகவும் வருந்தி கரண களேபரங்களை (ஶரீரம்) கொடுத்து இம் இருள் தருமாஞாலத்துள் ஶாஸ்த்ரமாகிற அழியாக் கை விளக்கை கொடுத்து உதவுகிறான்' என்று நம் தேசிகன் தயா சதகத்தில் ஸாதித்தருளுகிறார்.

'यमेवैष वृणुते, जायमानं हि पुरुषं यंपश्येन्मधुसूदनः' என்று இது முதலான ச்ருதி ஸ்ம்ருதிகளால் எவனை பரமாத்மா தன் அன்பிற்கு பாத்திரமாக எண்ணுகிறானோ, அவனே அவனை அடைய முடியும் என்று ஏற்படுகிறது. **'दासभूतास्स्वतस्सर्वे ह्यात्मानः परमात्मनः'** என்கிறபடியே ஒவ்வொரு ஜீவனும் ஸர்வசேஷிக்கு புத்ர ப்ராயராகையால் எல்லாருமே அவனை அடைய வேண்டியதாகவர, ஒரு சக்ரவர்த்திக்கு அநேக பிள்ளைகளிருந்தாலும் சிலரே தன் தகப்பனாரின் சொல்லுக்கிணங்கி, அவன் மனம் ஸந்தோஷிக்கும்படிக்கும் நடந்து, தகப்பனாருடன் ஸமான போகங்களை அனுபவிக்கிறார்கள். சிலர் அப்படி யன்றிக்கே தங்கோலமாகத் திரிந்து தனக்கு ப்ராப்தமான ஸுகங்களை இழந்தது மன்றிக்கே, அநேக துக்கங்களையும் அநுபவிக்கிறார்கள். அது போல் **'श्रुतिस्मृतिर्ममैवाज्ञा.....आज्ञाछेदी मम द्रोही मद्भक्तोऽपि नवैष्णवः'** வேதங்களிலும் ஸ்ம்ருதிகளிலும் எது சொல்லப்பட்டிருந்தாலும் அது பகவானின் உத்திரவாகையால் அதை எவர்கள் மறந்து அவனை ஸந்தோஷப்படுத்த வேறு எதையோ

யென்றும் போற்றுதலல்லாமல் வேறு என் சொல்ல இயலும்?

அன்றியும், 'அநிதரஸாதாரணமான வைராக்யத்துடன் ஸம்பந்நமாயும், ஸமஸ்தமான தந்த்ரங்களிலும் அநங்யாதீநமான கௌஶலத்துடன் கூடினதாயுமுள்ள ஒரு அநிர்வசநீயமான தேஜஸ்ஸே சேதநர் யாவரும் உய்யும் பொருட்டு ஸ்ரீ வேங்கடேஶனாகி வந்து அவதரித்தது!' என்றன்றோ ப்ரதிவாதிபயங்கரார்யன் ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனைப்பற்றி அருளிச்செய்திருக்கிறார்?

இத்தகைய தேசிகன் அபார க்ருபையால் ஸகல சேதநரும் உஜ்ஜீவிக்கும்படி செய்திருக்கும் உபகாரத்தை இவ்வளவென்று வரையறுத்துப் பேசுவதும் இயலுமோ? பண்டிதர்முதல் பாமரர்வரை எல்லாருடைய போக்யதைக்கும் அநுகுணமாக பரஶ்ஶதம் (120) க்ரந்தங்களை ஸ்வாமி அருளிச்செய்திருக்கிறார். அந்த க்ரந்தங்களில் அவர் அருளியிருக்கும் விஷயங்கள் இன்னவென்று ஸ்தூலமாகவேனும் நாம் அறிந்துக்கொள்ளாமலிருப்பது பெரும்பிழையாகும். ஸ்ரீ பகவத்ராமாநுஜனுடைய ஸித்தாந்தத்தை நிலை நிறுத்திவைத்த இந்த மஹானுடைய திவ்யஸூக்திகளை அர்த்தாநுஸந்தாந பூர்வகமாக அத்யயநம் செய்வதன்றோ அவருடைய திருவுள்ளத்திற்கு உவப்பாக இருக்கும்? ஆதலின் ஸ்ரீ தேசிகனுடைய க்ரந்தங்களை ஆசார்ய ஸகாஶத்தில் கூலங்கஷமாய்க் காலக்ஷேபம் பண்ணி அநுபவித்தல் நமது ப்ரதம கைங்கர்யம்.

செய்தாலும், அவர்களை ஆச்ரிதவத்ஸலனான சரண்யன் கூட த்ரோஹீ என்றும், என்னைச் சேர்ந்தவனன்றுஎன்றும்வெறுக்கிறான். ஆகையால் உஷ:காலத்தில் 'உள்ளத்துக்கொண்டு முனிவர்களும் யோகிகளும் மெள்ள எழுந்தரியென்ன பேரரவம்' என்கிறபடியே எழுந்து சாஸ்த்ரம் காட்டிய வழியில் பஞ்சகாலபராயணர்களாக செல்லும் மஹான்கள் எங்கு வாஸம் செய்கிறார்களோ, அங்கு ஸர்வேச்வரன் நித்யவாஸம் செய்கிறான். அவர்களின் கோபமும் அநுக்ரஹமும் வீணாவதில்லை என்பதை இந்த காலத்திலும் பார்க்கலாம். **'जगत्कर्तुर्महेशस्य दिव्याज्ञाकारिणोवयं। इति नित्यश्रियाः कुर्युः'** எந்த மஹாபுருஷர்கள் சேஷி உகந்த கைங்கர்யமென்று நித்யகர்மங்களை ஆசையுடன் விடாமல் செய்கிறார்களோ அவர்கள் மனத்திற்கு காசி முதலான நன்நகராகிலும் ருசியாவிடில் பாபங்களைப்போக்கி முக்திதரும் நகரில் அவை சேராது என்பதை **'सा काशीति न चाकशीति..........या वैकुण्ठकथासुधारसभुजां रोचेत नो चेतसे'** என்கிற ச்லோகம் விளக்கிக் காட்டுகிறது. அரசன் பொய்கைதனில் வந்துதித்த புனிதனை காஞ்சியிலிருந்து வெளியேறும்படி செய்ய, சொன்னவண்ணம் செய்த பெருமானும் பைணாகப்பாய் சுருட்டி எள்ளிவிட்டதாக ஐதிஹ்யம். அதுவும் இதை ஸ்திரப்படுத்துகிறது. முதலாழ்வார்கள் மூவரும் ஓரிடைக் கழியிலே நெருங்கி நிற்க, அந்த இடத்தையே மாலும் உகந்ததைப்பார்க்க, ஸாதுக்கள் உகந்த இடமே முக்திதரும் நகரில் முக்கியமாக நிற்கிறது. **'सन्ध्याहीनोऽशुचिर्नित्यमनर्हस्सर्वकर्मसु। यद्यन्यत्कुरुते कर्म न तस्य फलभाग्भवेत्'** எவர்கள் ஸந்த்யாவந்தனத்தைச் செய்வதில்லையோ அவர்கள் அசுத்தர்களாகையால் மற்ற வைதிக கர்மங்களில் அதிகாரமற்றவர்கள். அப்படிச் செய்தாலும் அதன் பலன் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. **'नोपतिष्ठति यः पूर्वामुपास्ते न च पश्चिमां। स शूद्रवद्बहिष्कार्यस्सर्वस्माद्द्विजकर्मणः'** என்றும் செய்யாதவர்களைப் பற்றிச் சொல்லி, செய்கிறவர்களை **'उद्यतमस्तयन्तमादित्य......सकलं भद्रमश्नुते'** என்று ஸ்தோத்ரம் செய்கிறது. ஸாதுக்களின் தர்சனமும் ஸ்ரீபாததீர்த்தமும் மாபாதகங்களையும் போக்கி சுத்தமாக்குகிறதென்பது **'ते पुनन्त्युरुकालेन दर्शनादेव साधवः'** இத்யாதிகளில் ப்ரஸித்தம். இம்மஹான்களில் அக்ரகண்யர்களாயும் ஆசார்யலக்ஷணம் முக்கியமாகப் பொருந்தியும் புரட்டாசிக் கேட்டைதனிலும், திருவோண நன்னாளிலும் அவதரித்து ஸம்ஸாரக்கடலில் மூழ்கிக் கிடக்கும் ஜீவன்களைக் கைகொடுத்து கரை ஏத்திவைத்த பெருமையை என்னென்று சொல்வது. இவ்விரண்டு ரத்னங்களையும் நமக்குத்தந்த பேரருளாளனின் பேருதவிக்கு நாம் செய்யும் கைமாறு திருவோணத்திருவிழவிலந்தியம்போதிலரியுருவாகி யரியை அழித்தவனை பந்தனை தீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பாடுவதே. த்ரேதாயுகத்தில் 'அன்று சராசரங்களை வைகுந்தத்தேத்தியது போல் இக்காலத்திலும் செய்யமுயன்றும் களரில் செய்த க்ருஷிபோல் ஆக, இவ்விரண்டு ஆசார்யர்களின் பூமிகையைப் (வேஷம்) பூண்டார். **'पशुर्मनुष्यः पक्षी वा ये च वैष्णवसंश्रयाः। तेनैव ते प्रयास्यन्ति तद्विष्णोः परमं पदम्'** என்கிறபடியே லீலாவிபூதியே நஷ்டமாகிவிடுமோ என்று பயந்து **'मोहशास्त्राणि कारय'** என்று தாமே நியமிக்கும் நிலை வந்துவிட்டது. இம்மஹோபகாரம் செய்தும், க்ரந்தமுகத்தாலும், சிஷ்யமுகத்தாலும் செய்துகொண்டுமிருக்கும் ஸதாசார்யர்கள் விஷயத்தில் நாம் செய்யும் கைமாறு உத்ஸவ காலத்தில் குழாங்களாகக் கூடி பாவைகளைப் பாடி **'बोधयन्तः परस्परं'** என்பதுபோல் குணங்களைக் கூடிப் பேசி பித்தனென்றே பிறர் கூற நடப்பதே.

आचार्यत्वोपयुक्ता मुनिगणकथिता देशिकैः स्वेनचोक्ताः ।
सर्वे भद्रागुणास्युः समुदित विभवाः सर्वतन्त्रस्वतन्त्रे ॥

[ஆசார்யனாய் இருப்பதற்கு உபயுக்தமானவை என்று ரிஷிகளால் சொல்லப்பட்டவைகளும் ஸ்ரீதேசிகன் தம்மாலும் அருளிச் செய்யப்பட்டவைகளுமான எல்லா கல்யாண குணங்களும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரிடத்தில் ஒன்று சேர்ந்து விபவத்தை உடையவைகளாகின்றன.]

ஸ்ரீ:

தேசிக தயோதயம்

ஸ்ரீ. உப. வித்வான், மதுராந்தகம், தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி,

ந்யாயாத்யாபகர். ஸம்ஸ்க்ருத கலாசாலை, திருவையாறு.

புரட்டாசித்திருக்கேட்டையிலும் உத்தமமாம் திருவோணத்திலுமாகத் திருவவதாரம்செய்து தர்சனஸ்தாபநம் செய்தருளின சிஷ்யாசார்யர்களான தேசிகர்களின் தயாகார்யங்கள் நாளு முகக்கவிங்கே நமக்கோர் விதி வாய்க்கின்றது. நமது விசிஷ்டாத்வைத தர்சனமானது வியாஸர் போதாயனர் ப்ரஹ்மநந்தி குஹதேவர் த்ரமிடர் போன்ற மஹர்ஷிகளாலும் ஆழ்வார்களாலும் நாதமுனி முதலானவாசார்யர்களாலும் அடைவே ப்ரவர்த்திக்கப் பெற்றதாய் வேதம், ஸ்ம்ருதிபுராணாதிகள். ஸ்ரீபாஞ்சராத்ரம், ஆழ்வார் அருளிச் செயல்கள் ஆகிய ப்ரமாண ஸம்பிரதாயங்களை ஆகரமாகக் கொண்டதுமான ஒப்புயர்வற்ற வைதிக ஸித்தாந்தமாகும்.

ஆழ்வார்களில் முதலாழ்வார்கள் மூவரும் இத்தர்சனத்திற்கு விசேஷ ப்ரவர்த்தனம் செய்தமையைப் பற்றியே ஸ்வாமிதேசிகன் ஆசார்ய க்ருத்யாதிகாரத்தின் இறுதியில் அம் மூவரின் ஆசார்ய க்ருத்யத்தை வெளியிட்டருளினர். அதாவது—

‘பாட்டுக்குரிய பழையவர் மூவரைப் பண்டொருகால்
மாட்டுக்கருள் தருமாயன் மலிந்து வருத்துதலால்
நாட்டுக்கிருள் செகநான்மறையந்தி நடைவிளங்க
வீட்டுக் கிடைகழிக்கே வெளிகாட்டுமிம் மெய்விளக்கே’

என்று. அமுதனாரும் ஆழ்வார்கள் பக்கல் நம்மிராமானுசனுடைய ஈடுபாடுகளைத் தொடங்குமிடத்தில் முதன் முதலாக ‘எம்பொய்கைப் பிரான் மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையுங்கூட்டி, ஒன்றத் திருத்தன்றெரித்ததிருவிளக்கைத் தன் திருவுள்ளத்தேயிருத்தும் பரமன் இராமனுசன்’ என்றும் ‘ஞானமென்னும் நிறைவிளக்கேற்றிய பூதத் திருவடித்தாள்கள், நெஞ்சத்துறையவைத்தாளுமிராமானுசன்’ என்றும், ‘கோவலுள் மாமலராள் கண்டமை காட்டும் தமிழ்த் தலைவன் பொன்னடி போற்றுமிராமாநுசர்’ என்றும் முதலாழ்வார்களின் தர்சந ப்ராவர்த்தகத்வத்தைத் தெளிவித்தருளினர். மூன்று முனிகளாலும் வ்யாகரண ஸித்தாந்தம்போல் ப்ரவர்த்தநம் செய்யப்பெற்றது நமது தர்சனமும்.

அவர்களுக்குப் பிறகு நம்மாழ்வார் தர்சனமாயமைந்தது. ஸ்ரீமத் ஸம்ப்ரதாய பரிசுத்தியில்—‘வ்யாஸ போதாயநாதிகளாலே யதாதிகாரம் ப்ரவ்ருத்தமான வேதாந்த ஸம்ப்ரதாயத்திற்கு இந்த யுகாரம்பத்திலே ப்ரஹ்மநந்த்யாதிகளுக்குப் பின்பு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார்’ என்றார் தேசிகன். ‘பராங்குச பரகாலாதி ரூபத்தாலே அபிநவமாக ஒரு தசாவதாரம்பண்ணி மேகங்கள் ஸமுத்திர ஜலத்தை வாங்கி ஸர்வோபஜீவ்யமான தண்ணீராகவுமிழுமாப்போலே வேதார்த்தங்களின் வேண்டும் ஸாரதமாம்சத்தை ஸர்வருக்கு மதிகரிக்கலான பாஷையாலே ஸங்க்ரஹித்துக்காட்டிய’ படியாலே ஆழ்வார் தர்சனமென்று வழங்கலாயிற்று. பின்பு—

‘नाथोपज्ञं प्रवृत्तं बहुभिरुपचितं यामुनेयप्रबन्धैः
त्रातं सम्यग्यतीन्द्रैरिदमखिलतमःकर्शनं दर्शनं नः ॥’

என்று நாத யாமுன ராமானுஜமுனிகளாகிய மூன்று ஆசார்யர்களால் ப்ரவர்த்தனம்செய்யப் பெற்று பகவந் நியமன விசேஷத்தாலே ராமாநுஜதர்சனம் என்கிற சிறப்புப் பெயரால் விளங்குகின்றது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம். உடையவர் வைபவத்தைக் கணிசித்து ஸ்ரீமந்நாதமுனிகள் வெளியிட்டதாக ஓர் ஐதிஹ்ய முண்டு. ‘குளப்படியிலே தேங்கினால் குருவி குடித்துப்போம், வீர நாராயணபுரத்

தேரியிலே தேங்கினால் நாடு விளையும்' என்பாராம் நாதமுனிகள். இதற்கு எம்பார் அருளும் விவரணமாவது—பெரிய பெருமாளாகிற பெருங்கடலிலே ஆழ்வாராகிற காளமேகம் படிந்து, தத்கல்யாண குணாம்ருதஜலத்தைப் பருகிவந்து, நாதமுனிகளாகிற மஹாமேருவிலே வர்ஷித்து, உய்யக்கொண்டார் மணக்கால் நம்பியாகிற அருவிகளாலே பிறங்கி, ஆளவந்தாராகிற பேராற்றிலேகூடி, பெரிய நம்பியாகிற வாய்க்காலாலே புறப்பட்டு, எம்பெருமானாராகிற பெரிய ஏரியிலே வந்து தேங்கி நம் ஆசார்யர்களாகிற மதகுகளாலே புறப்பட்டு, இஸ்ஸம் ஸாரமாகிற கழனிக்கு ஏறிப்பாய்கிறது' என்று.

தேசிகதர்சனம்

முதலில் வேததர்சனமென்றும் பிறகு வைதிக மஹரிஷி தர்சனமென்றும் ஆழ்வார் தர்சனமென்றும் ராமாநுஜ தர்சனமென்றும் அடைவே குணநாமங்களால் வளர்ந்துவரும் இத்தர்சனத்தை எம்பெருமானாருக்குப்பிறகு மொய்ம்பால்வளர்த்த இதத்தாயாகிறார் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன். 'உய்யும் வகையில்லை ... இராமாநுசன் அருள் மேவிவாழும் அய்யனிலங்கு தூப்புற் பிள்ளையாய்ந்த பொருளன்றியே' என்னும்படி தர்சனார்த்தத்தை நிலை நாட்டிய பெருமை ஈராசுபடாமல் தேசிகன் பக்கலிலேயே நிலை நிற்கின்றது.

'निष्कर्ष्टुं कश्चिदन्यः प्रभुरिह भगवल्लक्ष्मणाचार्यमुद्रां
अक्षुद्राचार्यशिक्षाशतगुणितमतेरप्रमत्तात्त्वमत्तः ।'

என்பதாக தத்வமுக்தாகலாபத்தின் இறுதியில் தாமே 'தர்சன ஸ்தாபகர்' என்பதை வெளியிட்டருளினர். 'பகவத்ராமாநுஜ தர்சநார்த்தத்தைத் தாம் ஸ்தாபநம் செய்திருப்பதை அநுஸரித்தே மற்றுமவற்றை அந்தேவாஸிகள் நிஷ்கர்ஷம் செய்வார்களாக. தமது நிர்ணயத்திற்கு மாறுபட்ட விருத்த நிஷ்கர்ஷம் செய்யத்தகாது' என்பதாக அதற்கு வ்யாக்யானமும் செய்தருளினர். 'எதிவரனார் மடப்பள்ளி வந்த மணமெங்கள் வார்த்தையுள் மன்னியதே' என்று தமது ஸம்ப்ரதாயச் சிறப்பையும் ஆங்காங்கு ப்ரகாசம் செய்தருளுவது தேசிக ஸ்ரீஸூக்திகளில் பற்பல விடங்களிலும் தெளிவானது. எம்பார் ஆழ்வான் பட்டர் நஞ்சியர் இவர்களுடைய திவ்ய ஸூக்திகளையும் ப்ரமாணமாகக்காட்டி ஸம்ப்ரதாயார்த்தங்களைச் சிந்தாமல் பாதுகாக்குமது தேசிகனுக்கு ஓர் தனிச் சிறப்பு. 'ஸ்ரீபாஷ்யகாரருடைய சிஷ்ய ஸம்ப்ரதாயங்களில் ஒன்றிலும் அர்த்தவிரோதமில்லை, வாக்யயோஜநாபேதமேயுள்ளது' என்று ரஹஸ்யத்திலுள்ளது ஸுஸ்பஷ்டமானது. 'तत्सन्निकृष्टमपि वा मतामाश्रयन्तः' என்றும் 'आगमासन्न पक्षे' என்றும் மற்றொரு வைஷ்ணவ தர்சநமாகிய மத்வ ஸித்தாந்த பர்யந்தமாகத் தமது அபிமானத்தைக்காட்டிய ஆசார்யன் நம் தேசிகன். ஸ்ரீபாஷ்யகாரர் சிஷ்ய ப்ரசிஷ்ய ஸம்ப்ரதாய பேதங்களில் கண்ணோட்ட மீஷத்தேனும் கொள்ளாத தூய்மையுள்ளத்தைத் தூப்புல் பிள்ளையிடத்திலேயே காணலாகும். லோகாசார்யர் அருளிய 'சீரொன்று தூப்புல்' தனியனிலேயும் அதை அடியொற்றி அண்ணன் அருளிய 'परश्शतंवापि ....तत्कालमेकः खलु भुक्तिमुक्त्योः' என்கிற ஸூக்தியாலும் தேசிக ஸ்ரீஸூக்தியின் ஒவ்வொன்றின் சிறப்பைப்பற்றி வாய் வெருவி வெளியிட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

'வேதாந்தாசார்யன்' என்று அழகியமணவாளனும் 'ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரன்' என்று ஸ்ரீரங்கநாயகியும், 'கவிதார்க்கிக ஸிம்ஹம்' 'ஸமஸ்யாஸஹஸ்ரீ' என்று மஹான்களும் பிருதாவளிகளை அளித்து, அம்முகத்தாலே நம் தேசிகனுடைய தர்சந ஸ்தாபகத்வத்தையும், விலக்ஷண வைதுஷ்ய வைபவத்தையும் வெளியிட்டருளினர்கள். 'காவலனெங்கள் கிடாம்பிக்குலபதி அப்புளார்தம் தேமலர்ச்சேவடி சேர்ந்து பணிந்தவர் தம் அருளால், நாவலரும் தென் வடமொழிநற்பொருள் பெற்றநம்பி'யாய் அவர் பக்கலிலே 'विंशत्यब्दे विश्रुतनानाविधविद्य'ராய் ஸங்கல்ப ஸூர்யோதயம் இயற்றும் காலத்திற்குள் 'त्रिंशद्वारं श्रावित शारीरकभाष्य'ராய் வைபவ ப்ரகாசிகையில் 'येनाकारि द्विश्शतं ब्रह्मभाष्यम्' என்று அருளிச்செய்த க்ரமத்திலே இருநூறு ஆவ்ருத்தி ஶாரீரக ஶாஸ்த்ர ப்ரவசநம் செய்தருளியும், ச்ருதப்ரகாசிகா ஸம்ரக்ஷணம் செய்தும் 'பேச்சொன்றுக்குச் சததூஷணியைப் பேசியும்' இவ்வாறாக ஸ்வபக்ஷ ஸம்ரக்ஷணம் பரபக்ஷ ப்ரதிக்ஷேபம் ஆகியவற்றை க்ரந்த ரூபமாகவும் வாத ரூபமாகவும் செய்தருளி,

**'निर्विष्टं यतिसार्वभौमवचसामावृत्तिभिर्यौवनं...
शेषायुष्यपि शेषिदंपतिदयादीक्षामुदीक्षामहे ॥'**

என்று க்ருதார்த்தராய் வாழ்ந்தருளிவந்தவாசார்யன் வைபவத்தைப்பன்னியுரைக்குங்கால் பாரதமாம்.

ஸ்ரீ தேசிகன் வாழ்க்கை

எம்பெருமானார் திருநாட்டுக்கெழுந்தருளுகிறபோது ஸ்ரீ பாதத்திலே ஸேவித்திருந்த முதலிகளுக்கு நியமித்தருளின கைங்கர்யங்கள் ஐந்துண்டு—அவையாவன—(1) பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல் (2) அதற்கு யோக்யதை யில்லையாகில் அருளிச்செயலைக் கேட்டு ப்ரவர்த்திப்பித்தல் (3) அதற்கு யோக்யதையில்லையாகில் உகந்தருளின திவ்யதேசங்களுக்கு அமுதுபடி சாத்துப்படி திருவிளக்குத் திருமாலை யுண்டாக்குதல் (4) அதற்கு யோக்யதையில்லையாகில் த்வயத்தினுடைய அர்த்தாநுஸந்தானம் பண்ணுதல் (5) அதற்கு யோக்யதையில்லையாகில் என்னுடையவனென்று அபிமானித்திருப்பான் ஒரு ஸ்ரீவைஷ்ணவனுடைய அபிமானத்திலே யொதுங்கி வர்த்தித்தல்செய்யலாம் என்பவையே அவை. நம் தேசிகன் பூர்வபூர்வங்களில் யோக்யதையிருக்கச்செய்தே இவ்வைந்து கைங்கர்யங்களையும் தாம் அநுஷ்டித்தும் உபதேசித்தும் இதுவே யாத்ரையாய் வாழ்ந்தருளினவர். **'शारीरकप्रवचनव्रतमाद्रियेथाः'** என்று குருவாகிய ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஆஜ்ஞையை சிரமேற்கொண்டு **'निर्विष्टं यतिसार्वभौमवचसामावृत्तिभिर्यौवनं'** என்றும் **'सत्यैकाल्म्विभाष्यं यतिपतिकथितं शश्वदध्याप्य युक्तान्'** என்றும் தாமே அருளிய க்ரந்தத்திலே ஸ்ரீ பாஷ்யாதி காலக்ஷேபத்தையே ப்ரதான கைங்கர்யமாகக் காட்டியருளினார். (2) 'துய்ய தமிழிருபத்தி நான்கிற்பாட்டின்றுறைகைநாலாயிரமுமடியோங்கள் வாழ்வே' என்று இரண்டாம் கைங்கர்யத்தைத் தலைக்கட்டியருளினார். முநிவாஹநபோகம், மதுரகவி ஹ்ருதயம், த்ரமிடோபநிஷத் ஸாரம், தாத்பர்ய ரத்நாவளி நிகமபரிமளம் ஆகியவை இதற்குச் சான்றாகும். (3) கோயிலிலும் காஞ்சியிலும் ஆலயோத்ஸவ ப்ரதிஹதியைப் போக்கி அது மூலம் மூன்றாவது கைங்கர்யம் நிர்வஹித்தருளினார். (4) **'न द्वयवचनतः क्षेमकरणम्'** என்று இதுவே போஷகமாகக் கொண்டிருப்பர். (5) 'பெரியோமல்லோம் நன்றும் தீதும் நமக்குறைப்பாருளரென்று நாடினோமே' **'परस्परहितैषिणां परिसरेषु मां वर्तय'** என்று ஸ்ரீவைஷ்ணவாபிமானமொன்றே தமக்குத் தஞ்சமாகக் கொண்டிருப்பர்.

தேசிகோபதேசம்

மநோவாக்காயங்கள் என்று சொல்லுகிற காரணங்கள் மூன்றாலும் பரிஹரணீயங்களிலும் பரிக்ராஹ்யங்களிலும் ஸாரத்தை நமக்குபதேசித்தருளினார். (1) மறக்கவேண்டுமவற்றில் ப்ரதாநம் விஷயாஸ்வாதம். நினைக்கவேண்டுமவற்றில்ப்ரதாநம் ஆசார்யன் செய்தவுபகாரம். (2) சொல்லாதொழியவேண்டுமவற்றில் ப்ரதாநம் ஆத்மோத்கர்ஷம். சொல்லவேண்டுமவற்றில் ப்ரதாநம் த்வயம். (3) 'செய்யாதன செய்யோம்' என்னுமவற்றில் ப்ரதாநம் ப்ரஹ்மவிதபசாரம். கர்த்தவ்யங்களில் ப்ரதாநம் பகவத் கைங்கர்யத்திலெல்லை நிலமான ஆசார்யாதி பாகவத கைங்கர்யம், என்று. **'प्रच्छन्नबौद्ध विजये परितो यतध्वम्'** என்பதாகச் சாஸ்த்ரஜ்ஞருக்குச் செய்த மற்றொருவுபதேசமுமுண்டு. அது தான் தர்சநஸ்தாபநார்த்தமாகச் செய்யவேண்டிய பரமதநிரஸநம். 'குருகையில் வந்து கொழுப்படக்கிய குலபதி தந்த குறிப்பில் வைத்தனர். பழமறையந்தி நடைக்கிடைச் சுவர் பரமதமென்ற திழத்த பத்தரே' என்பதாக வேதோபப்லாவகரான பாஹ்ய குத்ருஷ்டிகளை நிராகரணம் செய்கை ப்ராப்தம் என்பதை ஶாஸ்த்ர வித்துக்களுக்கு முக்யமென்று உபதேசித்தருளினார். இப்படி அவரவர் அதிகாராநுகுணமாகச் செய்யவேண்டிய கைங்கர்யங்களையும் நிலையையும் உபதேசித்தும் சததூஷணீ ஸர்வார்த்தஸித்தி முதலான தர்சநஸ்தாபக ப்ரபந்தங்களை நூற்றுக்கணக்காக நிபந்தநம் செய்தும், 'இங்கே திரிந்தேர்க்கிழிக்குற்றென்' என்ற நிலையில் நம்மை வாழ்வித்தருளிய வாசார்யோத்தமன் ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனே.

ஸ்ரீ ஆதிவண்சடகோப மாமுநிவர்

இனிப் புரட்டாசிக் கேட்டைதனில் புவியுதித்தோனாகிய வாசார்ய வள்ளலின் கருணை வெள்ளத்தின் சிறு திவலைகளையாயினும் பருகி உள்ளம் களிப்போம். இவ்வாசார்யோத்தமனுடைய வைபவம் 'ஸத்ஸம்ப்ரதாய முக்தா

வளீ' என்னும் குருபரம்பரா க்ரந்தத்தில் பரக்கக் காணலாகும். கிடாம்பிக்குலபதியான கேசவாசார்யருக்குக் குலோத்தாரகராய் அவதரித்தருளின ஸ்ரீநிவாஸாசார்யர் என்னும் திருநாமம் பெற்று ஸ்வபிதாவான கேசவாசார்யரிடத்தில் பஞ்சஸம்ஸ்காரங்களையும் பெற்றுத் திருவாய்மொழி முதலான திவ்ய ப்ரபந்தங்களையும் அதிகரித்தருளினர் நம் மஹாதேசிகன். ஸ்வபிதாவும் ஆசார்யருமான கேசவாசார்யருடைய நியமனப்படிக்கு அம்மாள் ஸந்நிதியில் விண்ணப்பம் செய்ய அம்மாளும் அப்படியே இந்த ஸ்ரீநிவாஸாசார்யருக்கு (1) ஸ்ரீபாஷ்யம் (2) பகவத் விஷயம் (3) ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம், (4) கீதாபாஷ்யம் முதலான ஸமஸ்த தர்சந க்ரந்த விசேஷார்த்தங்களையெல்லாம் ப்ரஸாதித்தருள அவற்றைப் பெற்று மஹாப்ரஸித்தராய் பஞ்சகாலபராயணராய் உபயவேதாந்த காலக்ஷேபபரராய் எழுந்தருளியிருந்தார். ஸ்வாமி தேசிகனைப்போலவே **विंशत्यब्दे विश्रुतनानाविध** வித்யரானமை இவ்வாசார்யனுக்கு அமைந்தது. 'செம்பொன்சேர் சிங்கவெற்புச்செழிக்க வந்தோனாகிய நம் மஹாதேசிகன் இருபது திருநக்ஷத்திரத்திலேயே சிங்கப்பிரான் நியமனத்தினால் துரீயாச்ரம ஸ்வீகாரம் செய்துகொண்டு 'பண்புடையவம்மாள்தன் பரிவுடையோன், பாடியத்தைப்பலகாலும் பகுத்துரைப்போன், பொன்பெயரோன் மார்பிடந்தான் புகழுரைப்போன், தண்புகழ்சேர் மாறனுரை சாற்றிடுவோன், இரஹஸ்யத்ரயஸாரத்தின் ரஸமுரைப்போன், இரஹஸ்ய முப்பத்திரெண்டும் ரஸித்துரைப்போன்' என்றுப்போல் புவநம் போற்றும்படியான பெருமையைப் பெற்றவர். த்ரிவேணீ ஸங்கமம்போல் ஆச்சான் ரஹஸ்யஸம்ப்ரதாயமும் பிள்ளான் மூலமான மற்றுள்ள க்ரந்த ஸம்ப்ரதாயமும் எம்பார் மூலமான பஞ்சஸம்ஸ்கார ஸம்ப்ரதாயமும் சேர்ந்துள்ள புண்ய தீர்த்தனான குலபதிநம் ஆசார்ய ஸார்வபௌமன். ஸ்ரீ அழகியசிங்கர் அருளாலே 'சடகோப ஜீயர்' என்றும் பொலிந்து நின்றபிரான் அருளாலே 'வண்சடகோப ஜீயர்' என்றும் நம்மாழ்வார் திருவருளாலே 'ஆதிவண்சடகோபஜீயர்' என்றும் திருநாமம் பெற்றுத் திகழும் பெருமை நம் ஆசார்யனுக்கே காண்கிறது.

ஸ்ரீமதஹோபிலமடம்

நம் ஆசார்யர்களுக்கு இங்ஙனே இருப்பதொரு நிர்பந்தம் உண்டு. ஸம்ப்ரதாயத்தைப் பிள்ளையில்லாதபொருளாகச்செய்யாமல் ஜ்ஞாநபுத்ரர்களை ஈன்று ஆசார்யத்வோபயுக்தகுணங்களாலே அவர்களை வளர்த்து தாயதநம்போன்ற ஸம்ப்ரதாயத்தை அவர்கள் வசமாக்கி உலகுய்யச்செய்தலே அது. ஆசார்யக்ருத்யாதிகாரத்திலே இதன் முக்யத்வம் பரக்கக் காணலாம். தர்சநஸ்தாபகரான வெம்பெருமானார் எழுபத்திநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளை லோகாசார்யராகச்செய்து அவர்கள் மூலம் விசிஷ்டாத்வைத தர்சநம் பரவச்செய்தருளியது ஸம்ப்ரதிபந்நமான விஷயம். முற்பட்ட சங்கராசார்யரும் பிற்பட்ட மத்வாசார்யரும் மடம் ப்ரதிஷ்டாபநம்செய்து அதனால் தமது மதத்தைப் பரவச்செய்துள்ளார்களன்றோ. ஆனால் ஸ்ரீ பாஷ்யகாரர்மட்டில் ஆசார்ய புருஷர்கள் எழுபத்திநால்வரைக்கொண்டே தர்சந ப்ரவர்த்தனம் செய்தருளியது க்ருஹஸ்தாச்ரமிகளுக்கும் ஆசார்யத்வம் முக்யமென்பதைத் தெளிவிப்பதற்காகவே. ஸ்ரீ தேசிகன் பர்யந்தமாக ஆச்ரம நியதி யின்றிக்கே ஆசார்யத்வம் அநுவ்ருத்தமாயுள்ளது நம் ஸம்ப்ரதாயத்தில். பின்பும் சில ஸம்ப்ரதாயங்களில் காண்கிறோம்.

ஸ்ரீ தேசிகனுடைய ஸாக்ஷாத் சிஷ்யரான ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமியும், அவருக்குப்ரசிஷ்யரான ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுமே மடத்திற்கு மூலபுருஷர்கள். தேசிகனுடைய திருவவதார தினமே ப்ரஹ்மதந்த்ரஸ்வாமியின் அவதாரதினமும். **'चैत्रः श्रीमानयं मासः'** என்கிறபடியே ஜ்ஞானஸம்பத்துக்கு வித்துக்களான வாசார்யர்களை ஈன்ற கந்யையாகும் இம்மாஸம். திருக்குடந்தை தேசிகன் முதலிய ஆசார்யரத்நங்களின் திருவவதாரமும் இந்த மாஸத்திலேயே அமைந்துள்ளது. தேசிகனையும் தச்சிஷ்ய ப்ரசிஷ்யர்களான வாசிரியர்களையும் ப்ரதமாசார்யனான திருவேங்கடமுடையானையும் இம்மாதத்திலே மூன்று திருநக்ஷத்ரங்களிலே ஆராதனம் செய்து அனைவரும் அவர்களுடைய இன்னருளை யடைந்து தன்யர்களாகவேணும்.

ஸ்ரீ:

நமது கடமை

ஸ்ரீ. உப. பாதூர், தூப்புல், ராமபத்ராசார்ய ஸ்வாமி, சிரோமணி, திருவுள்ளூர்.

ஶ்ருதியில் 'ஆசார்யதேவோ பவ' என்றும், 'தேவமிவாசார்யமுபாஸீத' என்றும் பலபடியாக ஆசார்யனிடத்தில் தேவதைகளிடத்தில் காட்டுவதுபோன்ற பக்தி விச்வாஸங்களைச்செலுத்தவேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளது. ஶாஸ்த்ரார்த்தங்களை ஸதாசார்யனிடத்தில் அறிந்தும், அவைகளில்சொல்லப்பட்டுள்ளபடி தான் நடந்து வருவதுடன் அச்சாஸ்த்ரார்த்தங்களைப் பிறர்க்கும் போதித்தும், அச்சிஷ்யர்களையும் ஶாஸ்த்ரவழிதவறாமல் நடந்து வரும்படி செய்பவனே ஆசார்யன் என்று ஆசார்ய லக்ஷணமும் சொல்லப்பட்டுள்ளது. பகவானே லோகத்தாருடைய ஹிதத்தையுத்தேசித்து அவ்வப்போது ஆசார்யனாக அவதரித்து, ஜனங்களுக்கு ஜ்ஞானப்ரதானாதிகளைப் பண்ணி ரக்ஷிக்கிறான் என்பதும் அநேக ப்ரமாணஸித்தம்.

ச்ருதி சொன்ன வர்த்தத்தையே உபநிடதங்களும், ஸ்ம்ருதிகளும், புராணங்களும் பற்பல வ்ருத்தாந்தங்கள் மூலமாக ஸ்தாபித்திருக்கின்றன. மஹாபாரதிகளும் ஸதாசார்யனையடைந்து நற்கதி யடைந்தனர் என்பதை க்ஷத்ரபந்து முதலானோர்களுடைய கதைகளைக் கொண்டு அறிந்துகொள்கிறோம். 'தேவதாயா மந்த்ரஸ்யாபி குரோஸ்த்ரயாணாமபி பக்திதஃ। ஐஹிகாமுஷ்மிகீ ஸித்திர்த்விஜஸ்யாஸ்தி ந ஸம்ஶயஃ' [ஸ்வாராத்யதேவதை, ஆசார்யன், மந்த்ரம் இவைகளை பக்தியோடு அநுஸந்திப்பதனால் ஐஹிகமாயுமாமுஷ்மிகமாயுமுள்ள ஸகல பலஸித்தியும் ப்ராஹ்மணனுக்கு உண்டாகிறது] என்று புராண ஸமுச்சயத்தில் கூறி இருப்பதால், ஆசார்யனை பக்தியோடு உபாஸித்தால் ஸகல பலஸித்தியும் கிட்டுமென்பது சொல்லப்பட்டது. ஆக ஆசார்யனிடத்தில் அவச்யம் பக்தியுடன் நடந்துவரவேண்டுமென்பது ஸித்தமாயிற்று. ஆசார்யனைப்போலவே பகவானும் நமக்கு நன்மைசெய்பவனாகவிருந்த போதிலுமாசார்யனுக்கு விசேஷமுண்டென்று பெரியோர் கூறுவர். பகவான் ஸாதுஸம்ரக்ஷணம் செய்வதுடன் துஷ்டநிக்ரஹமும் செய்வர். ஆசார்யன் ஸாத்வஸாது விபாகமில்லாமல் எல்லோருக்கும் ஜ்ஞானத்தைக் கொடுத்து ரக்ஷிப்பார். பகவான் அஸுரர் முதலானோருக்கு விபரீதோபதேசம் செய்து கூட தேவதைகளை ரக்ஷித்திருப்பதாக புராணாதிகளில் பார்க்கிறோம். ஓரிடத்திலாவது விபரீதமாக உபதேசம் செய்த ஆசார்யனைப்பற்றி நாம் அறிந்திலோம். ஆகையாலே 'தானாசார்யோபதேஶஶ்ச ராஜதண்டஶ்ச பாலயதே' [அவர்களை ஆசார்யோபதேசமும், ஈச்வர தண்டனையும் ரக்ஷிக்கின்றன] என்று சொல்லப்பட்டுள்ளது. பகவான் தண்டனை கொடுத்து ரக்ஷிப்பவனே ஆசார்யன் உபதேசம் செய்து ரக்ஷிப்பதாக உள்ளது.

இப்படி லோகோஜ்ஜீவனார்த்தமாக அவதாரம் செய்துள்ள ஆசார்யர்களனேகர். ஆசார்யாவதாரம் உத்க்ருஷ்டமானதினாலேயே பகவானும் கீதாசார்யனாகி அர்ஜுனனுக்கு கீதோபதேசம் செய்தருளினான். நாராயணனாக ஆகி அஷ்டாக்ஷரத்தை உபதேசித்து ஸர்வலோகங்களையும் ரக்ஷித்துள்ளான். ஆக பகவான் நமக்குப்ரதமாசார்யனாகிறார். பின்புள்ள ஶடகோபப்ரப்ருதிகளான ஆழ்வார்கள் அதிகூடங்களான ரஹஸ்யார்த்தங்களை திருவாய்மொழி முதலிய திவ்யப்ரபந்தங்கள் வாயிலாக வெளியிட்டருளியபடியால் அவர்களுமாசார்யர்களாகிறார்கள். அதன்பின் தோன்றிய நாதமுனி ஆளவந்தார் முதலானோர்கள் அவ்வப்பொழுது காலதோஷாதிகளால் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளும் உபதேசங்களும் மறைந்து அழியாதபடி ரக்ஷித்து உபதேசித்துவந்தபடியால் அவர்களும் ஆசார்யர்களாகிறார்கள். இவர்களுக்குப் பின் பலவிதமான வேதவிருத்தமான மதாந்தரஸ்தர்கள் உலகினரை மயக்கி மிகவும் க்ஷீணதசையை அடையும்படி செய்தபொழுது ஸ்ரீபாஷ்யகாரரவதரித்தார். மதாந்தரங்களை ஒழித்து ஸ்ரீவிசிஷ்

டாத்வைதஸித்தாந்தம் எனப்படும் ஸ்ரீவைஷ்ணவமதத்தை நிலைநிறுத்த, ஸ்ரீபாஷ்ய, கீதாபாஷ்யாதிகளான அநேகக்ரந்தங்களைப்பண்ணியும், ஆங்காங்கு வாதப்போரில் வாதிகளை வென்றும், மிக ரஹஸ்யமான மந்த்ராதிகளை சிஷ்யஜனங்களுக்கு உபதேசித்தும் ஆசார்யனாக விளங்கினார் ஸ்ரீபகவத்ராமாநுஜர். இவராலேயே நம் ஸித்தாந்தம் நிலைநிறுத்தப்பட்டதால் 'ராமாநுஜஸித்தாந்தம்' என்று வழங்கப்படுகிறது. ஆதலால் நமது ஸித்தாந்தத்தில் மற்றை ஆசார்யர்களைவிட மிக முக்யமானவர் ஸ்ரீபாஷ்யகாரர்.

ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்தாபித்தருளிய ஸித்தாந்தத்தில் பின்புள்ளோர் எவ்வித தூஷணமும் சொல்லமுடியாதபடி நூற்றுக்கதிகமான க்ரந்தங்கள் மூலமாய் ரக்ஷித்து, லோகத்திலுள்ளவர்களின் ருசிக்கநுகுணமாக ஸம்ஸ்க்ருத த்ராவிட மணிப்ரவாள நடைகளிலும், கத்ய பத்ய நாடகரூபமாயும் க்ரந்தங்களைப் பண்ணி, ஸுகரோபாயமான ப்ரபத்திமூலம் ஸர்வேச்வரனை யடைந்து அந்தமில்லாப்பேரின்பவாழ்வு பெற வேண்டியதை உபதேசித்ததாலும் தூப்புல் வள்ளலாகிய ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனும் மிக முக்யமானவர். மற்றவர்கள் ஆசார்யர்களானபோதிலும் தேசிகன் என்று அஸாதாரணமாக வழங்கிவரும்படி ஆசார்யனாக விளங்கியவர் வேதாந்தவாரியரே. இவருக்கடுத்தபடி ஸமீபகாலத்தில் இப்படி சிஷ்யஸம்பத்துடன் ஆசார்யகம் செய்து வெகுமஹிமையுடன் விளங்கியது ஸ்ரீமதஹோபிலமடம் ஸ்தாபகரான ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனாகும். இவர் கலியுகத்தின் ரக்ஷகர் எனப்படும் சிங்கவேழ்குன்றத் தெம்பெருமானுடைய திவ்ய நியமனப்படி ஸந்யாஸாச்ரமம் பூண்டு ஸ்ரீமாலோலனை ஒவ்வொரு க்ராமந்தோறும் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்று கலிகாலுஷ்யத்தால் ஜ்ஞாநசூந்யர்களான ஜனங்களை பகவத்தாஸர்களாக்கி திருவிலச்சினை முதலியவற்றால் ஸம்ஸ்கரித்து, அவர்களுக்கு ஶரணாகதி முதலிய ஆத்மகார்யங்களைச் செய்வித்து அருளியபடியால் அவரும் மிக முக்யமானவர்.

இப்படி அநேக ஆசார்யஸந்ததியில் தோன்றிய அனைவரும் நம்மால் போற்றியுகந்து புந்தியிற் கொள்ளத்தக்கவர்களே. அநேகம் ஆசார்யர்களிடத்தில் நாம் பக்தி செய்வதென்பது ச்ரமஸாத்யமே. ஆயினும் குருபரம்பரைகளில் முக்யமானவர்களை அநுஸந்தித்துக் கொண்டாடுவது அவச்யம். ஸாத்விகர்களாயும், ஸமதமாதிகுணங்களை யுடையவர்களாயுமுள்ள ஆசார்யர்கள் எங்கு பூஜிக்கப்படுகிறார்களோ அங்கு தர்மதேவதை வஸிப்பதால் நீங்கள் அங்கு வஸிக்கவேண்டும்' [குரவோ யத்ர பூஜ்யந்தே ஸாத்வந்த: ஶாந்தசேதஸ: | வஸ்தவ்யம் தத்ர யுஷ்மாபி: யத்ர தர்மோ ந ஹீயதே] என்று பாரதத்தில் சொல்லப்பட்டுள்ளது. 'யோ விஷ்ணோ: ப்ரதிமாகாரே லோஹபாவம் கரோதி வை | யோ குரௌ மாநுஷம் பாவம் உபௌ நரகபாதிநௌ' [எவன் செம்பு வெள்ளி முதலிய த்ரவ்யங்களாலான பகவத்பிம்பத்தில் உலோகமென்ற புத்தி கொள்கிறானோ, எவன் ஆசார்யனை ஸாதாரண மனிதனென்ற புத்தி கொள்கிறானோ இவ்விருவரும் நரகத்தை அடைவர்கள்] என்பதால் முதலில் சொன்னபடி ஆசார்யனிடம் தேவதா விச்வாஸத்துடனிருக்கவேண்டியதும் அவச்யமாகிறது.

ஆசார்யனிடத்தில் நாமிருக்க வேண்டியது எப்படியெனில் சிச்ருஷை முதலியவற்றைச் செய்தும், அவருக்கநுகூலங்களைச் செய்தும், ப்ரதிகூலங்களைச் செய்யாமலும், த்வேஷமின்றியும் நடந்து வருவதுடன் அவருடைய வஸ்துக்களான க்ருஹாதிகளிலும், புத்ராதிகளிடத்திலும் அவரிடத்திற்போல இருந்துவருவதுமாகும். இப்படி ஜீவிதகாலத்தில் நடந்துவரவேண்டும். இவர்கள்பால் நாம் செய்யும் கைமாறு எதுவாயினும் ஈடாகாதாகையால் 'போற்றியுகப்பதும் புந்தியுட் கொள்வதும் பொங்குபுகழ் சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ' என்று க்ருதஜ்ஞனாக இருப்பதுடன் அவரது புகழ்களைச்சாற்றிவரவேண்டுமென்று ஸ்ரீதேசிகன் விதித்தது.

ஆசார்யனுடைய வியோகாநந்தரம் திருநக்ஷத்ர தீர்த்ததினங்களில் பகவதாராதனபாகவதாராதனங்கள் செய்வது மிக அவச்யமென்று பாரத்வாஜஸம்ஹிதாதிவசநங்களால் ஏற்படுகிறது. 'ஸாக்ஷாந்நாராயணனே உலகங்களை ஸம்ஸாரஸாகரத்தினின்றுமுத்தாரணம் செய்வதற்காக ஆசார்யரூபமெடுத்துக் காப்பாற்றுகிறானென்று சொல்லப்படுவதால் அந்த பகவானுடைய ஆராதனமும், 'தஸ்மாந் மத்பக்தபக்தாஶ்ச பூஜநீயா விஶேஷத:' என்றபடி தன்னடியார் தமக்கடியாரடியாராகிய பாகவதோத்தமர்களை விசேஷித்துப் பூஜிப்பதும் மிக அவச்யம்.

ஸ்ரீ:

பேரருளாள பேராசிரிய ஸல்லாபம்

ஸ்ரீ. உ.வே. வித்வான், அத்தி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.

ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ பேரருளாளன் மீது தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் அனேக க்ரந்தங்களை அருளிச்செய்து யிருக்கிறாரென்பது ப்ரஸித்தம். அதில் வரதராஜபஞ்சாசத் என்பதும் ஒன்று. இக்ரந்தத்தை ஸ்ரீ தேசிகன் 50 ச்லோகங்களால் முடித்து யிருப்பதைக் கருதி இதற்கு இப்பெயர் உண்டாயிற்று இந்த ஸ்தோத்திரத்தின் பெருமையை '**सप्तार्णवी यदि समेत्य मषीभवित्री**' என்கிறபடி ஏழு ஸமுத்திரங்களும் இங்கி (மை)யாக ஆனாலும் எழுத ஒருவராலும் முடியாது. இப்படிப்பட்ட பெருமை ஸ்ரீ தேசிகன் க்ரந்தம் ஒவ்வொன்றுக்கும் உண்டென்பதை மதாந்திரஸ்தரான அப்பைய தீக்ஷிதரும் '**इत्थं विचिन्त्यास्सर्व भावास्सन्ति पदे पदे**' என்று பேசியிருக்கிறார்.

முன்னொரு காலத்தில் ப்ரஹ்மா எம்பெருமானை நேரில் ஸேவிக்கக் கருதி எவ்வளவோ தபஸ் முதலியதுகளைச் செய்து அதை அடையாமல் வருந்திக்கொண்டிருந்தஸமயத்தில் ஆகாசத்தில் ஒரு அசரீர வாக்குச் சொன்னதைக் கேட்டு பாரத தேசத்தில் ஸத்ய வ்ரதக்ஷேத்ரத்தில் அச்வமேத யாகம் செய்யத் தொடங்கினார். ப்ரஹ்மா யாகம் செய்ய உத்தேசித்த இடத்தில் (ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தில்) விச்வகர்மாவை அழைத்து யாகசாலை வேதி முதலியவைகளை அமைக்கும்படி கட்டளையிட்டார். விச்வகர்மாவும் அப்படியே செய்து அதற்கு 'காஞ்சீ' என்றும் பெயர் இட்டான். உடனே ப்ரஹ்மா அங்கு யாகம் செய்யும் பொருட்டு தம் பத்நியான ஸரஸ்வதிதேவிக்குச் சொல்லியனுப்பினார். ஸரஸ்வதிதேவியும் ப்ரஹ்மாவிடத்திலுள்ள ஏதோ கோபத்தினால் யாகத்திற்கு வர மறுத்துவிட்டாள். உடனே ப்ரஹ்மா ஸாவித்ரி முதலிய பத்நிகளுடன் யாகம் செய்ய ஆரம்பித்தார்.

பிறகு சிலர் ஸரஸ்வதியிடம் சென்று யாகத்தை வேகவதீ ரூபமாகவந்து நாசம்செய்யும்படி தூண்டினர். அதைக்கேட்ட ஸரஸ்வதியும் கோபாக்ராந்தையாய்வேகமாகநதீரூபங்கொண்டு யாகசாலையை அழிக்கமுற்பட்டனள். ப்ரஹ்மாவின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிவைக்கத் திருவுள்ளம் கொண்ட எம்பெருமான் யாகசாலையின் அருகில் ஒரு அணையாகச் சயநித்துக்கொண்டான். ஸரஸ்வதியும் ஒதுங்கி அந்தர்த்தானமாகிவிட்டாள். பிறகு ஸரஸ்வதி கோபம் சாந்தமானவாறே ப்ரஹ்மாவுக்கு உதவியாக யாகத்தில் கலந்துகொண்டாள். அப்பொழுது யாகத்தின் நடுவே பெரிய தேஜஸ்ஸும் மத்தியில் புண்யகோடி என்னும் விமானமும் தோன்ற அதின்நடுவேஸ்ரீபேரருளாளன் தேவிமாருடன் ஸேவை ஸாதித்தான். பேரருளாளனைக் கண்ட ப்ரஹ்மா அதிக ஸந்தோஷமடைந்து அவனைவாயாரத்துதித்தான். அப்பொழுது அங்கிருந்த தேவர்களும் மற்றுமுள்ளாரும் ஸ்ரீ பேரருளாளனை இங்கேயே எப்பொழுதும் வீற்றிருக்கும்படி ப்ரார்த்தித்தார்கள். அதுமுதற்கொண்டு ஸ்ரீ பேரருளாளன் இங்கு (காஞ்சியில்) ஸேவை ஸாதிக்கிறானென்று காஞ்சி மாஹாத்ம்யத்தின் வரலாறு. இவ்விஷயத்தை ஸ்ரீ தேசிகன் ஹம்ஸ ஸந்தேசத்திலும் '**ज्ञातामादौ कृतयुगमखे धातुरिच्छावशेन**' என்று அழகாக ஸாதித்தார். இந்த விஷயத்தையே வரதராஜபஞ்சாசத்தின் முதல் ச்லோகத்தினால் காட்டியருளினார்.

'**...पद्मयोनेस्तुरगसवनवेद्यां श्यामलो हव्यवाहः**'

இப்படி பக்தர்களுக்கு அவரவர் இஷ்டப்படி வரத்தைக்கொடுக்கிறவரான தேவப்பெருமானை

ஸ்ரீ தேசிகன் ஶரணமடைந்து தனக்குமாத்திரமல்லாமல் எல்லோருக்கும் க்ஷேமத்தைப் பிரார்த்திக்கிறார். 'कलयतु कुशलं नः कोपि कारुण्यराशिः'. 'एते सत्पुरुषाः परार्थ घटकाः' என்கிறபடி தனக்கு மாத்திரமல்லாமல் ஸ்ரீ தேசிகன் விசாலமான மனத்தை யுடையவர் என்பது வ்யக்தமாகிறது. 'कारुण्यराशिः' காருண்யம் என்பது க்ருபா—அருள், அதின் ராசியை உடையவர்என்பதுதான்பேரருளாளனென்று தமிழில் வழங்கப்படுகிறது.

ஸல்லாபம்

(ஸ்ரீ தேசிகன் செய்த ஶரணாகதியினால் ப்ரஸன்னரான தேவப்பெருமாள் ஸ்ரீ தேசிகனை கடாக்ஷித்து பரீக்ஷிக்கத் திருவுள்ளம்பற்றி) ஹே தூப்புல் பிள்ளாய்! என்னை ஶரணமடைந்த உமக்கு உம்மனோரதத்தைக் கொடுக்க எனக்கு மனம் வரவில்லை. உம்மிடத்தில் ப்ரீதியுள்ள எவர்களிடத்திலாவது சென்று உம் இஷ்டத்தைப் பெற்றுக்கொள்வீர். என்று ஸாதித்தார்.

ஸ்ரீ தேசிகன்—என்னிடத்தில் வாத்ஸல்யம் உமக்குத்தான் உண்டு; மற்றொருவருக்கும் கிடையாது. ஆகையால்தான் உம்மை சரணமாகப்பற்றினேன். தோஷங்களைப்பாராமல் இருக்கை வாத்ஸல்யம். 'वात्सल्यमेव भवतो मुखरीकरोति.'

ஸ்ரீ பேரருளாளன்—அப்படியாகில் எனக்கு வைஷம்ய நைர்க்ருண்ய தோஷம் இல்லையென்று எல்லோரும் அறியவேண்டுமே. அப்படிச்செய்வீரா?

ஸ்ரீ தேசிகன்—உம் பெருமையை ஸர்வஜ்ஞர்களான ஆழ்வாராதிகளாலும் பேசமுடியவில்லையே, அல்பஜ்ஞனான அடியேன் எப்படி ஸ்துதிப்பது? அப்படி ஸ்துதிக்க வேண்டுமாகில் தேவரீரே அடியேனுக்கு ஜ்ஞாநத்தையும் தந்தருள்வீராக. 'तन्मे समर्पय मतीं च सरस्वतीं च त्वामञ्जसास्तुतिपदैर्यदहं धिनोमि.'

ஸ்ரீ பேரருளாளன்—இப்படி நான் கொடுக்கிற ஜ்ஞாநாதிகளை ஸஹகாரியாகக்கொண்டு என்னை நீர் ஸ்துதித்தீராகில் எனக்கு என்ன ப்ரயோஜனம்?

ஸ்ரீ தேசிகன்—தேவரீர்கொடுத்த ஜ்ஞாநாதிகளைக்கொண்டு தேவரீரை அடியேன் ஸ்துதிப்பதினால் தேவரீருக்குத்தான் அதிக ஆநந்தம். உலகத்தில் தான் சொல்லிவைக்கும் சொற்களை சொல்லுகிற கிளியின் வார்த்தையினால் கிளியைப் பழக்கி வைக்கிறவர்களன்றோ அதிக ஆனந்தமடைகிறார்கள். 'आवर्जयन्ति हृदयं खलु शिक्षकाणां मञ्जूनि पञ्जरशकुन्तविजल्पितानि.'

ஸ்ரீபேரருளாளன்—வாரீர்தூப்புல்பிள்ளையே! நீர் என்னை ஏமாற்றப்பார்க்கிறீர். முதலில் என்னை ஶரணமடைந்து நித்ய ஸுகமான குசலத்தைக் கேட்டீர். பிறகு அதற்கு நாம் 'संसार तन्त्रवाहित्वाद्रक्ष्यापेक्षां प्रतीक्षते' என்கிற கணக்கிலே ஏதாவது ஒரு ஸ்துதி பண்ணக் கடவீர் என்றோம். அதற்கு நீர் சக்தியில்லை, அதையும் நீர் கொடுக்கவேணும் என்று கேட்கிறீர். அதற்குப் பிறகும் என்ன வென்ன கேட்பீரோ? எல்லாவற்றையும் பிரமன், சங்கரன் முதலியவர்களிடத்தில் கேட்டு அடைவீராக.

ஸ்ரீ தேசிகன்—பிரமனும் சங்கரனும்உமக்குச் சட்டைப் போன்றவர்கள்தானே அவர்களை அடைந்தால் பலன் கிட்டாது. அவர்களும் தேவரீர் உத்தரவை சிரஸா வஹித்து கார்யங்களைச் செய்கிறார்கள். சில ஸமயங்களில் கர்வத்தினால் தேவரீர் ஆஜ்ஞையை அதிக்ரமித்தால் கெட்டபலனையுமநுபவிக்கிறார்கள். 'आशाधिपेषु गिरिशेषु चतुर्मुखेष्वप्यव्याहताविधिनिषेधमयी तवाज्ञा'

ஸ்ரீபேரருளாளன்-ஹே வேங்கடநாதார்யரே! நீர் சொல்வது முழுமையும் ஸரியே. ஆனால் நீர் அதிக துஷ்கர்மாக்களைச் செய்து இருப்பதால் நாம் உம்மை நிக்ரஹிக்க ஸங்கல்பித்து இருக்கிறோம்.

ஸ்ரீ தேசிகன்—அடியேன் என்ன செய்வேன். அநாதிகாலமாக அடியேனிடத்தில் மூட்டை மூட்டையாக உள்ள துஷ்கர்மங்களைக்கண்டு தேவரீர் அடியேனை நிக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றினால் அதை மாத்திக்கொள்ளக் கூடிய அஞ்ஜலியை செய்கிறேன். க்ஷமித்தருள்வீராக. प्रत्यस्त्र मंजलिरसौ तवनिग्रहास्त्रे. இங்கு ஸ்ரீதேசிகன் திருவுள்ளம் - தேவப்பெருமாள் க்ருஷ்ணனாக தேசிகனுக்கு ஸேவை ஸாதிப்பதால் 'अंजलिं याचमानः' என்கிறபடி அஞ்ஜலியை

யாசிப்பவனாகையாலே அஞ்ஜலியைச் செய்தாலவன் நிக்ரஹ ஸங்கல்பத்தை மாற்றிக்கொள்வான் என்று.

ஸ்ரீ பேரருளாளன்—வேதாந்ததேசிகரே! நீர் கவிஸிம்ஹமாகையாலே என்னைக்கவிபாடி ஏமாற்றப் பார்க்கிறீர் போலும். உமக்கு என்ன வேண்டுமென்பதைச் சொல்லும்.

ஸ்ரீ தேசிகன்—உம்முடைய க்ருபா கடாக்ஷமானது எப்பொழுதும் என்மேலேயிருக்கும்படி அருளவேண்டும். 'देवत्वदीय करुणामृत दृष्टिपातः'.

ஸ்ரீ பேரருளாளன்—நீர் என்னுடைய க்ருபா கடாக்ஷத்தை யாசிப்பீராகில் ஒரு ஆசார்யனை அணுகி பக்தி அல்லது ப்ரபத்தி வித்யையை அநுஷ்டிக்கக் கடவீர்.

ஸ்ரீ தேசிகன்—ஹே வரத! இவ்வளவு தூரம் அடியேனுக்கு ஸேவை தந்து அடியேனுடைய அஞ்ஜலியை ஸ்வீகரித்து அடியேன் மீதுள்ள நிக்ரஹஸங்கல்பத்தைமாற்றினதேவரீர் அடியேனுக்கு ஆசார்யனாகஇருந்து மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும்தந்தருளவேணும். 'एतावतीं गमयितुः पदवीं दयालोः शेषाध्वलेशनयने कइवाति भारः.'

ஸ்ரீ பேரருளாளன்—தேசிகஸார்வபௌமரே! உம் நயமானப் பேச்சில் நாம் மயங்கமாட்டோம். உம்முடைய சர்மாக்களை அநுஸரித்து கொஞ்சகாலம் உம்மை இந்த ஸம்ஸாரத்திலேயே வைக்க எண்ணியிருக்கிறோம். பிறகு உம் மனோரதத்தைப் பூர்த்தி செய்வோம்.

ஸ்ரீ தேசிகன்—உம்மை சரணமாகவடைந்த என்னை ஸம்ஸாரத்திலேயே இருக்கும்படி ஸங்கல்பிப்பீராகிலுமக்கு சரணாகதனை காப்பாற்றுகிறவர் என்ற பிருது பரிஹாஸாஸ்பதமாகும். 'संस्यग्भविष्यति ततश्शरणागतानां संरक्षितेतिबिरुदं वरद त्वदीयम्'.

ஸ்ரீ பேரருளாளன்—வேதாந்தாசார்யரே! 'भक्त्या परमया वाऽपि प्रपत्या वा महामते । प्राप्योऽहं नान्यथा प्राप्यः' என்கிறபடி பக்தி அல்லது ப்ரபத்தியைச் செய்வதால்தான் உம் மனோரதம் பூர்த்தியாகும்.

ஸ்ரீதேசிகன்—அடியேன் பரமாகிஞ்சனனும் க்ருபணனாகவும் ஆவேன். ஆகையால் அடியேனிடத்தில் ஸஹகாரியான தர்மங்களை (பக்தி முதலியன) எதிர்ப்பார்ப்பது கூடாது. 'किंवा करीश कृपणे मयि रक्षणीये धर्मादिवाह्यसह कारिगवेषणेन.'

ஸ்ரீபேரருளாளன்—கவிதார்க்கிகஸிம்ஹமே! நீர் சொல்வது ஸரி. நீர் சொல்லியபடி உம்மை பாபகர்மத்திலிருந்து ரக்ஷிக்க ஸாதனம் தத்ஸமயம் இல்லை. அது கிடைத்தவுடனே உம்மை ரக்ஷிக்கிறோம்.

ஸ்ரீ தேசிகன்—இதை அடியேன் ஒத்துக் கொள்ள முடியாது. கஜேந்திரன் சரணாகதி செய்த காலத்தில் கருடாழ்வானையும் இழுத்துக்கொண்டு தேவரீர் சக்ராயுதத்தால் முதலையைக்கொன்று ஸ்ரீ கஜேந்திரனைக் காப்பாற்றவில்லையா? அடியேனிடத்திலும் அந்த ஸாமக்ரிகள் வேலை செய்யாதா? மனுஷ்யனுக்கு வேறு மிருகத்துக்கு வேறு என்பது உண்டா? 'मातङ्गमानुषभिदा न विशेष हेतुः.'

ஸ்ரீ பேரருளாளன்—ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரே! நீர் சொல்வதும் ஸரி. ஆனாலும் நாம் உம்மை இங்கு ஸம்ஸார மண்டலத்திலேயே கொஞ்சகாலம் வைத்திருக்கத் தீர்மானித்திருக்கிறோம். வேண்டுமானால் என்பக்கத்திலிரும்.

ஸ்ரீ தேசிகன்—ஹே அத்திமாமலையானே! தேவரீர் என்னிடத்தில் ப்ரஸன்னராக இருந்தாலும் உமக்கு ஸமீபத்தில் எனக்கு வாஸமும் யிருந்தால் இதுவே போதுமானது. இதுதானே மோக்ஷம் என்பதும். 'संसार एष भगवन्नपवर्ग एव.' தேவரீர் திருவுள்ளப்படியே இருக்கிறேன் ஆனால் குதிரை நம்பிரான், பெரியதிருவடி, திருத்தேர், ஆந்தோளிகை இவைகளில் தேவரீர் எழுந்தருளி ஸேவை ஸாதிப்பது மாத்திரமல்லாமல் எப்பொழுதும் என் மனத்தை விட்டு அகலாமலும் இருக்கவேண்டுமாய் ப்ரார்த்திக்கிறேன். 'वरदसततमन्तर्मानसं सन्निधेयाः.'

ஸ்ரீபேரருளாளன்—இப்படியிருந்தால் உமக்கு ஸந்தோஷம்தானே? வைகுண்டத்தைக் கேட்கமாட்டீரே? உண்மைதானே?

ஸ்ரீதேசிகன்—தேவரீர் எப்பொழுதும் என் மனத்தைவிட்டு அகலாமல் இருந்தால் வைகுண்டத்தில் அடியேனுக்கு ஆசையில்லை. ஸத்யமாகச்சொல்லுகிறேன். 'सत्यं शपे वारणशैल नाथ वैकुण्ठवासेऽपिनमेभिलाषः.'

ஸ்ரீ:

தேசிகன் மேன்மை

ஸ்ரீ. உப. வித்வான், உத்தமூர், வீரராகவாசார்யஸ்வாமி, மாம்பலம்.

மேன்மையென்பது ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வகையாயிருக்கும். எம்பெருமானுக்கென்ன மேன்மையென்றால், 'பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகுமங்காதுஞ் சோராமே'யாள்கின்ற செங்கோலுடைய செல்வனாயிருக்கையென்போம். ஒரு சிறிய தேசத்தையாள்பவனுக்குப் பக்கத்திலுள்ள தேசத்தைப்பற்றின பொறுப்பு இராது. தன்னுடைய தேசத்திலுள்ள எங்கும் சிறிதளவும் குறை காணாதவாறு ஆள்வது அரசனுக்கு இருக்க வேண்டிய நல்லொழுக்கமாம். உபயவிபூதிநாதனுக்கு ஒரு விபூதிக்கும் மற்றொரு விபூதிக்கும் ஒற்றுமையிருக்கும்படி செங்கோல் செலுத்துவது அதனாலவச்யமாயிற்று. ஓரிடத்திலிருப்போர்க்கு உயர்ந்தவகையிலே யோகக்ஷேமங்களை நடத்திக்கொண்டு தனது ஆளுகைக்குட்பட்ட வேறிடத்திலே வெகுவிதமான கஷ்டங்களையே விளைவித்தால் வைஷம்யம், பக்ஷபாதமென்றவாறு பலர் பழிக்க முன்வருவர். ஆயினும் குற்றவாளிகளைக் குற்றங்களுக்குத் தண்டனை செய்யாவிடில் அப்பொழுதும் பேர் கெட்டுவிடும். அதனால் எம்பெருமான் இவ்விபூதியிலிருக்கும் ஜீவர்களுக்கு வினைப்பயன்களையும் விளைவித்து வீடுபெற்றுய்ய விரகும் வெளியிடுவது தன் கடமையென நினைத்து அவ்விரகை ஆராய்ந்தான். பலவகைப் பக்திமார்க்கங்கள் கண் முன்னே நின்றன. ஆடிப்பாடியகம் கரைந்து இவ்வனுபவத்திலிழிந்தார் பலரைப் பார்த்தே பிறரும் நன்னெறியில் நின்று நலம் பெறக்கூடுமென்று இவற்றை விரிவாக உபதேசிக்க இசைந்தான். ஆயினும் இவ் வழியிலிறங்கி வருபவரை மட்டும் உய்விப்பதென்றால் இது நமக்குநற்புகழுக்குப்போதாதென்று நினைத்து, பக்தரைப் பார்த்துத் திருந்தியுள்ளார்ப் பரமபுருஷார்த்தம் பெறப் பேரவாக் கொண்டார்களாகில் அவர்கள் ப்ரபத்தியினாலேயே மோக்ஷம் பெறலாமென்று வேறு வழியும் அமைத்தான். உலகை உய்விப்பதற்காகவே ஸ்ருஷ்டிக்கும் அவன் இந்த வழியையும் ஆதியினின்றே உபதேசித்து வந்தான். உலக ஸ்ருஷ்டியானது ப்ரபத்திபண்ணிப் பரமபுருஷார்த்தம்பெறுவதற்காகவே என்று தெளிந்து ப்ரபத்திபண்ணுமதிகாரிகள் சிலரே. இப்படிப் பண்ணும் வகையை 'ச்வேதாச்வதரோபநிஷத்து' விளக்கிற்று. 'யோப்ரஹ்மாணம்விததாதி பூர்வம் யோவை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை, தம் ஹ தேவமாத்மபுத்திப்ரகாஶம் முமுக்ஷுர் வை ஶரணமஹம் ப்ரபத்யே' என்றது அது. ப்ரபத்தி செய்து புருஷார்த்தம் பெறவேண்டுமென்றே ஸ்ருஷ்டிசெய்யுமவன் தன் திருவுள்ளத்தைக் கீதாசார்யனாயிருந்தும் தெரிவித்தான். அவ்வவதாரம் மறைந்தபோது அந்த விவேகமும் மறைதலுற்றது. கீதோபதேசத்திற்குத் தோன்றினபடி பொருள் கூறப் பலர் தோன்றினர். ஆகையால் தன் திருவுள்ளத்தையழியாதபடி காண்பிக்க அர்ச்சையாகத் தானே தோன்றி ஓர் உயர்ந்த விடத்திலே உலகெல்லாம் காணுமாறு நின்றருளினான். அதுவே 'கண்ணனடியிணையெமக்குக்காட்டும் வெற்பு; கடுவினையரிருவினையும் கடியும் வெற்பு'.

இவ்வளவு செய்தும் அர்ச்சையாய்ப் பேசாமலிருப்பதாலே அபிப்ராயத்தை முழுதுமறிய முடியாதபடியாயிற்று. வேத வைதிக சாஸ்திரங்களில் தேறினாலொழிய தர்ம மாகாதென்ற ஸித்தாந்தத்தை நன்கறிந்தார் எம்பெருமானின் இங்கிதமாத்ரத்தைக் கொண்டு இதை இசைய மாட்டிலர். சாஸ்திரங்களின் பொருளைப் பலர் பலபடி பேசிவந்தனர். இந்நிலையிலே ப்ரபன்னஜந ஸந்தாநகூடஸ்தர்களான ஆழ்வார்களும் ஆசார்யர்களுமவதரித்தனர். ஆனாலும் எம்பெருமான் நினைத்தான்; என்

னையே மறந்து என் குணங்களையே யொழித்து என்னை நிர்குணமாக்கி எனக்குப் பல அவத்யங்களையும் கல்பித்து எனது விபூதிகளையும் அழித்து நாளடைவிலே உலகம் நாராயணா என்னாதபடியும் செய்யும் கொள்கைகளைக் களைவது முதல் கார்யம். ப்ரபத்திவிஷயம் பிறகென்றவாறு, அதன் மேல் ஆதிசேஷன் போன்ற பல நித்யஸூரிகளைக்கொண்டு பிற மதங்களைப்போக்கி ஸர்வேச்வரனான நிலைமையிலே தன்னை நிறுத்திக்கொண்டான்.

பிறகுத்தனக்கு ப்ரதானலக்ஷ்யமானப்ரபத்தியையும் சாஸ்திரங்களைக்கொண்டு ஸ்தாபிக்கக் கருதினான். அதற்காக அவன் இசைந்த அவதாரம் சீரார் தூப்புல் திருவேங்கடமுடையானென்ற அவதாரமே. இவ்வவதார வரலாற்றைக் கேட்டிருப்பவர் இவரைத் திருவேங்கடமுடையானுடைய திருமாமணியின் அவதாரமாகக் கொள்வர். தேசிகன் எழுந்தருளியிருந்த காலத்திலேயே இந்த ப்ரஸித்தியிருந்ததென்பதை யவர்தாமே ஸங்கல்பஸூர்யோதயத்திலே, 'உத்ப்ரேக்ஷ்யதே புதஜனைருபபத்திபூர்ணா கண்டா ஹரேஸ்ஸமஜநிஷ்ட யதாத்மநேதி' என வெளியிட்டருளினார். ஒரு விதமான உத்ப்ரேக்ஷணம் மட்டுமிவர் வெளியிட்டார். இதற்கு ஸாதகங்களான யுக்திகள் பலவுளவென்று பண்டிதர்களான பெரியோர்கள் நினைத்திருக்கிறார்கள் என்ற இவர் 'நிர்த்தாரயதே' என்றாற்போலே ஒரு சொல்லை விட்டு உத்ப்ரேக்ஷ்யதே என்றதாலே, இவர்கள் இங்ஙனம் உத்ப்ரேக்ஷித்தாலும் தத்துவம் வேறென்று திருவுள்ளம்பற்றியாயிருக்கலாமென்பர் சில வாசார்யர்கள். எது தத்வமென்றால், இங்கு மூன்று பக்ஷங்கள் உள என்று, 'வேங்கடேசாவதாரோzயம் தத்கண்டாம்சோZதவா பவேத்; யதீந்த்ராம்சோZதவேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்களம்' என்ற நயினாராசார்யரின் ச்லோகத்திலிருந்து கூறுவர். திருவேங்கடமுடையான் தானே நேராக இவ்வாசார்யனாக அவதரித்தான் என்பதே உண்மை. ஆக 'வேங்கடேசாவதாரோzயம்' என்பதே தத்துவமென்று அவர்தாமே பிள்ளையந்தாதியில் வெளியிட்டருளினாரென முடிவு கூறுவர். அப்பாசுரமாவது:—

'அன்றிவ்வுலகினையாக்கி யரும்பொருள்நூல்
விரித்து
நின்று தன்னீள் புகழ் வேங்கடமாமலைமே
வியும் பின்
வென்றிப் புகழ்த்திருவேங்கடநாதனெனுங்
குருவாய்
நின்று நிகழ்ந்து மண்மேனின்ற நோய்கள்
தவிர்த்தனரே'

என்பதாம்.

இவ்வாறுஇவர் திருவேங்கடமுடையானுடைய அவதாரமென்பதை அவராவதரித்தநாளும், அவர் திருநாமமும், அவனது செயலை அவர் வெளியிட்டதுமென்றவை முதலான பல காரணங்களாலே யறுதியிட்டனர். இவ்வவதாரச் சிறப்பை யாராய்ந்தபோது நித்யஸூரிகளின் அவதாரங்களான மற்ற ஆசார்யர்களைக் காட்டிலும் இவருக்கே மேன்மை யதிகமென்பது சொல்லாமலே விளங்கும். இதற்குத் தக்கவாறு இங்கெல்லா மேன்மைகளும் ஒருமித்து நின்றன. கவிதார்க்கிகஸிம்ஹம், ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர், வேதாந்தாசார்யர் என்றாற்போலுள்ள பிருதங்களையும், அவைகளைப் பெற்ற வரலாறுகளையுமறிந்தவர்க்கு விரிவாகக் கூறுவதென்? பகவத்பாஷ்யகாரருடைய ஸித்தாந்தம் சிறிதளவும் சிதறாமல் எல்லா மதங்களுக்கும் மேலாக விளங்குகிறதென்பது உண்மையில் இவருடைய அரிய பெரிய க்ரந்தங்களினாலேயாம். உடையவர் ஸித்தாந்தத்திலிருப்பவரில் விசேஷ ஸம்ஸ்க்ருதப்பயிற்சி யில்லாதாரும் தாறுமாறும் தடுமாற்றமுமின்றி ஒழுங்காகவும் தெளிவாகவும் தத்துவஹிதபுருஷார்த்தங்களைத் தெரிந்துகொள்வது இவர் அருளிச்செய்த மணிப்ரவாள ரஹஸ்யக்ரந்தங்கள் வாயிலாகவே. காவ்யங்களையியற்றுவதற்கு முக்கிய நோக்கான விஷயத்திலே மாறுபாடின்றி ஸர்வரஸங்களையும் ஸந்தர்ப்பாநுகுணமாகச் சுவைத்துக் களிப்பதும் இவருடைய காவ்யங்களிலேயாமல்லது வேறிடத்திலில்லையென்பதும் இவர் கவிகளிலாழ்ந்து அந்தவிவேகத்திலிழிந்தார்க்கு அநுபவஸித்தமாம். இவர் வேதாந்தாசார்யரென்பது உபயவேதாந்தங்களிலும் நிகரற்ற ஆசார்யகம் வஹித்ததாலே என்பதைத்தமிழ் மறையினின்று இவர் இரத்தினங்களை நமக்குப்

பொறுக்கியளித்தது மட்டுமன்றி இவருடைய ப்ரபந்தங்களும் விளக்கும். தமிழர்களுக்கும் தெரியவரிய பல விருத்தங்களிலே பாட்டுக்களை யருளின இவரை எல்லா ஆழ்வார்களின் ஒருதிரளாகவே தெரிந்தவரநுஸந்திப்பர். ஆகையாலேயே இவர் அருளிச்செய்த செய்யுட்களையெல்லாம் தேசிகப்ரபந்தமென்று ஒன்றாக அமைத்து ஓதி வருகின்றனர்.

இதிலொரு விசேஷம் காண்மின். கவிகள் தங்கள் கருத்தை க்ரந்தங்களில் மறைத்து வெளியிடுவதுமுண்டு. கவிகளுக்குத் தெரியாமலே பல அரிய விஷயங்கள் அவர்கள் இயற்றிய நூல்களில் தெய்வச்செயலாகத் திகழ்வதுமுண்டு. வால்மீகியினுடைய ‘மாநிஷாத’ என்ற ச்லோகத்தின் பெருமை யாவராலும் அநுபவித்து மாளாதபடியாயிற்றே. தம் செய்யுட்களையெல்லாம் சேர்த்து ப்ரபந்தமாக்கி இதை யொருவகையில் உபயோகப்படுத்துவதையும், அப்போது அதன் உட்பிரிவுகள் இருக்கும் வகையையும் இவருடைய ஸ்ரீஸூக்தியே மறைமுகமாகத் தெரிவிக்கிறதென்றால், இந்தச் செய்யுட்களெல்லாம் ப்ரபந்தமாய்ப் பிற்காலத்திலே ஒருவிதமாக அநுஸந்திக்கப்படப் போகின்றன என்பதைத் தாம் முன்னமே தெரிந்து அதை ஸூசனம் செய்திருக்கிறார் இவரென்றால், அதுவே இவர் ஓர் அவதாரபுருஷரென்பதை நன்கு நிரூபிக்கும்.

‘உத்திதிகழு முறைமூன்றின் மும்மூன்றும்
சித்தமுணரத் தெரிவித்தார்– முத்திதரு
மூலமறையின்முடிசேர் முகில்வண்ணன்
சீலமறிவார் சிலர்’

என்ற ரஹஸ்யநவநீதத்திலுள்ள பாசுரத்தை ஆராய்மின்.

இதற்கு அங்கு இயையும் பொருளாவது– மூலங்களான வேதங்களின் முடிகளான வேதாந்தங்களிலே விளங்குபவனும் மோக்ஷமளிப்பவனுமான முகில்வண்ணனுடைய சீலமறிந்த ஆசார்யர்கள், விவரண, ஸ்ரீஸூக்திகளாலே விளங்காநிற்கும் மூன்று ரஹஸ்யங்களிலுள்ள மும்மூன்று வாக்கியங்களையும் நம் சித்தம் உணருமாறு தெரிவித்தனரென்பதாம்.

திவ்யப்ரபந்தங்களுக்கு அநத்யயனநாளிலே ப்ரபந்தமோதும் அவஸரத்திலே என்ன ஓதுவதென்று ஸ்ரீவைஷ்ணவர்கள் திரண்டுவந்து தெண்டனிட்டு நயினாராசார்யரை வண்ணாற்றங்கரையில் நீலமேகப்பெருமாள் ஸன்னிதியில் கேட்டபோது அவர் நீலமேகப்பெருமாளின் நியமனத்தையுமறிந்து ஆராய்ந்து தேசிகப்ரபந்தமென்று தேசிகனுடைய செய்யுட்களையெல்லா மொன்றுசேர்த்தமைத்து ஓதுவித்தனரென்பது குருபரம்பராப்ரபாவ க்ரந்தத்திலே சொல்லப்பெற்றதாம்.

தேசிகனுடைய தமிழ் க்ரந்தங்கள் மூன்று வகையாகப் பிரியும். வ்யாக்யானரூபமணிப்ரவாளம், ஸ்வதந்த்ரமணிப்ரவாளம், செய்யுட்ப்ரபந்தமென்றவை யவை. மந்திரங்கள் அல்லது ஸ்ரீஸூக்திகள் இவற்றின் வ்யாக்யானங்களான மணிப்ரவாளக்ரந்தங்களுக்கு ரஹஸ்யத்ரயஸாரம் நடுநாயகம். அதுவும் அதற்கு முன்னும் பின்னுமான ரஹஸ்யக்ரந்தங்களின் செய்யுட்களை மூன்றாகப் பிரித்து அம்ருதரஞ்ஜநீ, அதிகாரஸங்க்ரஹம், அம்ருதாஸ்வாதினி யென வழங்குவர். இவை முதல் உரையின் மூன்று பிரிவுகள். இரண்டாவது ஸ்வதந்த்ர மணிப்ரவாளம். அதில் மூன்று, பரமபத ஸோபானம், பரமதபங்கம், அத்திகிரிமான்மியமெனப்பிரிவுகள். மூன்றாவது செய்யுளாயிருப்பது. அது பேரருளாளன்விஷயம், தெய்வநாயகன்விஷயம், மற்ற விஷயமென மூன்றாகப் பிரியும். தாம் அவதரித்த இடம், தமக்கு ஜ்ஞானம் சிறப்பாகப் பிறந்த இடம் என்று அந்த இரு திவ்யதேசங்களிலே தனிப்பட்ட ஈடுபாடு. இப்படி உரை மூன்றிலும் மும்மூன்று வகைகள் சொல்லப்பெற்றன. இப்படிப்பட்ட தேசிகப்ரபந்தம் அநுஸந்திக்கப்படும்போது முன்னே நாலாயிரத்தனியன்களையும் பின்னே பிள்ளையந்தாதியையு மநுஸந்திக்கச் செய்ததால் இவை முன்னும் பின்னும் உத்தி திகழ்வனவாயின. மூலமறையின்முடி சேர்ந்த எம்பெருமான் அந்தத் தமிழ்மறைக்கு அநத்யயனம் விளைவித்ததாலே– அவற்றிற்கு விடுமுறை செய்ததாலே முத்திதரும் முகில் வண்ணனானன். முத்தியாவது:–விடுதல்–அத்யயனத்தை விடுதல். அந்தக் காலத்திலே அதற்குப் பதிலாக 24 திவ்யப்ரபந்தங்களுக்கு 24 க்ரந்தங்களின்று தேசிகப்ரபந்தம் எடுத்துக் கோக்கப்பட்டது.

இப்படித் தம் திருக்குமாரரைப் போன்ற சிலர் செய்யப்போவதையும் முன்னே கண்டு தம் பாசுரத்திலே ஸூசித்த அவதாரபுருஷரிவர். இவருடைய மேன்மையே மேன்மை,

ஸ்ரீ:

ஒரொன்று தானே (2)

ஸ்ரீ. உப. திண்டுக்கல் ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி,
அட்வோகேட், சென்னை.

भरतशिरसि लग्नां पादुके दूरतस्त्वां
स्वतनुमपि ववन्दे लक्ष्मणः शेषभूतः ।
किमिदमिह विचित्रं नित्ययुक्तः सिषेवे
दशरथतनयस्सन् रङ्गनाथः स्वमेव ॥

ஸ்ரீமத் பாதுகா ஸஹஸ்ரத்தின் 757-வது ச்லோகம் இது. 23-வதாகிய சேஷ பத்ததியில் 7-வது ச்லோகம். பெருமாள் பதினன்கு வருஷம் வனவாஸம் முடிந்தபிறகு புஷ்பகவிமானத்தில் அயோத்திக்கு எழுந்தருளுகிறார். பரதாழ்வான் அவரை எதிர்கொண்டழைக்கப் பாதுகைகளை சிரஸா வஹித்துக்கொண்டு வருகிறார். பரதாழ்வான் சிரஸில் விளங்கும் பாதுகைகளைப் புஷ்பகத்திலே இருக்கும் இளைய பெருமாள் (லக்ஷ்மணன்) தூரத்திலிருந்தே வணங்குகிறார். இளையபெருமாளும் பாதுகைகளும் ஆதிசேஷனுடைய ரூபாந்தரங்களல்லவா? சேஷபூதராகிய இளையபெருமாள் தம் திருமேனி என்று சொல்லக்கூடிய பாதுகைகளை வணங்கினார். ஆனால் இதில் என்ன ஆச்சர்யம்? நித்யயுக்தராகிய ரங்கநாதன் தசரத புத்திரனாகிய ராமனாக இருந்துகொண்டு தம்மைத் தாமே ஸேவித்துக் கொள்ளவில்லையா? என்பது திரண்ட பொருள்.

இந்த ச்லோகம் உண்மையில் ஒரு ரத்னாகரமே. அதன் சொற் சுவையிலும் பொருட் சுவையிலும் அவகாஹிக்க அவகாஹிக்க, அர்த்த விசேஷங்கள் வெகுவாகக் காணப்படுகின்றன. அடியேன் சிற்றறிவுக்கெட்டியசிலவற்றை இங்கே விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

ச்லோகத்தின்முன் பாதியில் சொல்லப்பட்ட இளையபெருமாளுடைய ‘தம் மேனியைத் தாமே வணங்குவது’ என்னும் அநுஷ்டானத்திற்குப் பிற்பாதியில் பெருமாளுடைய ‘தம்மைத் தாமே ஸேவித்துக் கொள்வது’ என்னும் அநுஷ்டானம் ப்ரமாணமாகக் காட்டப் படுகிறது. தன்னைத் தானே வணங்குவது என்பதை ஸாதாரணமாக ஒருவரும் செய்வதில்லை. மிகுந்த அபகர்ஷம் அல்லது மிகுந்த உத்கர்ஷம் ஏற்பட்டபோது, சிலர் தம்மைத் தாமே வணங்குவதையும், போற்றிக்கொள்வதையும் காண்கிறோம். ‘ஹ்யம் நமோஸ்து ஸ்தவயே நிரவத்யவாய’ என்கிற ஆளவந்தார் அநுஸந்தானமும், ‘ஊனில் வாழ் உயிரே! நல்லை போ’ என்கிற ஆழ்வாரருளிச் செயலும் முறையே இவற்றிற்கு ப்ரமாணங்கள். இங்கு ஸ்வாமி தேசிகன் ஒரு சேஷபூதனுடைய அநுஷ்டானம் சேஷியின் அநுஷ்டானத்தையே மூலமாகக்கொண்டது என்று காட்டியருளுகிறார். இந்த அர்த்தம் ‘ஶேஷபூத:’ என்று இளையபெருமாளைச் சொன்னதாலும் ‘ரங்கநாத:’ என்று பெருமாளைச் சொன்னதாலும் கிடைக்கிறது. ‘சேஷபூத:’ என்ற சொல்லுக்கு ‘ஆதிசேஷாவதாரம்’ என்னும்’ ‘சேஷவிருத்தியில் ஈடுபட்டவர்’ என்றும் இரண்டு பொருள் உண்டன்றோ?

ச்லோகத்தைப் பின்வருமாறு அன்வயித்துப் பொருள் கொண்டால் வெகு அழகான அர்த்தங்கள் வெளியாகின்றன.

‘ஶேஷபூத:- லக்ஷ்மண:- தஶரததநய: ஸந்- ஸ்வதநுமபி- வவந்தே’. ‘நித்யயுக்த: ரங்கநாத:- தஶரததநய: ஸந்- ஸ்வமேவ- ஸிஷேவே’ என்று அன்வயித்துப்பார்த்தால் ஸ்வாமி தேசிகன் திருவுள்ளத்தில் ஓடும் அநுபவங்களை ஒருவாறு உணரலாம். தசரத புத்திரனாக இருக்கும் தன்மை இளையபெருமாளுக்கும் பெருமாளுக்கும் ஸமானம். அவர்களுள் ஒருவர் சேஷன்; மற்றவர் சேஷி.

ஶேஷி அநுஷ்டித்துக்காட்டியதை யடிபொற்றியேசேஷன் அநுஷ்டாநம் விளங்குகிறது என்பது இச்லோகத்தின் கருத்து. ‘ஸத்வத்தை நிழல் போலவும் ஶேஷிபோம் வழியெல்லாம் அநுதாவனம் பண்ணுவது’ ஶேஷபூதன் இயல்பு என்று காட்டும் ஸ்வாமியின் பரம பத ஸோபானபங்க்திக்கு இது ஒரு உதாஹரணம் போதும்.

மேலும் லக்ஷ்மணன் பாதுகையை வணங்கினதற்குக் காரணம் அப்பாதுகை பரதாழ்வான் திருமுடியில் ஏறியிருந்தமை. பரம பாகவதோத்தமரான பரதாழ்வானது திருவடியே லக்ஷ்மணனுடைய வணக்கத்துக்குரியது என்றால், அவர் திருமுடியை யலங்கரிக்கும் பாதுகை வணங்கப் பெறுவது வியப்பாகுமோ? ‘ஹரதஶிரஸி ஶ்ருங்காரம்’ என்ற சொற்றொடர் இவ்வர்த்தத்தைக் காட்டுகிறது. இதுவரை ‘நிவாஸ ஶய்யாஸந’ என்கிற ஆளவந்தார் ச்லோகத்தின்படியே யதோசிதமாக ஶரீர பேதங்களை எடுத்துப் பெருமாளுக்குச் ஶேஷபூதமாக அமைந்திருந்த ஆதிஶேஷன் இன்று ஒரு பரம பாகவதனுடைய ஸம்பந்தம் பெற்றிருப்பதாலே ஏற்றம் பெற்று விளங்குகிறார். அந்தப் பெருமையில் ஈடுபட்டவராய் பெருமாளிடத்தில் அந்தரங்க வடிமை பூண்டு நிற்கும் லக்ஷ்மண வடிவத்தில் விளங்கும் அவ்வாதிஶேஷனே, பாகவதாபிமானம் பெற்ற தமது ரூபாந்தரமான பாதுகைக்கு ப்ரணாமம் செய்கிறார். பெருமாள் ஸம்பந்தம் பெறுவதைக் காட்டிலும் பெருமாளுடைய அடியிணைகளுக்கு மாறாத அன்பு பூண்ட பாகவதர்கள் ஸம்பந்தமே மேலானது என்ற ஶாஸ்த்ரார்த்தம் அநுஷ்டிதமாயிற்று.

ஶேஷபூத:, நித்யயுக்த:, லக்ஷ்மணன்சேஷபூதரென்றால் பெருமாளும் நித்யயுக்தர். ‘நித்ய யோகத்தை விரும்புவது’ என்று நித்யயுக்த ஶப்தத்திற்கு ஸ்ரீமத் கீதாபாஷ்யத்தில் பொருள் கூறப்பட்டுள்ளதன்றோ? ஶேஷன் கைங்கர்யத்தை விரும்பி நிற்பனென்றால் அச் ஶேஷத்வத்திற்கு ப்ரதி ஸம்பந்தியான ஶேஷி மாறாத சேர்த்தியை விரும்புகிறான் என்று ஸூசிப்பிக்கப் பெறுகிறது.

நித்யயுக்த:,– ரங்கநாத:– என்று சொல்லப் பட்டிருக்கிறபடியால் அப்பெருமாள் ஸ்வயம்பூதமாகவுண்டானவர், நித்யத்வத்தோடுகூடியவர் (என்றுமுள்ளவர்) என்பதாக த்வனி. நித்யயுக்த:, நித்யை: யுக்த: இத்யாதி ஹாவங்களெல்லாம் விவக்ஷிதம்.

‘ஸ்வதநும் வவந்தே’ என்று ஶேஷனதுகாரியத்தைப் பேசி, ‘ஸ்வமேவ ஸிஷேவே’ என்று ஶேஷி க்ருத்யத்தைப் பேசியதிலிருந்து அவர்களுக்குள் ஒரு வாசி காட்டப்பட்டிருக்கிறது. ஶேஷாவதாரமாகிய இளையபெருமாளுடைய தநு (ஶரீரம்) பாதுகை. சக்ரவர்த்தித் திருமகனும் ரங்கநாதனும் ஒருவரே. ஆத்மா ஶரீரத்தை வணங்கியது லக்ஷ்மண விஷயத்தில். ஆத்மா ஆத்மாவை ஸேவிப்பது பெருமாள் விஷயத்தில். ரங்கநாதன் அர்ச்சாவதாரப் பெருமாள். சக்ரவர்த்தித் திருமகன் விபவாவதாரப் பெருமாள். இவர்களிருவரும் ஒருவராகவே அநுபவிக்கப் பெறுகிறார்கள்.

ஆனால் அதில் ஒரு விசேஷாநுபவம் வெளியாகிறது. இளையபெருமாள் பாத சிரஸ்ஸில் விளங்கிய பாதுகையை அது தமது ஶரீரமாகவேயிருப்பினும் வணங்கினார் என்று பேசிய பிறகு அதற்குச் சேர சக்ரவர்த்தித் திருமகன் தாமாகவேயுள்ள ரங்கநாதனை ஸேவித்தாரென்றல்லவோ ச்லோகத்தின் பிற்பாதி அவதரித்திருக்கவேண்டும்! அப்படியருளிச் செய்யாமல் ரங்கநாதன் தசரதபுத்திரனாகயிருந்துகொண்டு தம்மைத்தாமே ஸேவித்துக்கொண்டாரென்று ஸாதிக்கப்பட்டிருக்கிறது. முற்பாதியில் வணங்கியவரை வாக்யத்திற்கு (கர்த்தா) எழுவாயாக்கின ஸ்வாமி, பிற்பாதியில் வணங்கப்பட்டவரை எழுவாயாக்கியிருப்பது கவனிக்கத் தக்கது. இது ஒரு அர்த்த விசேஷத்தைக் காட்டியருளுவதற்காகவே. ‘ஐக்ஷ்வாகதநயஸ்து ரங்கநாயக:’ என்றதால் ரங்கநாதன் தான் சக்ரவர்த்தித் திருமகனாக ஆனார் என்று ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டதிலிருந்து அர்ச்சாவதாரப்பெருமாளாகிய ரங்கநாதன் விபவாவதாரப் பெருமாளாகிய ராமாவதாரம் எடுத்தருளினாரென்று ஸ்வாமி அருளிச்செய்கிறார் என்பது விளங்குகிறது. அர்ச்சாவதாரப் பெருமையைப் பலவிடங்களில் பலவிதமாகப் பேசி மகிழும் தேசி

ஸ்ரீ:

ஸ்வாமி உகந்த ஸேவை

ஸ்ரீ. உப. புரிசை, நடாதூர், க்ருஷ்ணமாசாரிய ஸ்வாமி, சிரோமணி, திருவுள்ளூர்.

ஸேவை செய்தல் என்றால் பணிவிடை புரிதல் என்று பொருள். நம்மைவிட வயதிலோ, ஜ்ஞானத்திலோ, குணத்திலோ, பணத்திலோ, எல்லாவற்றிலுமோ உயர்ந்தவர்களுக்குச் செய்யும் நம்முடைய ஸேவையே கைங்கர்யமாகின்றது. நம்மைக் காட்டிலும் முன்கூறியவைகளில் சிறியோராயின் அவர்களுக்குச்செய்யும் ஸேவை உபகாரமாகின்றது. இக்காலத்தில் எங்குபார்த்தாலும் லோகஸேவா உணர்ச்சித்தான். பேச்சளவில் மேலுக்கு மிக அழகாக இருக்கின்றது. உள்ளுக்குள் புகுந்து பார்த்தால் ஸேவ்ய ஸேவகர்களுக்குள் ஒரே குழப்பம். நாளாக ஆகஅவை முற்றி தெருவில் வந்துவிடுகின்றன. இக்காலத்தில் ஸேவை செய்பவர்கள் பணத்திற்காகவன்றோ செய்கிறார்கள். அதில் ந்யூநாதிரேகம் ஏற்பட்டால் ஸேவ்யர்கள் எவ்வளவுபெரியோர்களாகிலுமவர்களிடத்தில் பணிவதில்லை. ஆதலால்தான் காலத்தின் தலையில் பழியைச் சுமத்தி நாம் திண்டாடும்படி நேரிடுகின்றது. அர்த்தாபேக்ஷை இல்லாமல் ஸேவை செய்பவர்களை நாமே கொண்டாடுகிறோம். எதற்காக? செய்த நன்றியை மறவாமைக்காக. நாம் மட்டும் நினைப்பதில்லை. நம்முடன் கூட்டமாகக் கூடியிருப்பவர்களும் அவர்களைப் பற்றி அறிய வகை செய்கிறோம். அதனால் பெருமகிழ்ச்சி யடைகிறோம். ஸ்ரீராம பட்டாபிஷேகத்தின் போது ஸீதாபிராட்டி முக்தாஹாரத்தை கையில் வைத்துக்கொண்டு,

---

கோத்தமனது திருவுள்ளத்தை யொட்டி அர்ச்சையிலூற்றமும் ஆதரமும் மிகுந்து இப்படியநுஸந்தானம்ஏற்பட்டிருக்கிறதென்றேகொள்ளவேண்டும். இல்லாவிடில் ச்லோக முற்பாதியிலுள்ள வாக்ய அமைப்புக்குச்சேர, பிற்பாதியிலும் சக்ரவர்த்தித் திருமகன் தாமேயான ரங்கநாதனை ஸேவிக்கவில்லையா? என்று வாக்யம் அமைக்கப்பட்டிருக்கும். ரங்கநாதன் ராமாவதாரம் எடுத்தருளினான் என்று சொல்லாமற் சொல்லிய அழகு நோக்கற்பாலது.

இது ஒரு அவதார ரஹஸ்யம். இது நம் தேசிகர் பெருமானுக்கு மட்டுமே புலனாகக் கூடும். ஏனெனில் அவரே ஒரு அர்ச்சாவதாரத்தின் அவதார விசேஷமாயிற்றே! 'வேங்கடேசாவதார:' என்று கொண்டாடப்படும் பெருமையாயிற்றே தேசிகனது. திருவேங்கடத்தண்ணலே தூப்புல் திருவேங்கடமுடையான் வடிவில் தோன்றி மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தருளினாராதலால், திருவரங்கத் தெந்தையேதான் இராமபிரானாகத் தோன்றி உலகில் தர்மஸம்ஸ்தாபனம்செய்தான் என்று காட்டிக் கொடுக்கும் வல்லமை அவருக்கு ஏற்பட்டது. 'ஸ்வமேவ' என்ற பதமும் இவ்வர்த்த விசேஷத்தைவலியுறுத்தும். அப்பதம் மட்டுமிருப்பின் ரங்கநாதனும் தசரததநயனும் ஒன்று என்றமட்டோடு நின்று விடும். 'ரங்கநாத: தசரத தநயஸ்ஸந்' என்று வ்யக்தமாகக் கூறப்பட்டதால் ரங்கநாதனே ராமபிரானாகவானான் —பரவாஸுதேவனன்று, க்ஷீராப்தி நாதனுமன்று என்று காட்டப்பெறுகிறது.

திவ்ய மங்கள விக்ரஹத்திலூற்றத்தாலே தம்மை அவ்விஷயத்தில் தேஹாத்மவாதியாகச் சொல்லிக் கொள்ளும் திருமங்கை யாழ்வாரது உரை குடிகொண்டகருத்துடையோராம் தேசிகர் பெருமானது அருளிச் செயல் வேறு எப்படியிருக்கும்!

பர்த்தாவையும், வானரர்களையும் திரும்பத்திரும்பப் பார்க்கிறாள். இங்கிதஜ்ஞனான கோஸலதேசத்தரசன் 'प्रदेहि सुभगे हारं यस्य तुष्टासि भामिनि' [நீ யாரால் ஸந்தோஷத்தை யடைந்தாயோ அவனுக்கு இந்த ஹாரத்தைக்கொடு.] என்றான். உடனே, வீர்யம், விநயம், ஸாமர்த்யம், நீதி முதலியவைகள் ஒருங்கே நித்யவாஸம் பண்ணும் ஹநுமாருக்கு முக்தாஹாரத்தைக்கொடுத்தாள் என்றுள்ளது ஸ்ரீமத்ராமாயணத்தில். ஸ்வாமி திருவுள்ள முகக்கும்படி அநந்ய ப்ரயோஜனமாய் செய்த ஸேவையின் பலமன்றோவிது!

அநந்ய ப்ரயோஜனமாய்ச் செய்யும் ஸேவையும் சேஷி உகந்ததாகவே இருக்கவேணும். தான் ஒருவிதம் மனோரதித்துக்கொண்டு அவ்விதம் செய்தால்தான் ஸ்வாமிக்கு ஸௌகர்யமுண்டு, அப்பொழுதுதான் நாம் நம் கடமையைச் செய்தவனாவோம் என்று எண்ணி ஸ்வாமிக்கு அஸம்மதமான விஷயத்தில் நிர்ப்பந்தித்து ஸேவை செய்தல் ஒருவிதம். ஸ்வாமி நியமனப்படி செய்வதுடன் தன்னிஷ்டத்தையும் பூர்த்தி செய்து கொள்வது மற்றொரு விதம். தன் அபிப்ராயம் கலவாமல் சேஷியின் திருவுள்ளத்தை முழுக்கவும் பின்பற்றி நடப்பது மூன்றாம் விதம். மேற்கூறிய மூன்று விதமான கைங்கர்யத்தை ஸர்வ சேஷியான ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுக்கு மூன்று பேர்கள் செய்தார்கள். மூவரில் ஸ்ரீராமன் திருவடியை ஆச்ரயித்த பெண் ஒருத்தி. அப்பெண்மணியே ஸ்வாமி உகந்தகைங்கர்யத்தைச் செய்தாள். அப் பெண்ணிடம் இரண்டு ஆண்களும் தோற்றார்கள். பெண் ஒருவளே ஜயித்தாள். அக் கைங்கர்யத்தையே நம் ஸ்வாமி தேசிகன் உகந்தார். எவ்விதம்? பின்வருமாறு:-

பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய கைங்கர்யங்கள் வேகமாக நடந்துவருகின்றன. இதைக் கண்டு மந்தரை மிக வேகமாக கைகேயியினிடம் சென்றாள். அவளிடம் மிக்க பரிவு காட்டி அவள் மனதை ஸுலபமாகக்கலைத்துவிட்டாள். அரசன் கட்டளைப்படி ராமன் அங்கு வந்து சேர்ந்தான். அசைவற்று இருந்தான் அரசன். என்றும் கண்டிராத இத்தன்மையைக் கண்டு கலங்கினான் கருணாகுத்தன். கைகேயியின் முகத்தாலே பதினான்கு வருஷம் வனவாஸம் பண்ண ப்ரதிஜ்ஞை செய்துகொண்டான். அவவிடத்தினின்று சென்று தாயாரிடம் இவ்விஷயத்தைச்சொன்னான். மாதா கௌஸல்யை அழுதாள், புரண்டாள், என் செய்வது? ராமனும் அநேக தர்மங்களைச் சொல்லி ஸமாதானம்செய்கிறான். பிறகு கௌஸல்யை 'न शक्यते वारयितं गच्छेदानीं रघूत्तम' என்று அநுமதி கொடுத்து, 'शीघ्रमेव निवर्तस्व' என்றும் சொல்லி 'धर्मस्त्वामभिरक्षतु' என்றெல்லாம் மங்களாசாஸநம் செய்து அனுப்புகிறாள். பிறகு ஸீதை இருப்பிடம் சென்றார். அவளும்கூட வனவாஸம் செய்யவேணுமென்று நிர்ப்பந்தமாக ப்ரார்த்திக்கிறாள். ஸ்ரீராமனும்,

'நல்லுணவருந்தி நல்லணி பொருந்தி
நல்லுடை தரித்து நலமுடனிருந்த நீ
புல்லரிசி தின்று புன்னீரருந்தி
தொல்லைப் படுவாயோ துணிந்து வருவாயோ'

என்கிறபடி முன்பிருந்த ஸௌகர்யங்களையும் வனத்திலுள்ள கஷ்டங்களையும் பகுவாக எடுத்துக்கூறினார். 'உம்முடையகையால் கொடுக்கும் இலையோ, பழமோ, காயோ எதுவாகிலும் கொஞ்சமாகவோ, பஹுவாகவோ எப்படி கிடைத்தாலும் அதை நான் அம்ருத ரஸமாகவே எண்ணி ஸந்தோஷிப்பேன்' என்று சொல்லி கண்ணும் கண்ணீருமாக ஸீதை மறுபடியும் ப்ரார்த்தித்தாள். பெருமாளும் அவளை ஸமாதானம் செய்து 'अनुगच्छस्व मां भीरु सहधर्मचरी भव' என்று அநுஜ்ஞை பண்ணுகிறார்.

இவைகள் யாவற்றையும் கூடயிருந்து கேட்டிருந்த லக்ஷ்மணன் துக்கம் தாங்கமாட்டாமல் ராமனின் திருவடிகளில் விழுந்தான். இரண்டு பாதங்களையும் பிடித்துக்கொண்டான். ஸீதையையும், ராமனையும் பார்த்து 'நீங்கள் காட்டிற்குப் போவதாக நிச்சயித்துவிட்டால் தாஸனும் தனுஷ்பாணியாக உங்களுக்கு முன்செல்கிறேன். தேவரீரில்லாமல் ஸ்வர்க்கம் முதலிய லோகங்களும் யான் வேண்டேன்' என்று சொல்லி தன்னை காட்டிற்கு கூடவர அநுமதி தந்தருளுமாறு ப்ரார்த்தித்தார். 'रामेण बहुभिः सान्त्वैर्निषिद्धः पुनरब्रवीत्' பஹுப்ரகாரமாக ராம

ணல் நிஷேதிக்கப்பட்டும் மறுபடியும் வற்புத்தினன் இளையவன். கைகூப்பித்தலை வணங்கி நிற்கும் லக்ஷ்மணனைப் பார்த்து:—'லக்ஷ்மண! நாங்களிருவரும் காட்டுக்குப் போகின்றோம். நீயும் எங்களுடன் வந்துவிட்டால் கௌஸல்யையையும், ஸுமித்ரையையும்யார்ரக்ஷிப்பார்கள். அரசன் ரக்ஷிக்கமாட்டான். கைகேயீ ராஜ்யத்தை யடைந்ததும் துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சக்களத்திமார்களுக்கு ஒருநாளும் நல்லது செய்யாள். பரதனும் இவர்களைப்பற்றி நினைக்கவே மாட்டான். ஆகையால் இங்கிருந்து இவர்களை ரக்ஷித்துவா, நான்சொன்னபடிசெய். இதனுல் என்னிடத்தில் உன்னுடைய பக்தி நன்ருக காட்டப்பட்டதாகிறது' என்று மொழிந்தான். 'வீர! உன்னை உத்தேசித்து கௌஸல்யா தேவியாரை பரதன் நன்ருக பூஜித்து வருவான். கர்வத்தினுல் கெட்ட எண்ணம்கொண்டு அவன் ஸரிவர நடக்காவிடில் அவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் நான் நாசம் செய்கிறேன். என் தாயார் ஸுமித்ரா தேவியார் மிக்க பரிவுடன் பார்த்து வருவாள் ஆகையால் 'कुरुष्व मामनुचरं वैधर्म्यं नेह विद्यते' மறுமொழியின்றி கூட வரும்படி நியமிக்க வேணும். காட்டில் 'अहं सर्वं करिष्यामि जाग्रतः स्वपतश्च ते' தூங்கும் பொழுதும் விழித்திருக்கும்பொழுதுமுமக்குவேண்டியபணிவிடைகளை யான் செய்கின்றேன் என்று மறுபடியும் லக்ஷ்மணன் ப்ரார்த்தித்தார். பிறகு ராமன் 'व्रजापृच्छस्व सौमित्रे सर्वमेव सुहृज्जनं' என்று கூட வருவதற்கு நியமன மளித்தார். இவ்விதம் இளையாழ்வான் தன்னிஷ்டப்படி நிர்பந்தித்து கைங்கர்யத்திற்கு நியமனம் பெற்ருர்.

பரதாழ்வான் ஸ்ரீராமபிரானுக்கே முடி சூட்டவேணுமென்று நிச்சயித்து சித்ரகூட ஸமீபம் வந்து பரத்வாஜ மஹரிஷி சொன்ன அடையாளங்களைக் கண்டு, நான் சித்ர கூடத்தை அடைந்து விட்டதாகவே எண்ணுகிறேன் 'मन्ये प्राप्तास्म तं देशं भरद्वाजो यमब्रवीत्' என்று எண்ணினுர். அத் தேசத்தை அடைந்தார். பர்ணசாலையில் தர்ப்பாஸனத்தில் மஹர்ஷிகளைப்போல் வீற்றிருக்கும் ப்ராதாவைப்பார்த்தார்; கதரி அழுதார்; திருவடிகளில் விழுந்தார். பிறகு ராமனுல் ஸமாதானம் செய்யப்பட்டு ஆச்வாஸமடைந்தார். பரதனுல் திவம் கதரான பிதாவின் வ்ருத்தாந்தத்தை யறிந்து பரிதபித்து பித்ரு க்ரியைகளை முடித்தார். பிறகு 'அப்பா பரதா! இக் காட்டிற்கு வந்த காரணம் என்?' என்று வினவினுர். பரதன் சொன்னுர்:—என்னுடைய பாபத்தால் நீங்கள் காட்டிற்கு வரும்படி நேர்ந்தது. அரசனும் இறந்தார். இனி அரசாளுவதற்கு ஒருவருமில்லை. மூத்தவர் நீர் இருக்க யான் அரசாள மாட்டேன். நம் வம்சத்தில் இதுவரை இம்மாதிரி நடந்ததில்லை. செய்யாதன செய்யேன். ஆகையால் தேவரீர் திரும்பி படைவீட்டிற்கெழுந்தருளி முடி சூட்டிக் கொள்ள வேணும். இதற்காகவே வந்தனன். மந்திரிமார்களும், மாதாக்களும் நகர ஜனங்களும் இதையே ப்ரார்த்திக்கிருர்கள்' என்று.

ஸ்ரீராமன்:—பித்ருவாக்ய பரிபாலனம்தான் மிக முக்யம். அதை நான் தட்டமாட்டேன்.

பரதன்—பித்ருவாக்யத்தை அவச்யம்பரிபாலனம்பண்ணவேண்டுமாகில் 'अहमेव निवत्स्यामि चतुर्दश समा वने' [நானே வஸிக்கிறேன் காட்டில் பதினுன்கு வருஷங்கள்.]

ஸ்ரீ ராமன்—என்னையே காட்டிற்குபோகும்படி வரம்கேட்டதால் நானே சென்று அரசனை ஸத்ய ஸந்தனுக்குகிறேன், நீ சென்று அரசாளு என்று ஸ்ரீ ராமன் சொன்னதும் 'अधिरोहार्य पादाभ्यां पादुके हेमभूषिते । एते हि सर्वलोकस्य योगक्षेमं विधास्यतः' என்று பரதன் ப்ரார்த்தித்தார். மேலும் நான் படைவீட்டிற்குச் சென்று அரசாளமாட்டேன். பட்டணத்திற்கு வெளியில் ஜடாவல்கலதாரியாய் காய், கிழங்கு, பழம் முதலியவைகளைப் புஜித்துக்கொண்டு பாதுகைகளிடத்தில் ராஜ்யத்தை ஸமர்ப்பித்து பாதுகா நியமனம் பெற்று கார்யங்களை நடத்திவருவேன் என்ருர்.

'सोऽधिरुह्य नरव्याघ्रः पादुके व्यवमुच्य च ।
प्रायच्छत्सुमहातेजा भरताय महात्मने ॥' உடனே பாதுகைகளின்மேல்நின்று அவைகளைக்கழட்டி பரதனின் பொருட்டு கொடுத்தார். பரதன் ராஜ்யத்திற்குத் திரும்பிச்சென்ருலும் அரசாளமறுத்தான். பாதுகையோ திரும்பிப்போ என்ருல் போனுள். அரசாளு என்ருல் அரசாண்டாள். ஆகையால் லக்ஷ்மண பரதர்களை விடபாதுகையேமேன்மையாகவிளங்குகிருள்.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் உத்ஸவம்.

வில்லூர்.

இவ்வூரில் நாளது புரட்டாசி மீ 17உ ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் வார்ஷிக திருநக்ஷத்திரம் ஆஸ்திகர்களின் பேருதவியால் வெகு விமரிசையாக நடந்தேறியது. புஷ்கரணியிலிருந்து சத்ரசாமர வாத்யகோஷத்துடன் வேதபாராயணம் செய்துகொண்டு அலங்க்ருதமான குடங்களில் தீர்த்தம் கொண்டு வரப்பட்டு இவ்வூரில் கோயில்கொண்டுள்ள ருக்மிணீஸத்யபாமாஸமேத ஸ்ரீ ராஜகோபாலக்ருஷ்ணஸ்வாமிக்கும், ஆழ்வாராசார்யர்களுடன் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதிபதிக்கும் பெரிய திருமஞ்சனம் நடந்தது. ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனுக்கும் உத்ஸவம் உபக்ரமித்து நடந்துவந்ததால்ஸாயங்காலம் ஸ்ரீ தேசிகனுக்கும் ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கும் சத்ர சாமர வாத்யவிருதுகளுடன் இயல்கோஷ்டிவேத பாராயணங்களோடும் வீதி உத்ஸவம் நடந்தது. ஆஸ்திகர்களனைவரும் இதாநீம் ஸ்ரீ அழகியசிங்கர் (43-வது பட்டம்) இவ்வூருக்கெழுந்தருளியதாலன்றோ ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் வீதி உத்ஸவத்தை நடத்தி ஸேவிக்கும்படியான பாக்யம் கிடைக்கப்பெற்றோமென்று சொல்லி ஆநந்தமெய்தினர். இவ்வூரில் வெகு நாட்களாக மழையில்லாதிருந்து அன்று பலத்த மழை பெய்தது. இதனால் அனைவரும் மிக மகிழ்ச்சியுடன்ஸ்ரீஆதிவண்சடகோபஸ்ரீவீரராகவசடகோப யதீந்த்ர மஹாதேசிகர்களுடைய அநுக்ரஹவிசேஷமென்று போற்றிப் புகழ்ந்தனர். இம்மாதிரி ஒவ்வொரு உத்ஸவமும் நன்கு நடைபெற ஸ்ரீ அழகியசிங்கர் அநுக்ரஹம் உண்டாகவேணுமாய் மாலோலனை ப்ரார்த்திக்கிறேன்.

V. S. வீரராகவன்.

ஸ்ரீரங்கம்.

ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் புரட்டாசிமீ 11உ உபயவேதக்ரந்தபாராயணாதிகளுடன் உபக்ரமிக்கப்பட்டு வழக்கப்படி பத்து தினங்கள் வெகு விமரிசையாக நடந்தன. 3-10-54ல் ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் நான்கு உள் வீதிகளிலும் நான்கு சித்திரவீதிகளிலும் புறப்பாடாகி, வடக்குச் சித்திரவீதி ஸ்ரீ தேசிகன் ஸந்நிதிக்கெழுந்தருளி மங்களாசாஸநமான பின்பு ஸ்ரீ தசாவதாரன் ஸந்நிதிக்கு எழுந்தருளி, அங்கு லக்ஷ்மீநாராயணன் தசாவதாரமூர்த்திகள், திருமங்கைமன்னன், தேசிகன் முதலானோரை மங்களாசாஸனம் செய்தவுடன் கோஷ்டி நடந்தது. உடனே அங்கிருந்து ஸ்ரீ மடத்துக்கு எழுந்தருளி சாத்துமுறை கோஷ்டி நன்றாக நடந்தது. மறுநாள் டோலோத்ஸவமும் நடந்தது. ப்ரதிதினம் ஸ்ரீ. உப. அஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான், புத்தங்கோட்டகம் ஸ்வாமி முதலிய மஹான்களின் உபந்யாஸங்களும். டோலோத்ஸவத்தில் ஸ்ரீரங்கம், ஸ்ரீ. ராஜகோபாலன் B. A. பார்ட்டியின் பாட்டுக்கச்சேரியும் நடந்து உத்ஸவம் இனிது முடிந்தது.

அ. நரஸிம்மஐயங்கார், கௌரவ ஏஜண்ட்.

என்பதையே ஸ்வாமி பாதுகா ஸஹஸ்ரத்தில் பின் வருமாறு ஸாதிக்கிறார்:—

भ्रातुर्नियोगेऽप्यनिवर्तमानं राज्याभिषेकं च परित्यजन्तम् ।
रामानुजौ तौ ननु पारतन्त्र्यात् उभावुभाभ्यां भवती जिगाय ॥

[நீ காட்டிற்கு வரவேண்டாமென்று பெருமாள் நியமிக்க, அவச்யம் வரவேண்டுமென்று நிர்ப்பந்தித்த இளைய பெருமாளையும், அரசாள மறுத்த பரதாழ்வானையும் காட்டில், பெருமாள் நியமனப்படி அவ்விரண்டையும் செய்த நீ அவர்களிலும் மேலான மஹிமை பெற்றாய்] என்று.

இதனால் நாம் பெரியோர்களுக்குச் செய்யும் கைங்கர்யங்களில் விருப்பு வெறுப்பின்றி அசேதன ப்ராயர்களாய் ஸ்வாமி (ஆசார்ய) நியமனப்படியே செய்யவேண்டுமென்று தேருகிறது. ஸ்வாமி உகந்த ஸேவை (கைங்கர்யம்) அதுவே யாகும்.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

13-9-54 ராத்ரி பரவை கொண்ட மாரித் தோப்பை விட்டுப் புறப்பட்டு 6 மைலில் உள்ள மதுரை தல்லாகுளத்திற்கு எழுந்தருளினர். மதுரை ரயில்வே ஸ்டேஷனுக்கருகாமையில் அவ்வூர் வாஸிகள் பூர்ணகும்பம், வாத்யகோஷங்களுடன் எதிர்கொண்டு வரவேற்று சில முக்ய வீதிகளின் வழியாக எழுந்தருளப்பண்ணி தல்லாகுளத்திலுள்ள மண்டபத்தில் எழுந்தருளப் பண்ணினர்கள். 14-9-54ல் ஸ்ரீமதி, க்ருஷ்ணு அம்புஜம்மாள் வெள்ளிமண்டபத்தில் உள்ள எல்லா மூர்த்திகளுக்கும் விசேஷ திருமஞ்சனம் பண்ணிவைத்து ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவமும் பண்ணிவைத்து விசேஷமாக ஆராதித்தாள். அன்று காலே உபநிஷத் பாஷ்ய காலக்ஷேபம் ஆரம்பிக்கப் பட்டது. 15-9-54ல் முன்பு ஆராதித்த கமிட்டியாரே ஆராதித்தார்கள். அன்று ராத்ரி 11 மணிக்குப் புறப்பட்டு 12 மைலிலுள்ள திருப்புவனம் எழுந்தருளினர். மதுரை வாஸிகளும் துவரிமான் வாஸிகளும் வெகு பக்திச்ரத்தையுடன் அநுயாத்ரையாக வந்தார்கள். அங்கு ராமநாதபுரம் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், ஸ்ரீ சக்ரவர்த்தியாசாரியர் தகுந்த ஏற்பாடு பண்ணியிருந்தார். 16-9-54 அங்கிருந்து 11 மைலிலுள்ள முத்தனேந்தலுக்கு எழுந்தருளினர். அங்கு மானுமதுரையிலிருந்து வக்கில் ஸ்ரீ சேஷாத்ரி அய்யங்கார் முதலிய ப்ரமுகர்கள் தங்கள் ஊருக்கு எழுந்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்தனர். 17-9-54 ராத்ரி 9 மணிக்குக் கிளம்பி 7 மைல் தூரத்திலுள்ள மானுமதுரையில் வைகை ஸமீபமுள்ள பங்களாவிற்கு எழுந்தருளினர். அவ்வூர் ப்ரமுகர்கள் திருமஞ்சநம் பண்ணிவைத்து விசேஷமாக ஆராதித்தார்கள். 18-9-54 இரவு 10 மணிக்குக் கிளம்பி 8 மைலிலுள்ள பார்த்திபனூருக்கு எழுந்தருளினர். அங்கிருந்து 19-9-54 ராத்ரி 9மணிக்குப் புறப்பட்டு 10 மைலுள்ள பரமக்குடி கோபால அய்யங்கார் க்ருஹத்திற்கு எழுந்தருளியாயிற்று. அவ்வூர் வக்கீல்கள் விசேஷமாக ஆராதித்தார்கள். அங்கிருந்து 14 மைல் உள்ள சத்திரக்குடிக்கு 20-9-54 ராத்ரி 1 மணிக்கு எழுந்தருளியாயிற்று. 21-9-54 காலே அபிகமனுராதனம் நடந்ததும் ராமநாதபுரத்திலிருந்து அவ்வூர் வாஸிகள் ஸமஸ்தான மரியாதையை உத்தேசித்து மத்தியான்ஹமே எழுந்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்ததின் பேரில் பகல் 4 மணிக்குப் புறப்பட்டு 7 மைலிலுள்ள ராமநாதபுரம் ஸமஸ்தானத்தைச் சேர்ந்த பார்க்கிற்கு அருகாமையில் எழுந்தருளினர். அங்கு அஸிஸ்டெண்ட் திவான் ராகவேந்த்ரராவ் முதலிய ப்ரமுகர்கள் யானை, சத்ரசாமரம் முதலிய பிருதுகளுடன் பூர்ணகும்பத்துடன் வரவேற்று பெரியவீதிகளின் வழியாக ஊர்வலமாக எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்து ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் தர்மத்துக்கு விட்ட பங்களாவில் எழுந்தருளப்பண்ணி 22-9-54 ல் விசேஷமாக ஆராதித்தார்கள். ராஜாவினுடைய தம்பியும் ப்ரதான திவானுன பாலாஜிராவும் ஸ்ரீ அழகியசிங்கரை தண்டம் ஸமர்ப்பித்தார்கள். ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவம் பண்ணிவைத்தார்கள். திவான் முதலியவர்களின் ப்ரார்த்தனையின் பேரில் ஸதாசாரத்தைப்பற்றி உபந்யஸித்தாயிற்று. பிறகு அங்கிருந்து இரவு 9 மணிக்குக் கிளப்பி 9 மைலில் உள்ள திருப்புல்லாணி ஸேதுக்கரைக்கு எழுந்தருளியாயிற்று. சென்னையிலிருந்தும் மதுரையிலிருந்தும் இன்னும் அநேக ஊர்களிலிருந்தும் திரள் திரளாக ஸ்ரீ அழகியசிங்கருடன்

ஸமுத்ரஸ்நாநம் பண்ணுவதற்கு வந்திருந்தார்கள். 23-9-54 அன்று பெரியபெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் பண்ணியாயிற்று. அபிகமனாராதனம் நடந்ததும் அநேக பேர்களுக்கு ஸமாச்ரயணமும் ஶரணாகதியும் நடந்தன. பிறகு எல்லா சிஷ்யர்களுடனும் ஸமுத்திரக் கரைக்கு எழுந்தருளியாயிற்று. அர்த்தோதயம் மஹோதயம்போல் ஆச்சர்யமாயிருந்தது. நீராட்டம் ஆனதும் ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. ஸாயங்கால நீராட்டத்தையும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸமுத்திரத்தில் செய்தருளியாயிற்று. ராத்ரி ஆராதனம் முடிந்ததும் 3 மைல் உள்ள திருப்புல்லாணிக்கு எழுந்தருளியாயிற்று. ஊருக்கு ஸமீபம் எழுந்தருளும் போது கோயில் நிர்வாஹகர் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியர், கோயில் சத்ரசாமராதி ஸகலமர்யாதைகளுடன் வழக்கம்போல் எதிர்கொண்டு வரவேற்றார். கோயிலுக்கு எழுந்தருளும் போது பலிபீடத்தின் அருகில் ஸ்ரீஶடாரியை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து மரியாதை பண்ணிவைத்தார். பிறகு ஆதிஜகந்நாதன் ஸந்நிதி, பத்மாஸனித்தாயார், ஆண்டாள், தர்ப்பஶயனராமன், பட்டாபிராமன் ஸந்நிதிகள் எல்லாவற்றிலும் வழக்கம்போல் மங்களாஶாஸனம் பண்ணி, மரியாதைகளைப்பெற்றுக்கொண்டு அவ்வூர் அஹோபிலமடத்திற்கு எழுந்தருளினர். 24-9-54 ஸ்ரீ ராஜகோபாலாசாரியர் ஆராதித்தார். 25-9-54 ஸ்ரீ ஸந்தானமய்யங்காரும் ஸ்ரீ சக்ரவர்த்தியாசாரியரும் (மாம்பலம்) ஆராதித்தார்கள். அமாவாஸையன்று காலை அபிகமநாராதனம் ஆனதும் சிஷ்யர்களின் ப்ரார்த்தனையின் பேரில் முன்மாதிரி ஸமுத்திரத்திற்கெழுந்தருளி நீராட்டத்தை முடித்துக்கொண்டு அஹோபிலமடத்திற்கு எழுந்தருளியாயிற்று. அன்று தேவக்கோட்டை பொன்னம்மாள் ஆராதித்தாள். அன்று ராத்ரி 9 மணிக்குப் புறப்பட்டு 16 மைலிலுள்ள நவபாஷாணம் என்கிற தேவிப்பட்டிணத்திற்கெழுந்தருளியாயிற்று. அன்று புச்ச அமாவாஸையாகையால் அபிகமநாராதனமானதும் ஸமுத்திரத்தில் நீராட்டம் செய்தருளியாயிற்று. அங்கிருந்து 27-9-54 இரவு 10 மணிக்குப் புறப்பட்டு 15 மைலிலுள்ள ராஜசிங்கமங்களம் பங்களாவிற்கு எழுந்தருளியாயிற்று. 28-9-54 இரவு அங்கிருந்து புறப்பட்டு 11 மைலிலுள்ள திருவாடானைக்கு எழுந்தருளினர். 29-9-54 அன்று தேவக்கோட்டையிலிருந்து எல்லா ப்ரமுகர்களும் வந்து தங்கள் ஊருக்கு எழுந்தருளவேண்டும் என்று ப்ரார்த்தித்தார்கள். அன்றைய தினம் ஸ்ரீமதாதிவண்ஶடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் திருநக்ஷத்திரத்தை உத்தேசித்து க்ரந்தசதுஷ்டயபுராணபாராயணங்களுடன் வேதப்ரபந்த பாராயணங்கள் உபக்ரமிக்கப்பட்டன. அன்றிரவு 10 மணிக்குப் புறப்பட்டு 14 மைலுள்ள தேவக்கோட்டைக்கு எழுந்தருளினர். அவ்வூர் வாஸிகள் அனைவரும் மிகவும் பக்திஶ்ரத்தையுடன் ஸ்ரீ மாலோலனுக்கு ஸ்வாதித்திருமஞ்சனமும், ஸ்ரீ கண்ணபிரானுக்கு 4 நாள் டோலோத்ஸவமும் பண்ணிவைத்து, 6 நாள் விசேஷமாக ஆராதித்தார்கள். இந்த ஆராதனத்தில் செட்டியார்களே அதிகமாகக் கலந்துகொண்டார்கள். 3-10-54ல் ஸ்ரீமதாதிவண்ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்திரம் சாற்றுமுறையுடன் விசேஷமாக நடந்தது. அன்று ஊரார் திருமஞ்சனம் பண்ணிவைத்து விசேஷமாக ஆராதித்தனர். மதுரையிலிருந்தும் இன்னும் அநேக நகரங்களிலிருந்தும் பலர் வந்திருந்தனர். பாராயணம் பண்ணிய ஸ்வாமிகளுக்கு யதோசிதம் ஸம்பாவனை பண்ணப்பட்டது. இவ்வூருக்கு ஸ்ரீ மாலோலன் எழுந்தருளி 30 வருஷங்களுக்கு மேலானபடியால் நூற்றுக்கணக்கான பேர்களுக்கு ஸமாஶ்ரயணமும் ஶரணாகதியும் நடந்தது. திருக்கோட்டியூர் ஸ்ரீ ராமாநுஜாசார்யரும் மற்றும் அவ்வூர் வாஸிகளும் திருவல்லிக்கேணி போல் எங்களூர் தேசிகன் ஸந்நிதியையும் எடுத்துக்கொண்டு நடத்தவேண்டும் என்று ப்ரார்த்தித்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் தகுந்த ஏற்பாடு செய்வதாக ஸாதித்தாயிற்று. 5-10-54ல் அவ்வூர் வாஸிகளின் ப்ரார்த்தனையின் பேரில் இரவு 9 மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் தந்தப் பல்லக்கில் முக்கியவீதிகளின் வழியாக ஊர்வலமாகப் பெருமாளோடு எழுந்தருளி, 10 மைல் உள்ள அரியக்குடிக்கு எழுந்தருளினர். அங்கு கோயில் மரியாதைகளுடன் வரவேற்றனர். 6-10-54 காலை அபிகமநாராதனம் ஆனதும் கோயில் கார்யஸ்தர்கள் மங்களாஶாஸனத்

திற்கு எழுந்தருளவேண்டுமென்று ஸகலமான கோயில் மரியாதைகளுடன்வந்துப்ரார்த்திக்க, ஸ்ரீ அழகியசிங்கரும் ஸகல பிருதுகளுடன் ஸ்ரீநிவாஸப்பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளி க்ரமமாக ஆழ்வார் ஆசார்யர்கள் ஸந்நிதி பெருமாள், தாயார், ஆண்டாள், ராமன் ஸந்நிதிகளில் மங்களாஶாஸனம் செய்தருளியாயிற்று. பிறகு அவ்வூர் தங்கம் வெள்ளி வாஹனங்களையும் வைகுண்டவாசற்படியையும்வெள்ளித்தேரையும் கடாக்ஷித்துவிட்டு, அவ்வூர் வாஸிகளின் ப்ரார்த்தனையின்பேரில் எல்லாத் தெருக்களிலும் ஊர்வலமாக எழுந்தருளி ஆச்ரமத்திற்கு எழுந்தருளியாயிற்று. அவ்வூர் வாஸிகள் விசேஷமாக ஆராதித்தார்கள். 7-10-54 விஜயதசமியன்று ஸேவை சாற்றுமுறையுடன் ஸ்ரீதேசிகன் திருநக்ஷத்திரம்நன்கு நடந்தது. அன்று ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் (இரண்டாவது தடவை) ஆரம்பிக்கப்பட்டது. அவ்வூர் எம்பெருமான் வெண்ணைத்தாழி திருக்கோலத்துடன் வாசலில் எழுந்தருளும்போது ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளி மங்களாஶாஸனம் செய்தருளியாயிற்று. கோயில் கார்யஸ்தர்களும் வழக்கப்படி எல்லாமரியாதைகளையும் பண்ணிவைத்தார்கள். அன்றபதினம் ஸ்ரீ அண்ணுசாமி அய்யங்கார் விசேஷமாக ஆராதித்தார். அவ்வூர் அஹோபிலமடத்தை எழுந்தருளி கடாக்ஷித்தாயிற்று. அரியக்குடியிலும் தேவக்கோட்டையிலும் திருக்கோட்டியூர் வாஸிகளின் ப்ரார்த்தனையின்படி திருவல்லிக்கேணியிற்போல் தேசிகனுடன் ஆதிவண்ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனையும் ப்ரதிஷ்டை பண்ணி அஹோபிலமடம் ஒன்று எற்படுத்த வேண்டும் என்று திருவுள்ளம் பற்றி, அவ்வூர் வாஸிகள் மிகவும் ஶ்ரமதசையில் இருப்பதால் தேசிகன் ஸந்நிதி நிர்வாஹத்தையும் ஏற்றுக்கொண்டு அவர்கள் ப்ரார்த்தித்தபடி ஆதிவண்ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனை ப்ரதிஷ்டை பண்ணிவைக்க பட்டர் ஸ்ரீ கஸ்தூரிரங்காசார்யரை ஸகலஏற்பாடுகளுடன் அனுப்பியாயிற்று. அன்று ராத்ரி 2 மணிக்குப் புறப்பட்டு 2 மைல் தூரமுள்ள காரைக்குடிக்கு எழுந்தருளியாயிற்று. அவ்வூர் வாஸிகள் எதிர்கொண்டு வரவேற்றனர். இங்கு 6 நாட்கள் எழுந்தருளியிருந்தாயிற்று. ஸ்ரீ என். ஜி. கிருஷ்ண அய்யங்கார் தேவக்கோட்டை ஸ்ரீ பார்த்தஸாரதி அய்யங்கார் முதலியவர்கள் 'திருக்கோட்டியூரில் 8-10-54 ல் ஸ்ரீ அழகியசிங்கர் நியமனம்போல் ப்ரதிஷ்டை மிகவும் நன்றாக நடந்தது' என்று ஸந்நிதியில் விஜ்ஞாபித்தார்கள். சீக்கிரத்திலேயே திருக்கோட்டியூர் எழுந்தருளப்போவதாக ஸாதித்தாயிற்று. 9-10-54 த்வாதசியன்று காரைக்குடி வாஸிகள் விசேஷமாக ஆராதித்தார்கள்.

(தொடரும்)

பிழை திருத்தம்:- முன் 12-8-54 ல் துவரிமானில் முதல் முதல் ஸஞ்சார ஆரம்பத்தில் 'நடத்தியவர் ஸ்ரீநிவாஸ ராகவய்யங்கார்' என்பதைத்திருத்தி குட்டியப்பா என்கிற ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஷஷ்டி உத்ஸவத்தை நடத்தியதாக வாசிக்கவும்.

இவ்வருஷம் திருநாராயணபுரம், திருவல்லிக்கேணி, மதுராந்தகம், காருக்குறிச்சி, திருவநந்தபுரம் ஸ்ரீவில்லிபுத்தூர், திருக்குறுங்குடி, பர்தூர் முதலியவிடங்களில் ஸ்ரீதேசிகனுடையவும், ஸ்ரீமதாதிவண்ஶடகோபயதீந்த்ர மஹாதேசிகனுடையவும் திருநக்ஷத்திர மஹோத்ஸவங்கள் பத்து தினங்கள் வெகு விமரிசையாக பாராயணங்கள், வீதி உத்ஸவங்கள் உபந்யாஸங்களுடன் நடந்து சாற்றுமுறை நடந்ததாக எழுதியுள்ளார்கள். அவகாசமின்மையால் இந்த ஸஞ்சிகையில் வெளியிட முடியவில்லை: அவைகளில் திருநாராயணபுரத்தில் ஸ்ரீஸம்பத்குமாரன் உபயநாச்சிமாருடனும் ஸ்ரீ பாஷ்யகாரருடனும் ஸ்ரீ ஆதிவண்ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் ப்ருந்தாவன மண்டபத்திற்கெழுந்தருளி வழக்கப்படி அருளிப்பாடிட்டு மரியாதைகளாகி கோஷ்டி நடைபெற்றதென்றும், திருவல்லிக்கேணியில் தனித்தனியாக வாஹனங்களில் வீதி உத்ஸவமும் தினந்தோறும் பாகவததீயாராதனமும் நடந்ததென்றும், மதுராந்தகத்தில் வழக்கப்படி மங்களாஶாஸனம் நடந்து, ஸ்ரீ கருணாகரன், ஜநகவல்லித்தாயார், தேசிகன் இவர்களோடு பத்தியுலாவியபின் மடத்திற்கெழுந்தருளியதும் முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய விசேஷாம்ஶங்கள்:

199551

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

ஜய ௵ ஐப்பசி-கார்த்திகை ௴ 1954 ௵ அக்டோபர்-நவம்பர் ௴

[தக்ஷிணாயநம்; சரத் ருது; துலா-விருச்சிக ௴]

17-10-54	ஐப்பசி ௴ 1உ ஞாயிற்றுக்கிழமை	துலாரவி 23-3 ஸங்க்ரமண தர்ப்பணம். சூன்யதிதி.
22-10-54	6உ வெள்ளிக்கிழமை	ஏகாதசி
24-10-54	8உ ஞாயிற்றுக்கிழமை	ராத்ரி நரகசதுர்தசி ஸ்நாநம்.
25-10-54	9உ திங்கட்கிழமை	தீபாவளி.
26-10-54	10உ செவ்வாய்க்கிழமை	● அமாவாஸ்யை.
1-11-54	16உ திங்கட்கிழமை	பூராடம், ஸேனைமுதலியார் திருநக்ஷத்ரம்.
3-11-54	18உ புதன் கிழமை	ச்ரவணம், பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்.
4-11-54	19உ வியாழக்கிழமை	அவிட்டம், பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்.
5-11-54	20உ வெள்ளிக்கிழமை	சதயம், பேயாழ்வார் திருநக்ஷத்ரம்.
7-11-54	22உ ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசி வ்ரதம், (உத்தாந ஏகாதசி)
10-11-54	25உ புதன் கிழமை	பூர்ணிமை.
13-11-54	28உ சனிக்கிழமை	த்ருதியை-சதுர்த்தி திதித்வயம்.
14-11-54	29உ ஞாயிற்றுக்கிழமை	பஞ்சமி திதி.
15-11-54	30உ திங்கட்கிழமை	துலாக்ருஷ்ண ஷஷ்டி திதி.
16-11-54	கார்த்திகை 1உ செவ்வாய்க்கிழமை	விருச்சிகரவி 17-10 விஷ்ணுபதி ஸங்க்ரமண தர்ப்பணம் விருச்சிக க்ருஷ்ண ஸப்தமிதிதி.
21-11-54	6உ ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசி வ்ரதம். த்வாதசி திதி.
22-11-54	7உ திங்கட்கிழமை	த்ரயோதசி திதி.
23-11-54	8உ செவ்வாய்க்கிழமை	அதிதி.
25-11-54	10உ வியாழக்கிழமை	● அமாவாஸ்யை.
29-11-54	14உ திங்கட்கிழமை	பூராடம் 43-வது பட்டம் ஸ்ரீவீர ராகவசடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
30-11-54	15உ செவ்வாய்க்கிழமை	உத்திராடம் 34-வது பட்டம் ஸ்ரீ சடகோப ராமனுஜயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.

Regd. No. M. 4437.

யுனைடெட் இந்தியா பிராவிடெண்ட்
இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

ஹெட் ஆபீஸ். "யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்", சென்னை-1

250, 500, 750, 1000 ரூபாய்கள் வரை
வைத்தியப் பரீக்ஷை இல்லாமலே
பாலிஸிகள் வழங்கப்படுகின்றன.

1000 ரூபாய்க்கு வருஷம் ஒன்றுக்கு போனஸ் ரூ. 9

* பிராவிடெண்ட் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளின்
சரித்திரத்திலேயே தனிச்சிறப்பு வாய்ந்தது *

எங்கும் ஏஜண்டுகள் தேவை

SCANNED

எங்கள் ஏஜென்ஸி கௌரவம் வாய்ந்தது.
லாபகரமானது.
ஆர்வமுடைய இளைஞர்களுக்கு எதிர்காலத்தில் நல்ல
சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

விபரத்திற்கு அடியில் கண்ட விலாஸத்திற்கு எழுதுக:

காரியதரிசி,
யுனைடெட் இந்தியா பிராவிடெண்ட் அஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்
யுனைடெட் இந்தியா லைப் பில்டிங், சென்னை-1

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt at Sri Malolapress, 30. Panagal Street, Tiruvellore.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobila-Mutt Sanskrit College, Madurantakam.